★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2023 ஓகஸ்ட் 10 வியாழக்கிழமை

வரு. 91 இல. 188 | Thursday 10, August, 2023 | 20பக்கங்கள் | 50/-




## நாட்டின் எதிர்காலத்துக்காக சகல கட்சிகளும் ஒன்றிணைந்து

# பொது இணக்கப்பாட்டுடன் 13ஆவது அரசியலமைப்பை முன்னெடுப்போம்



### பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அழைப்பு விடுப்பு

- ➢ பாராளுமன்றம் உடன்படுமானால் மாகாண சபைத் தேர்தல் சட்ட மூலத்தை திருத்தத் தயார்
- ➢ மாகாண சபைகள் செயற்படும் வரை ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஆலோசனைக் குழு
- ➢ காணாமல் போனோர் தொடர்பான அலுவலக பணிகள் ஆரம்பம்
- ➢ வெற்றிகரமான மாகாண சபை கட்டமைப்பினுள் பலமான முறைமை மாற்றத்திற்கான வாய்ப்புள்ளது

**லோரன்ஸ் செல்வநாயகம்மா**

மாகாண சபைகள் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்து புதிய சட்டங்களை நிறைவேற்றிய பின்னர், பாராளுமன்றம் உடன்படுமானால் மாகாண சபை தேர்தல் சட்டம் திருத்தத்துக்கு தயாராக உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது முன்மொழிவுகளையும் எதிர்கால திட்டங்களையும் நேற்று (09) பாராளுமன்றத்தில் முன்வைத்து விசேட உரையாற்றும் போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்ததாவது:

மாவட்ட விகிதாசார முறையின் கீழ் தேர்தலை நடத்தவும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாகாண சபைகளுக்கு போட்டியிடும் உரிமையை வழங்கவும், 25% அல்லது கூடுதலான பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில், கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய அரசாங்கத்தின் அதிகாரப்பட்டியல், மாகாண சபை அதிகாரப்பட்டியல், ஒருங்கிணைந்த பட்டியல் ஆகியவற்றை மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களைச் சமர்ப்பிப்பதற்கு பிரதமர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் ஆதரவும் பெறப்படும்.

அத்தோடு மாகாண சபைகள் செயற்படும் வரை மாகாண ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்கும், ஆலோசனை சபையொன்றை நியமிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

நாட்டில் அரசியல் முறையிலிருந்தோ அல்லது அரசியலிலிருந்தோ அகற்ற முடியாத நிரந்தரமான காரணியாக மாகாண சபை மாறியுள்ளது. பொதுமக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கக் கூடிய வினைத்திறனான மற்றும் வீண்விரயமற்ற, ஊழலற்ற மாகாண சபை கட்டமைப்பொன்றை கட்டியெழுப்புவதனூடாக வலுவான மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்படும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதில் பொலிஸ்

11

---

## பாராளுமன்றத்தின் மூலமே 13ஆவது திருத்தத்துக்கு தீர்வு

### அதுவே நிலைத்து நிற்கும் – மிலிந்த மொரகொட



13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு குறித்து எந்த சந்தேகமும் இல்லை. எனினும், இதற்கு பாராளுமன்றம் மூலமே தீர்வை காணமுடியுமென இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர் விவகாரம் குறித்து இந்திய பிரதமர் மோடியின் கருத்து பற்றி 'டைம்ஸ்

06

---

13ஆவது அரசியலமைப்பின் மூலமாக தீர்வு

## ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்துவது அவசியம்

### சபையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



அரசியலமைப்பின் 13ஆவது அடிப்படையில் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு, வடக்கு கிழக்கில் அனைத்து

06


---

வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள்

## முஸ்லிம் பிரதிநிதிகளுடனும் தனித்து பேச்சு நடத்த தயார்

### ஹக்கீமின் கோரிக்கைக்கு ஜனாதிபதி பதில்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்களுடனும் தனியான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாரென்றும் வடக்கு, கிழக்கு மட்டுமன்றி அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளையும்

06

---

நாட்டில் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பதிவான

## அண்மைய உயிரிழப்புகளுக்கு ஆபத்தான ஒவ்வாமையே காரணம்

### நிபுணர் குழு அறிக்கை வெளியானது



நாட்டின் அரச வைத்தியசாலைகளில் அண்மையில் இடம்பெற்ற ஆறு மரணங்களில் ஐந்து மரணங்கள், அனாபிலாக்ஸி என்ற உயிராபத்தை ஏற்படுத்தும் ஒவ்வாமையினால் ஏற்பட்டதாக நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

மருந்துகள் ஒவ்வாமையினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட

06

---

மீனவர்களின் பெருமையை பாதுகாத்து

## நவீன தொழினுட்பத்துடன் மீன்பிடி தொழிலை முன்னேற்ற நடவடிக்கை



மீனவர்களின் பெருமையைப் பாதுகாத்து நவீன தொழினுட்பத்துடன் மீன்பிடித் தொழிலை முன்னேற்றுவதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (09) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போதைய பொருளாதார சவால்களை வெற்றி கொண்டு நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்திற்கு

06

---

## மாகாணசபை தேர்தலை நடத்துவதில் எந்த ஆட்சேபனையும் கிடையாது

### சஜித் பிரேமதாசவின் கேள்விக்கு ஜனாதிபதி ரணில் பதில்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



தேர்தல் தொடர்பான அரசியலமைப்பு திருத்தத்திற்குப் பின்னர் மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர்பில், எமக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

06

---

CEB க்கு எழுதிய கடிதத்துக்கு இதுவரை பதிலில்லை

## பொய்ப் பிரசாரத்தில் ஈடுபடும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை



மின் கட்டணம் செலுத்த வேண்டுமென பொய் பிரசாரம் செய்யும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மின்சார சபைக்கு தாம் எழுதிய கடிதத்துக்கு இதுவரை பதில் வரவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

06

---

## கிழக்கு அபிவிருத்தி குறித்து சம்பந்தனுடன் செந்தில் பேச்சு

### மரியாதை நிமித்தம் கலந்துரையாடினார்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மரியாதை நிமித்தம் சந்தித்து பேச்சு நடத்தினார்.கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் குறித்தும் இக்கலந்துரையாடலில் இவர்கள் கவனம் செலுத்தினர்.

---



03

## டொலர் பெறுமதியில் நேற்று திடீர் வீழ்ச்சி

விற்பனை விலை ரூ.327.50 ஆனது

---



03

## ரோசியின் உத்தியோகபூர்வ இல்ல மின்சாரம் துண்டிப்பு

04 மாதங்களாக 06 இலட்சம் நிலுவை

---

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான

## SLPP யின் நிலைப்பாடு அடுத்த சர்வகட்சி மாநாட்டில் அறிவிப்பு

### 13 பிளஸ் என்ற நிலைப்பாட்டிலேயே மஹிந்த செயற்படுகிறார்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அதிகாரப் பகிர்வு விடயத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் என்ற நிலைப்பாட்டிலேயே செயற்படுகின்றார். பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு அடுத்த சர்வகட்சி மாநாட்டின் போது முன்வைக்கப்படுமென ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில்

06

---

## தரமற்ற கொத்தமல்லிக்கு இரசாயனம் பூசி விற்க முயற்சி

### கல்முனையில் 85,000 கிலோ மல்லி சிக்கியது



தரமற்ற கொத்தமல்லிக்கு இரசாயன கலவையைப் பூசி மீண்டும் விற்பனைக்கு தயார் படுத்தும் மத்திய நிலையமொன்றிலிருந்து தரக்குறைவான 85,000 கிலோ கொத்தமல்லி மூடைகளை பொலிஸ் விசேட அதிரடி பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். கொத்தமல்லி மூடைகளுடன் இரசாயன திரவியமும் பொலிஸ்

06

---

## கொள்கலன் லொறியொன்று ரயிலுடன் மோதி விபத்து

### மீரிகமவில் சம்பவம், சேவைகளும் பாதிப்பு



மீரிகம, வில்வத்த ரயில் கடவையில் கொள்கலன் லொறியொன்று ரயிலுடன் நேற்றுக் காலை மோதி விபத்துக்குள்ளானது.

06

---

## அநுராதபுரத்தில் கோர விபத்து

### இளம் தம்பதி பலி

அநுராதபுரம் இராஜாங்கனை பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் தம்பதியினர் பலியாகினர். இச்சம்பவம் நேற்று (09) அதிகாலை 02 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இளம் தம்பதியினர் பயணித்த ஹைஹேஸ் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியினருகே இருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது வாகனத்தைச் செலுத்திச்

06

# சுவிஸ் வர்த்தகர்கள் பூட்டானில் முதலீடு 30 பேர் வருகை தந்து ஒப்பந்தம் கைச்சாத்து

சுவிட்சர்லாந்து வர்த்தக சபை பூட்டான் வர்த்தக சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. பூட்டானின் சுகாதார, சுற்றுலா, விவசாய, பாதை அபிவிருத்தி போன்ற துறைகளில் தொழில்நுட்ப மேம்பாடுடன் கூடிய முன்னேற்றங்களை ஏற்படுத்தும் வகையில் பூட்டானில் முதலீடு செய்வதற்கு சுவிஸ் வர்த்தக முதலீட்டாளர் குழுவொன்றின் வருகையையடுத்தே ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின.

இரண்டு நாள் விஜயத்தின் பேரில் 16 சுவிஸ் நிறுவனங்களைச் சேர்ந்த 30 வர்த்தக, தொழில்துறை பிரமுகர்கள் இரண்டு நாள் விஜயத்தின் பேரில் திம்பு வந்திருந்தனர். இப்பேச்சுவார்த்தைகளின்போது குழந்தை பேற்றின் பின்னர் பல பூட்டானிய தாய்மார் அதிக இரத்தப்பெருக்கினால் மரணமடைவதைத் தடுக்கும் மருந்தை பெற்றுத் தருவதற்கு உடன்பாடு எட்டப்படடது. வருடமொன்றுக்கு சுமார் 70 ஆயிரம் தாய்மார் பிரசவத்தின் பின்னரான உதிரப் பெருக்கினால் மரணமடைகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவிஸ் வர்த்தகப் பிரதிநிதி மரிக்கா பெஷர், பூட்டான் அடிப்படைக் கட்டமைப்பு அபிவிருத்தியில் முதலீடு செய்ய விரும்புவதாகவும் நிபுணத்துவம் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

சுவிஸ் பிரதிநிதிகள் தமது முதலீட்டுத் திட்டங்களை முன்வைத்ததாகவும், பூட்டானிய பிரதமரும் அமைச்சர்களும் இந் நிறுவனங்கள் முதலீடு செய்யுமானால் அது நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு வலுவூட்டுவதாக இருக்குமென்றும் கூறியிருப்பதாகவும் 'பூட்டான் லைவ்' செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

# தூனிஷியாவில் சீன சுற்றுலா கண்காட்சி; திபெத் மனித உரிமை மீறல்களை மறைக்கும் முயற்சியென எதிர்ப்பு

திபெத்தின் ஒரு வகுதியாகக் கருதப்படும் கிங்காய் மாகாணத்தின் இயற்கை வளங்களைச் சித்தரிக்கும் சுற்றுலா கண்காட்சி ஒன்றை தூனிஷியாவில் சீனா சமீபத்தில் நடத்தியது. திபெத்தின் குளிர் சீதோஷணம், இயற்கை வளம், நீர்வளம் என்பனவற்றைக் கொண்டதாக கிங்காய் விளங்குவதால்தான், திபெத்தில் சீனா மேற்கொண்டு வரும் மோசமான மனித உரிமை மீறல்களை மூடிமறைக்கும் ஒரு உத்தியாக இக்கண்காட்சியை ஏற்பாடு செய்திருப்பதாக திபெத்திய செயற்பாட்டாளர்கள் இக்கண்காட்சி தொடர்பாக விளக்கம் அளித்துள்ளார்கள்.

தூனீஷியாவில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்தக் கண்காட்சியில் 150க்கும் மேற்பட்ட புகைப்படங்கள், 50 வகையான நூல்கள் மற்றும் விவரண சித்திரங்கள் இடம் பெற்றிருந்தன. சீனா என்றால் ஷங்காய், பீஜிங் போன்ற பெரு நகரங்களையே அறிந்து வைத்திருக்கும் பார்வையாளர்களுக்கு வனப்பு மிக்க மலை வாசஸ்தலமும் உண்டு என்பது வியப்பை ஏற்படுத்தியிருக்கும் என ஏற்பாட்டாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்திருக்கும் அதே சமயம், திபெத்தின் ஒரு பகுதியை கிங்காய் மாகாணமாகக் காட்டுவதன் மூலம் திபெத் பிரச்சினைகளையும், திபெத்தில் சீன கம்பூனிஸ்ட் கட்சி கடைபிடிக்கும் அடக்குமுறைகளையும் மற்றும் மனித உரிமை மீறல்களையும் திரைபோட்டு சீனா வெளியுலகுக்கு மறைக்க முயல்கிறது என்று எதிர்ப்பாளர்கள் சுட்;டிக்காட்டுகின்றனர். சீன அரசு தன்னைப் பற்றிய பெருமிதங்களை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் ஒரு உத்தியோக கண்காட்சிகளை நடத்தி வருவதாகவும், இரண்டாயிரமாம் ஆண்டில் 1200 அருங்காட்சியகங்களை நடத்தி வந்த சீனா தற்போது அதனிலும் ஐந்து மடங்கு அதிக அருங்காட்சியகங்களை நாடெங்கும் நடத்தி வருவதாகவும் அதன் இன்னொரு வரவமே தூனிஷிய சுற்றுலா கண்காட்சியாகும் என விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

# துவாலு தீவின் குடிநீர் திட்டத்துக்கு இந்தியா ஏழு இலட்சம் டொலர் உதவி

பசுபிக் தீவுகளில் ஒன்றான துவாலுவின் ஒரே அரசு பாடசாலையான மொட்டு/போவுவா இரண்டாம் நிலை பாடசாலைக்கு குடிநீர் வழங்கும் ஐ.நா. அபிவிருத்தி நிதியத்தின் திட்டத்துக்கு இந்தியா ஏழு இலட்சம் அமெரிக்க டொலர்களை உதவி நிதியாக வழங்கியுள்ளது.

இப் பாடசாலையின் மாணவர், ஆசிரியர் மற்றும் ஏனையோருக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கான 760 மெட்ரிக் கன அடி நீரை சேமிக்கும் தொட்டியை அமைத்து நீர் வழங்கும் ஏற்பாட்டை செய்வதற்காகவே இந்நிதி வழங்கப்பட்டிருப்பதாக ஐ.நா.வுக்கான இந்திய நிரந்தர அலுவலகம் தெரிவித்துள்ளது.

துவாலு அரசு இந்திய அரசுக்கு விடுத்த வேண்டுகோளையடுத்தே இந் நிதி ஐ.நா. அபிவிருத்தி நிதியத்துக்கு வழங்கப்பட்டது. இந்திய பசுபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பின் பேரில் பிரதமர் நரேந்திர மோடி 12 அம்ச அபிவிருத்தித் திட்டத்தை அறிவித்துள்ளார். முழு உலகமும் ஒரே குடும்பம் என்ற இந்திய கொள்கையின் பிரகாரம் பசுபிக் தீவு நாடுகளில் தொடர்ச்சியான அபிவிருத்தி, திறன் அபிவிருத்தி, சுகாதார மற்றும் சுகவாழ்வு, கட்டமைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்ற பிரிவுகளில் உதவிகள் வழங்க இந்திய கடமைப்பட்டுள்ளதாக ஐ.நா. நிரந்தர பிரதிநிதி ருச்சிரா கம்போஜ் தெரிவித்துள்ளார்.




கண்டி பெரஹராவை முன்னிட்டு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்திற்கு கண்டி தமிழ் வர்த்தகர் சங்கம் 5 இலட்சம் ரூபா நன்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று (09) ஆலய மண்டபத்தில் நடைபெற்றபோது, சங்கத்தின் தலைவர் ப.குமரதாஸ் மற்றும் உறுப்பினர்கள் ஆலய பஸ்நாயக்க நிலமே துமிந்த பண்டார உடுராவணத்திடம் நன்கொடை வழங்குவதை காணலாம்.





மட்டக்களப்பில் மாங்கேணியில் மாபெரும் சமாதான பெருவிழா பெரேயா ஜெபவீடு வளாக திறந்தவெளி அரங்கில் அண்மையில் தேவ செய்தியாளர் பிரபல சுவிசேஷகர் சகோ. ஜெயம் சாரங்கபாணி அவர்களால் நடத்தப்பட்டது.அதனையடுத்து மட்டு.ஊடகமையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

படங்கள் தேவதாஸ் சவரிமுத்து

## 2015 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க தேசிய ஔடத நெறிப்படுத்தல் அதிகார சபை சட்டத்தின் 131 வது பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் உத்தரவிற்கு இணங்க இலங்கை மக்கள் சகலரிடமும் மன்னிப்பு கோருகின்றோம்

கேகாலை கண்டி வீதி, இல. 447/2 இல் அமைந்துள்ள Cargills FoodCity Pharmacy இல் வத்தேகெதர முதியன்சலாகே துல்மினி திவங்கா மதுஷானி பிரேமரத்ன மற்றும் லங்கா பரண கெதர சுபுன் திசாக்ய வெலியங்க ஆகியோர் முறையே உதவி மருந்தாளராகவும் முகாமையாளராகவும் உள்ளனர்.

அந்த மருந்தகத்தில் உதவி மருந்தாளராக மருத்துவரின் மருந்துச் சீட்டு வழங்காத நபர் ஒருவருக்கு, மருத்துவரின் மருந்துச் சீட்டு இருந்தால் மட்டுமே வழங்கப்பட வேண்டிய Silgara 50mg (Sildenefil Citrate 50mg) வகையிலான மருந்தை சில்லறை விற்பனை செய்தமை மற்றும் முகாமையாளராக ஆகக் குறைந்தது தகைமை கொண்ட மருந்தியலாளர் ஒருவரையேனும் சேவையில் அமர்த்த வேண்டியிருந்தும் மருந்தாளரின் நேரடி கண்காணிப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட பயிலுனர் மருந்தியலாளர் ஒருவரால் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும், மருந்தியலாளர் அல்லாத பெண் விற்பனையாளர் ஒருவரால் 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேசிய ஔடத நெறிப்படுத்தல் அதிகார சபை சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் Silgara 50mg (Sildenefil Citrate 50mg) வகையிலான மருந்துகள் சில்லறை விற்பனை செய்யப்பட்டமை என இரு வெவ்வேறு குற்றங்களுக்காக

கேகாலை நீதிவான் நீதிமன்றத்தில் 30.06.2023 அன்று தொடுக்கப்பட்ட இலக்கம் 22186/D/23 வழக்கில் நாங்கள் குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டு

முறையே ரூ.15,000.00 அபராதமாக மொத்தம் ரூ. 30,000.00 செலுத்துமாறு கௌரவ நீதிவான் உத்தரவிட்டார் என்பதை இலங்கை பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறான குற்றங்கள் எங்களால் மீண்டும் செய்யப்படமாட்டாது என்பதையும், செய்த குற்றத்திற்காக இலங்கை மக்கள் சகலரிடமும் மன்னிப்புக் கோருகிறோம் என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வத்தேகெதர முதியன்சலாகே துல்மினி திவங்கா மதுஷானி பிரேமரத்ன
லங்கா பரண கெதர சுபுன் திசாக்ய வெலியங்க



கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகள் தேவஸ்தானத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்றைய தினம் இடம்பெற்றபோது சுவாமிகள் தங்க இரதத்தில் வீதி வலம் வருவதை படத்தில் காணலாம்.

படம் : வடகொழும்பு தினகரன் நிருபர்

# தாய்வானிய வான், கடற்பரப்பில் சீன ஊடுருவல்

கடந்த நான்காம் திகதி காலை முதல் ஐந்தாம் திகதி காலைவரை தாய்வானுக்கு சொந்தமான கடல் மற்றும் வான் பரப்பில் ஆறு சீன ஆளில்லா ரோந்து விமானங்களும் ஒன்பது கடற்படை படகுகளும் அத்துமீறி சஞ்சரித்ததாக தாய்வான் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அத்துமீறல்கள் தொடர்பாக யுத்த விமான ரோந்து தளத்துக்கும் கடற்படை ரோந்து பிரிவுக்கும் உஷார்நிலை அறிவித்தல் விடுக்கப்பட்டதாகவும் ஏவுகணை தளங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் கூறியுள்ளது.

2020ஆம் ஆண்டு முதல் சீன இராணுவ விமானங்கள் தாய்வானிய வான் பரப்புக்குள் ஊடுருவுவது தினசரி நடவடிக்கையாகி விட்டது என்றும், தாய்வானிய தலைவர்கள் வெளிநாடு செல்லும் அல்லது முக்கியமான அயல்நாட்டு தலைவர்கள் தாய்வானுக்கு வருகை தரும் தருணங்களில் இத்தகைய சீன அத்துமீறல்கள் உச்சத்தை அடைவது வழமை என்றும் அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## ரூபவாஹினியூடாக விசேட ஒளிபரப்புத் திட்டம்

# GCE O/L மற்றும் A/L கற்று வெளியேறிய மாணவருக்கு தகவல் தொழினுட்ப அறிவு

**தெஹிவளை,கல்கிஸ்ச விசேட நிருபர்**

பாடசாலைகளில் உயர்தரம் மற்றும் சாதாரண தரக் கல்வியைக் கற்று விலகிய மாணவர்களுக்கும் மற்றும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தகவல் தொழில் நுட்ப (கணினி) அறிவைப் புகட்டுவதற்கு விசேட ஒளிபரப்பு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமூடாக இந்நிகழ்ச்சி த் திட்டத்தை தயாரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று (09) அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் ஊடகத் துறை அமைச்சில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு விஞ்ஞான தொழில் நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக்க ஹேரத், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் கலாநிதி பிரசாத் சமரசிங்க, மொரட்டுவைப் பலக்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி விசாக்கா நாணயக்கார மற்றும் Freelancer நிறுவனம், ICTA , Public Utilities Comission (PRO +) பொது பயண்பாடு மானிட நிறுவனம், என். வி.கியு போன்ற நிறுவனங்களது அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



படம் — கயான் புஷ்பிக்க

இக்கலந்துரையாடலில் பாடசாலைக் கல்வியை விட்டு விலகிய இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் நன்மையடையவுள்ளனர். மின்னியல் பொருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், சூரிய சக்தித் திட்டத்தை பொருத்தும் துறையினரை இணைத்துக் கொள்ள இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, இலங்கையில் இத்துறை சார்ந்த தொழினுட்ப ஊழியர்கள் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளனர்.

இவர்களை இத்துறையில் இணைத்து நவீன தகவல் தொழில் நுட்பமூடாக தமது தொழிலை விருத்தி செய்து இவர்களுக்கு என். வி.கியு 03 தரச் சான்றிதழ் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்துறையில் கடந்த காலங்களில் இணைந்தோர் தொழில்களைப் பெற்றுள்ளனர். வேறு சிலர் வெளிநாடுகளுக்கும் சென்று தொழில் செய்வதாகவும் அதிகாரிகளினால் அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டது .

இந் நிகழ்ச்சிகள் ஆகஸ்ட் 12 ஆம் திகதி பி.பகல் 04.30க்கும் Freelancer நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டம் ஆகஸ்ட் 13ஆம் திகதி பி.பகல் 0430க்கும் ஒளிபரப்பாகும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ருபாவாஹினிக்

06

## பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட யோசனையை

# எந்த ஒரு நீதிமன்றத்தினாலும் சவாலுக்குட்படுத்த முடியாது

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பு செய்யும் யோசனையை, எந்தவொரு நீதிமன்றத்திலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற நடைமுறையைப் பின்பற்றி நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு எதிராக, எந்தவொரு வகையிலும் உத்தரவு அல்லது தீர்ப்பை வழங்குவதற்கு இலங்கை அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்டுள்ள எந்தவொரு நீதிமன்றத்திற்கும் அதிகாரம் கிடையாது என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவிப்பிலே, அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது,

பாராளுமன்ற நடைமுறையைப் பின்பற்றி நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு எதிராக, எந்தவொரு வகையிலும் உத்தரவு அல்லது தீர்ப்பை வழங்குவதற்கு இலங்கை அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்டுள்ள எந்தவொரு நீதிமன்றத்திற்கும் அதிகாரம் கிடையாது. அவ்வாறான எந்தவொரு உத்தரவு அல்லது நீதிமன்ற தீர்ப்பும் அரசியலமைப்பு மீறலாகவே அமையும்.

அரசியலமைப்பின் 148 ஆவது பிரிவிற்கு அமைய, அரச நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாடு பாராளுமன்றத்தின் வசம் காணப்படுகின்றது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டமானது அமைச்சரவையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு, பாராளுமன்ற அரச நிதி தொடர்பான செயற்குழுவினால்

06

# ரோசியின் உத்தியோகபூர்வ இல்ல மின்சாரம் துண்டிப்பு

## 04 மாதங்களாக 06 இலட்சம் ரூபா நிலுவை

நான்கு மாதங்களாக மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாததால், கொழும்பு முன்னாள் மேயர் ரோசி சேனாநாயக்கவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கான மின்சாரம் (08) துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் இதுவரையில் 06 இலட்சம் ரூபா மின்சாரக் கட்டணம் செலுத்தத் தவறியுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி நேற்றுமுன்தினம் காலை, மேயர் அலுவலகத்துக்கு சென்ற மின்சார சபை அதிகாரிகள் குழு மின்சாரத்தை துண்டித்தது. அவர் பதவியில் இல்லாதி திருந்தும், மேயர் இல்லத்தில் தங்கியிருந்ததல் இக்கட்டணத்தை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நேற்றுமுன்தினம் (08) காலை தெஹிவளை – கல்கிஸ்ஸ மாநகர சபைக்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. ஜூன் மாதம் தொடர்பான கட்டணப் பட்டியல் உரிய நேரத்தில் கிடைக்காததால், இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபை மின்னஞ்சல்கள் மூலம் கட்டண பட்டியல்களை அனுப்புவதாகவும், தவறான மின்னஞ்சல் முகவரியினால் உரிய நேரத்தில் பில் கிடைக்கவில்லையெனவும்

06

# டொலர் பெறுமதியில் நேற்று திடீர் வீழ்ச்சி

## விற்பனை விலை ரூ.327.50 ஆனது



நான்கு நாட்களாக தொடர்ந்து அதிகரித்து வந்த அமெரிக்க டொலரின் பெறுமதி நேற்று (09) திடீரென வீழ்ச்சியடைந்து, ரூபாவின் பெறுமதியில் சிறு அதிகரிப்பு ஏற்பட்டது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நேற்றைய (09) நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 327.52 ரூபாவாகவும், கொள்வனவு விலை 314.94 ரூபாவாகவும் பதிவாகியது.

கனேடிய டொலரின் விற்பனை விலை 245.47 ரூபாவாகவும், கொள்வனவு விலை 232.79 ரூபாவாகவும் பதிவாகியது.

யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 360.57 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 343.39 ரூபாவாகவும் பதிவாகியது. ஸ்டெர்லிங் பவுண்டின் விற்பனை பெறுமதி 418.91 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 399.98 ரூபாவாகவும் பதிவாகியது.


දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

# வரிசெலுத்துநர்களுக்கான அறிவித்தல்

செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வரிக் கூற்று (SET) கோப்பிடுதலுக்கு

**“இ – சேவைகள்” செயற்பாட்டிலுள்ளது**

**2023/2024 ஆம் வரி மதிப்பீட்டாண்டு**

தனிநபர்கள், பங்குடமைகள், கம்பனிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அனைத்து ஆட்களும், கூற்றினை கோப்பிடவும்

**2023 ஆகஸ்ட் 15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ**

- **இ – சேவைகள் ஊடாக**
  மேலதிக தகவல்களுக்கு www.ird.gov.lk → இ –சேவைக்கான அணுகுதல்
  அல்லது
- **நேரடியாக**
  உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை காரியாலயத்திலுள்ள மத்திய ஆவணப்படுத்துகை அலகில் (CDMU) அல்லது எந்தவொரு நகர / பிராந்திய அலுவலகத்திலும்

**பின்வரும் வரிக் கொடுப்பனவுகளை 2023, ஆகஸ்ட் 15 அன்று அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளவும்**

| வரி வகை | | வரி வகை குறியீடு | கொடுப்பனவு காலப்பகுதி குறியீடு |
|---|---|---|---|
| 1வது காலாண்டு தவணை | கூட்டிணைந்த வருமான வரி (CIT) | 02 | 23241 |
| | தனிநபர் வருமான வரி (IIT) | 05 | 23241 |
| | பங்குடமை வரி (PIT) | 09 | 23241 |
| ஜூலை மாதத்தில் நிறுத்தி வைக்கப்பட்டவை | வட்டி மீதான முற்பண வருமான வரி (AIT)/நிறுத்தி வைத்தல் வரி (WHT) | 43 | 23070 |
| | கட்டணம் மற்றும் ஏனையவற்றின் மீதான முற்பண வருமான வரி (AIT) / நிறுத்தி வைத்தல் வரி (WHT) | 44 | 23070 |
| | முற்பண தனிநபர் வருமான வரி (APIT) | 03 | 23070 |
| கொடுப்பனவு | | S | |

**கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டாம்**

- செலுத்த வேண்டிய வரிகளை இணையவழி வரிக் கொடுப்பனவு தளத்தினூடாக (OTPP) செலுத்தவும்
  மேலதிக விபரங்களுக்கு - 2022.05.17 ஆம் திகதிய PN/PMT/2022-01 ஆம் இலக்க அறிவித்தல்களைப் பார்க்க www.ird.gov.lk இற்கு செல்லவும்.
  http://www.ird.gov.lk/en/Lists/Latest%20News%20%20Notices/Attachments/423/PN_PMT_2022-01_17052022_E.pdf
- இதற்கு மேலதிகமாக, CIT, IIT, PIT & APIT கொடுப்பனவுகள் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் மேற்கொள்ளப்படலாம்
- AIT & WHT க்கான கொடுப்பனவுகள் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் மேற்கொள்ளப்படலாம்
  உங்கள் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை (TIN) காசோலையின் பின்பக்கத்தில் எழுதவும். மேலும் கொடுப்பனவு நறுக்குகளின் பின்பகுதியில் மேலதிக தகவல்கள் காணப்படுகின்றன.
- கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்காத சந்தர்ப்பத்தில், வங்கியில் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது DIN இலக்கம் பெற்றுக்கொள்ளுதல் (முக்கியமாக மக்கள் வங்கிக்கு) வேண்டும்.
  - வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு பிரிவில் (தொலைபேசி இல.:0112134281,2134282,2134283,2134284) அல்லது
  - இ-சேவை ஊடாக https://eservices.ird.gov.lk/Payment/PayingInSlip/Index

வருமான வரிக் கொடுப்பனவை செலுத்தாது விடுதல் அல்லது பிந்திய கொடுப்பனவின் மீதான தண்டங்கள் மற்றும் வட்டி மற்றும் கூற்றினை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கத் தவறுகையில் உள்ள தண்டங்கள் தள்ளுபடி செய்யவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது என்பதை அறிந்துகொள்ளவும்

இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை அறிந்துகொள்ள கிரமமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைத்தளத்தைப் பார்வையிடவும்

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர்**

IRD 1944
வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக
வலைத்தளம் : www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 25ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து

சாகாமலே இருக்க மருந்து கிடையாது. அப்படி இருக்கும்போது உயிரைவிட நிலையான மானத்தைப் போற்றாமல், வாழ்க்கை மேம்பாட்டுக்காக ஒருவர், தமது பெருமையைக் குறைத்துக் கொள்வது இழிவான செயலாகும்.

# உஷ்ண காலநிலையில் மக்கள் அவதானம் பேணுவது அவசியம்

தற்போது நாட்டில் அதிகரித்த வெப்பகால நிலை நிலவுகின்றது. அதன் தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் எல்லா மட்டத்தினரும் முகம்கொடுத்த வண்ணமுள்ளனர். அத்தாக்கங்கள் அந்தந்த மட்டங்களுக்கு ஏற்ப கூடிக் குறைந்ததாகக் காணப்படுகின்றன.

இந்நிலையில் இந்த அதிகரித்த வெப்பக் காலநிலை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள மருத்துவ நிபுணர்கள் மக்களுக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளனர். குறிப்பாக தற்போதைய அதிகரித்த உஷ்ணக் காலப்பகுதியில் ஒவ்வொருவரும் உடலில் அதிக நீரிழப்புக்கு முகம்கொடுக்க நேரிடலாம். அந் நீரிழப்பை ஈடுசெய்யும் வகையில் தினமும் போதியளவு நீரைப் பருகுவதில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். இது காலத்திற்கு அவசியமான அறிவுரையும் வேண்டுகோளும் ஆகும்.

இதேவேளை, தற்போதைய அதிகரித்த வெப்பநிலை குறித்து ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் விஷேட அறிக்கையொன்றை விடுத்துள்ளது. இந்த வெப்பக் காலநிலையினால் சிறுவர்கள் எதிர்கொள்ளக்கூடிய பல்வேறு அசௌகரியங்களும் நெருக்கடிகளும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

உலகின் ஏனைய பிராந்தியங்களிலுள்ள சிறுவர்களை விடவும் இலங்கை உள்ளிட்ட தெற்காசியப் பிராந்திய நாடுகளின் சிறுவர்கள் தற்போதைய கடும் வெப்பநிலைக்கு முகம்கொடுத்திருக்கின்றனர். இப்பிராந்தியத்திலுள்ள 18 வயதுக்கு கீழ்ப்பட்ட 76 சதவீதமான சிறுவர்கள் அதாவது 460 மில்லியன் சிறுவர்கள் வருடமொன்றுகக 83 நாட்களோ அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களோ 35 பாகை செல்சியஸுக்கு மேற்பட்ட வெப்பநிலையில் வாழும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர். அதாவது நான்கு சிறுவர்களில் மூவர் இந்த கடும் வெப்பநிலை சூழலில் வாழ்வதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை உட்பட இப்பிராந்திய நாடுகளைச் சேர்ந்த சிறுவர்கள் இக்கடும் வெப்பநிலையின் அசௌகரியங்களுக்கும் தாக்கங்களுக்கும் முகம்கொடுத்துள்ளனர். 'உலகில் தெற்காசிய பிராந்திய நாடுகள் அதிக வெப்பநிலை கொண்ட நாடுகளாக இல்லாவிட்டாலும் இப்பிராந்தியத்தில் அதிக வெப்பகாலநிலை நிலவுவதால் மில்லியன் கணக்கான சிறுவர்கள் உயிராபத்து அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக யுனிசெப் நிறுவனத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் சஞ்ஜய் விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பொதுவாக அதிகரித்த வெப்பநிலை நிலவும் காலப்பகுதியில் சிறு குழந்தைகள், போஷாக்கு குறைந்த சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் போன்றோர் விஷேட கவனத்திற்குரியவர்களாவர். ஏனெனில் அதிகரித்த உஷ்ணத்தினதால் பாதிக்கப்படக்கூடிய அச்சுறுத்தல்களைக் கொண்டவர்களாக இவர்கள் விளங்குகின்றனர். அதற்காக அதிகரித்த வெப்பக் காலநிலை ஏனையவர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தாது எனக் கூற முடியாது.

ஆனாலும் அதிகரித்த வெப்பகாலநிலை குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் பலவிதமான அசௌகரியங்களை ஏற்படுத்தவே செய்யும். ஏனெனில் வெப்பநிலை மாற்றங்களுக்கு ஏற்ப சிறுவர்களால் விரைவாக இசைவாக்கம் அடைய முடியாது. அதேநேரம் அவர்களால் தமது உடலில் இருந்து அதிகப்படியான உஷ்ணத்தை துரிதமாக அகற்றவும் முடியாது.

இதன் விளைவாக உடலில் கடும் உஷ்ணம், நீரிழப்பு, மயக்கமடைத்தல், இதயத் துடிப்பு அதிகரித்தல், தசைப்பிடிப்புகள், கடும் தலைவலி, உடலுறுப்புகளில் செயலிழப்பு, கோமா மயக்கநிலை போன்றவாறான உபாதைகள் திடீரென ஏற்படலாம். அத்தோடு நரம்புகளில் செயலிழப்புக்கும் இதய உபாதைக்கும் கூட அது வித்திடலாம்.

அதனால்தான் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா, 'தற்போதைய அதிகரித்த வெப்ப காலநிலையால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்பு பெற்றுக்கொள்வதற்காக சிறுவர்களுக்கு இயற்கையான நீராகாரங்களை அதிகம் வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அதேநேரம், உயர் இரத்த அழுத்தம், வலிப்பு, குறைப்பிரசவம், சிசு இறந்து பிறத்தல் போன்றவாறான பாதிப்புகளை அதிக உஷ்ண காலத்தில் கர்ப்பிணிப் பெண்கள் எதிர்கொள்ளலாம். அவ்வாறான பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதிலும் கூடுதல் கவனம் செலுத்தவும் தவறலாகாது.

ஆகவே வெப்பகாலநிலையின் போது உடலில் ஏற்படக்கூடிய நீரிழப்பை ஈடு செய்யக்கூடிய வகையில் செயற்பட வேண்டும். அதன் மூலம் உடலில் ஏற்படக்கூடிய பல உபாதைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். அதனால் சிறுவர், கர்ப்பிணிகள் உட்பட எல்லா வயது மட்டத்தினரும் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதன் நிமித்தம் போதிளவு நீரை தினமும் பருகத் தவறக்கூடாது. அது சிரமமான காரியமும் அல்ல. அதன் ஊடாக உடல். உள ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# நாளைமறுதினம் சர்வதேச இளைஞர் தின நிகழ்வுகள்

லிஸ்பன் நகரில்1998 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 08 ஆம் திகதி முதல் 12ம் திகதி வரை நடைபெற்ற உலக நாடுகளின் இளைஞர் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் குழு மாநாட்டில் சர்வதேச ரீதியில் இளைஞர்களின் பிரச்சினைகளையும், இளைஞர்களின் செயல்பாடுகளையும் கவனத்திற் கொள்ளும் வகையில் இளைஞர்களுக்கான சர்வதேச தினம் ஒன்றை பிரகடனப்படுத்த வேண்டும் என சிபாரிசு செய்யப்பட்டது.

இதன்படி 1999 டிசம்பர் 17 ஆம் தேதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் 54/120/ (resolution 54/120) இலக்க பிரேரணைப்படி சர்வதேச இளைஞர் தினம் ஓகஸ்ட் 12 ஆம் திகதி கொண்டாடப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய 2000 ஆம் ஆண்டு முதல் சர்வதேச இளைஞர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபை 15 வயது முதல் 24 வயதுக்குட்பட்டவர்களை இளைஞர்கள் என வரையறுத்துள்ளது.

உலக சமூகத்தில் இளைஞர்களின் முயற்சிகளை அங்கீகரிப்பதும், தத்தமது சமூகங்களுக்கு சாதகமான பங்களிப்பை வழங்கும் வகையில் அவர்களது செயற்பாடுகளை ஊக்குவிப்பதும் சர்வதேச இளைஞர் தினத்தை அனுஷ்டிப்பதன் நோக்கமாகும்.







அத்துடன் கல்வி, அரசியலில் பங்கு, வேலைவாய்ப்பு போன்றவற்றை இளைஞர்களுக்கு ஒவ்வொரு அரசும் சரியான விதத்தில் ஏற்படுத்தித் தர வேண்டும். சுமார் 20 சதவீதமான இளைஞர்கள் ஒவ்வொரு வருடமும் மனஉளைச்சலால் பாதிக்கப்படுகின்றனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இளைஞர்களை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி சிறந்த எதிர்காலத்திற்கு வழிகாட்டுவதும் அத்துடன் இளைஞர்கள், பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும். திறமைகளை வளர்த்துக்கொண்டு, நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவ வேண்டும்.

உலகளவில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளர்களாக இளைஞர்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க ஆண்டுதோறும் ஓகஸ்ட் 12 இல் சர்வதேச இளைஞர் தினம் கொண்டாடப்படுகிறது.

2023 ஆம் ஆண்டில், சர்வதேச இளைஞர் தினத்திற்கான கருப்பொருள் 'இளைஞருக்கான பசுமைத் திறன்கள்: நிலையான உலகை நோக்கி' (Green Skills for Youth: Towards a Sustainable World) என்பதாகும்.

**முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் இஸட்.எம்.ஸாஜித்**

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
*(மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

# சக்தி மேலாண்மை சான்றிதழ் பெறும் முதலாவது நிறுவனமாக அன்செல்டெக்ஸ்டைல் லங்கா

இலங்கையில் உள்ள தனது உற்பத்திஆலைகளில் ஒன்றான அன்செல் டெக்ஸ்டைல்லங்கா, ISO சான்றிதழைப் பெறும் தனது முதல் நிறுவனத்தை பெருமையுடன் அறிவித்துள்ளது. இந்தகுறிப்பிடத்தக்க சாதனை, சக்திதிறனுள்ள நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை தங்களது சக்தி உற்பத்தி செயல்முறைகளில் இணைப்பதில் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.



ISO 50001:2018 என்பது சர்வதேசஅளவில் அங்கீகரிக்கப்பட்ட சக்திமேலாண்மை அமைப்பாகும். இதுநிறுவனங்கள் தங்கள் உயர்சக்தி கொள்முதல் சொத்துக்களை சிறப்பாக நிர்வகிக்கவும் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் உதவுகிறது.



மேம்படுத்தப்பட்ட சக்தி செயல்திறன் ஒரு நிறுவனத்திற்கு அதன்சக்தி ஆதாரங்கள் மற்றும் தொடர்பான சொத்துக்களை அதிகப்படுத்துவதன் மூலம், செலவு மற்றும் நுகர்வு இரண்டையும் குறைப்பதன் மூலம் விரைவான பலன்களை வழங்க முடியும்.

அன்செல் இன் நீண்டகால கார்பன் குறைப்பு முயற்சிகளில் இணைவதன் மூலம், 2040 ஆம் ஆண்டுக்குள் அதன் செயல்பாடுகளுக்காக நிகர பூஜ்ஜியத்தை அடைவதற்கான அன்செல் இன் இலக்கை இந்தச்சான்றிதழ் மேலும் அதிகரிக்கும்.

கடந்த ஆண்டு காலநிலைக்குழுவின் EP100 முன்முயற்சியில் இணைந்த போது செய்யப்பட்ட உறுதிமொழிகளை வழங்குவதற்கான Ansellஇன் செயல்களையும் இந்தச் சாதனை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

“இப்பயணத்தின்மூலம், அன்செல்டெக்ஸ்டைல் லங்கா தனது முழுமையான பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பு முழுமையானதுமான சக்தி மேலாண்மைக்கான சேவை ஆற்றுவது தனது புதிய செயல்திட்டங்களில், சக்திகண்காணிப்பு, சக்திவிழிப்புணர்வு மற்றும், சக்திமேலாண்மையை உறுதிப்படுத்துகிறது.

**ரமேஷ்நாணயக்கார...**
*சிரேஷ்டபணிப்பாளர்/பொதுமேலாளர்*

# கேரளா மாநிலத்துக்கு இனிமேல் புதிய பெயர்!



'கேரளா'என இருக்கும் தங்கள் மாநிலத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்று அம்மாநில சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் மிகவும் முக்கியமான மாநிலம் எனில் அது கேரளாதான். அங்கு தமிழ்நாடு மாதிரி பெரும் தொழில் வளர்ச்சி இல்லை என்றாலும் கூட, தனிமனித வருமானம், மருத்துவம், கல்வி போன்றவற்றில் அம்மாநிலம் தேசிய அளவில் முதலிடத்தில் இருக்கிறது.

அங்கு ஆட்சி மொழியாக மலையாளம் இருக்கிறது. கடந்த 1956 ஆம் ஆண்டு மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது கேரளா உருவானது. மலையாளத்தில் இதற்கு 'கேரளம்' என்று பெயர். ஆனால் ஆங்கிலத்தில் கேரளா என்றுதான் அழைக்கப்படுகிறது. அதேபோல அரசியலமைப்பின் முதல் அட்டவணையிலும் கேரளா என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதனை 'கேரளம்' என்று மாற்ற வேண்டும் என நீண்ட நாட்களாக அம்மாநில மக்கள் வலியுறுத்தி வந்தனர்.

இதனையடுத்து நேற்று அம்மாநில சட்டமன்றத்தில் இது தொடர்பான தீர்மானத்தை முதலமைச்சர் பினராயி விஜயன் கொண்டு வந்தார்.

அதன்படி இனி மலையாளம், ஆங்கிலம் என எந்த மொழியிலும் கேரளாவை 'கேரளம்' என்றுதான் அழைக்க வேண்டும். இதற்கான மாற்றத்தையும் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் கேரள சட்டப் பேரவையில் நடைமுறை மற்றும் அலுவல் நடத்தை விதிகள் 118 இன் கீழ் பினராயி விஜயன் இந்த தீர்மானத்தை முன்மொழிந்தார்.

தீர்மானம் பெரும்பான்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் அது நிறைவேற்றப்பட்டது. இது குறித்து சட்டமன்றத்தில் பேசிய பினராயி, "மலையாளத்தில் நமது மாநிலத்தின் பெயர் கேரளம். கடந்த 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் நாள் மொழிவாரியாக கேரளம் பிரிக்கப்பட்டது. இதே நாளில்தான் நம் 'கேரளப்பிறவி' தினத்தை கொண்டாடுகிறோம்.

மலையாளம் பேசும் மக்களுக்கு கேரளம் தேவை. சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்தே எங்களின் தாய்மொழி வலுவாக இருந்தது. ஆனால், அரசியலமைப்பின் முதல் அட்டவணை மாநிலத்தின் பெயரை, 'கேரளா' என குறிப்பிடுகிறது. எனவே அரசியலமைப்பின் 3 ஆவது பிரிவின் கீழ் இந்த பெயரை 'கேரளம்' என திருத்தம் செய்ய அவசர நடவடிக்கை தேவை" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து மொழிகளிலும் 'கேரளம்' என்ற பயன்பாட்டை மாற்ற வேண்டும் என்றும் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

# சிறுகதை இலக்கியத்துக்காக தேசிய விருது பெற்ற பல்துறைக் கலைஞர் ஒலுவில் ஜே.வஹாப்தீன்

2022ஆம் ஆண்டுக்கான கொடகே தேசிய தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகளுக்கான போட்டியில் சிறந்த சிறுகதைத் தொகுதியாக ஒலுவில் கலைப்பிறை ஜே. வஹாப்தீனின் 'அவனுக்கும் சிறகுகள் உண்டு' தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான விருது வழங்கும் விழா கொழும்பில் விரைவில் நடைபெறவுள்ளது. இலங்கை வானொலி பிறை எப்.எம். அறிவிப்பாளரும் ஒலுவில் அக்/அல் ஹம்றா மகாவித்தியாலய ஆசிரியருமான ஜே.வஹாப்தீன் கவிதை, நாவல், ஆய்வு, நாடகம் , குறும்பா என பதின் மூன்று நூல்களை எழுதி வெளியீடு செய்து பல தேசிய சாஹித்திய விருதுகளைப் பெற்றவர் என்பதோடு, இவர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ் கலாநிதிப்பட்ட ஆய்வு மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



வேரில்லாப் பூச்சியங்கள், அஷ்ரப் எனும் தீ, வெட்டுக்கற்கள், கண்ணாடிக் குளத்து கவிதை, வெயிலில் ஒரு வீரப்பழம், முடக்கத்தான் முதலான கவிதை நூல்களையும் கலவங் கட்டிகள், குலைமுறிசல், தோறாப் பாடு முதலான நாவல்களையும், ஐந்து நாடகங்கள் எனும் நாடக நூலையும், ஒலுவில் பிரதேசத்து வெகுசனப் பாடல்கள், ஒலுவில் பிரதேசத்து கவிதைகளில் பண்பாட்டு அம்சங்கள் முதலான ஆய்வு நூல்களையும், தற்போது தேர்வாகியுள்ள 'அவனுக்கும் சிறகுகள் உண்டு' என்னும் நூலையும் அவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

குறுந்திரைப்படங்களாக அவலக் குரல், கந்தலாடை, கலங்கிய விழிகள், திசைமாறிய பறவை, பாடம் முதலான படங்களை இயக்கி நடித்து வெளியிட்ட வஹாப்தீன் பல நாடகங்களை எழுதி இயக்கி அரங்கேற்றியுள்ளார். இவரது கலை இலக்கியப்படைப்புக்களுக்காக பல இந்திய, தேசிய மாகாண விருதுகளும் கௌரவங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.



தனது கலவங்கட்டிகள் நாவலுக்காக பெயாவே விருதைப் பெற்ற முதல் முஸ்லிம் எழுத்தாளர் இவராவார். இரண்டாம் முறையாக வழங்கப்பட்ட பெயாவே விருதையும் தனது குலைமுறிசல் நாவலுக்காக இவரே பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர தனது 'தோறாப்பாடு' நாவலுக்காக இந்திய திருப்பூர் இலக்கிய விருதை வென்றார். இவை தவிர அறிவிப்புத்துறைக்கான 'துருணு சக்தி' விருதை ஜனாதிபதியின் கரங்களினால் பெற்றதோடு 2021ஆண்டு பிறை வானொலி சந்தனக்காற்று நிகழ்சிக்காக அரச வானொலி விருதையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தனது நாவல்களுக்காக இலங்கை அரசின் சாஹித்திய மண்டல சான்றிதழ் மற்றும் கிழக்கு மாகாண இலக்கிய விருதுகள் பலதை வென்றவராவார்.

கவிதை, சிறுகதை, நாடகங்கள், ஆய்வுப் போட்டிகளுக்காக பல தடவை தேசிய மட்டத்தில் பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றதோடு, சிறந்த ஆசிரியருக்கான கல்வி அமைச்சின் 'குருபிரதீபா' விருதினையும் பெற்றுக் கொண்டார்.

நேயர்கள் மற்றும் நண்பர்களால் தமிழ்ச் சுடர், கலைச்சுடர், கலைஜோதி, கலைப் பிறை முதலான பட்டங்களால் கௌரவிக்கப்பட்ட ஜே.வஹாப்தீன், மர்ஹூம் ஆசுகவி அன்புடீன் அவர்களினால் இலக்கியப் பிரகாசம் என கௌரவிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**எஸ்.அஷ்ரப்கான்...**
*(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)*

# வீடுகள் நிர்மாணித்துத் தருவதாக வாக்குறுதியளிக்கப்பட்டு ஏமாற்றப்பட்ட நொச்சிக்குளம் தெலுங்கு கிராம மக்கள்!



## 7 இலட்சம் ரூபாய் வழங்குவதாக உறுதியளித்து, 1 இலட்சம் ரூபாய் கிடைத்ததாக வேதனை!

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்னர் வீடமைப்பு அமைச்சராக இருந்த போது மக்களுக்கு வீடு கட்டித் தருவதாக வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் வவுனியா, நொச்சிக்குளம் தெலுங்கு கிராம மக்கள் தற்போது கடும் நெருக்கடியில் உள்ளனர்.

நொச்சிக்குளம் கிராமத்தில் கிராம மக்களுக்கு 22 வீடுகள் கட்டிக்கொடுக்க, வீடு ஒன்றுக்கு 7 இலட்சம் ரூபாய் வழங்குவதாக முன்னாள் அமைச்சர் உறுதியளித்திருந்தார். இதன்படி முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாச தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக கிராம மக்களுக்கு 1 இலட்சம் ரூபா தொடக்கம் 3 இலட்சம் ரூபா வரையான தொகையை வழங்கியிருந்தார்.

எனினும் வவுனியா, நொச்சிக்குளம் தெலுங்கு கிராம மக்களுக்கு குறித்த தொகை கிடைக்காததால் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். அப்போது வாழ்வாதாரம் கூட இல்லாத இக்கிராம மக்கள், புதிதாக கட்டப்படும் வீடுகளின் அருகே மண் குடிசைகளில் வசித்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் நிலத்திற்கு உரிமைப் பத்திரம் கூட இல்லை.

வீட்டுக் கனவுகளைக் காட்டி தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாக இக்கிராம மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.



இவர்கள் மிகவும் ஏழ்மையான மக்கள் ஆவர். புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக 1985 ஆம் ஆண்டு நொச்சிக்குளம் தெலுங்கு கிராமத்தை விட்டு வெளியேறிய கிராம மக்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு நொச்சிக்குளம் கிராமத்திற்குத் திரும்பியிருந்தனர். வவுனியா, நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி தயானி பின்வருமாறு தெரிவித்தார்:

"நாங்கள் இன்னும் தகரக் கூரையுடன் கூடிய குடிசைகளில் வாழ்கிறோம். நாங்கள் பல ஆண்டுகளாக பூரணப்படுத்தப்படாத வீடுகள் கட்டி வசிக்கிறோம். இந்த அரசிடமிருந்து எங்களுக்கு உதவி கிடைக்கும் என்று நம்புகிறோம். எங்களது பிரச்சினைகளை பார்க்க யாருமில்லை. அரசாங்கம் எங்களுக்கு உதவி செய்தால் நல்லது.

இப்போது நாம் மக்களுக்கு சாத்திரம் கூறி, பணத்தைத் தேடி வாழ முடியாது. எனவே வீடுகளை நிர்மாணிப்பதற்கு நிவாரணம் வழங்குமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம். எமது பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும் பாதை ஏறக்குறைய இரண்டு மைல் தூரம் காடாக உள்ளது. எங்களுக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்".

வவுனியா நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த விஜய் என்பவர் கூறியதாவது:

"வீடுகளைக் கட்டுவதற்கு 750,000 ரூபாவை வழங்குவதாக தேர்தலுக்கு முன்னர் சஜித் ஐயா வாக்குறுதி அளித்திருந்தார். அதன்படி, ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. அந்தப் பணத்தில் ஐந்து லோட் கற்கள் கொண்டுவரப்பட்டு கட்டப்பட்டுள்ளன. எங்களுக்கு மிகுதி கிடைக்கவில்லை. நாங்கள் இப்போது ஒரு குடிசையில் இருக்கிறோம். நாங்கள் உண்மையில் ஆதரவற்றவர்கள். நான் ஊனமுற்றவன். ஒரு வேலையும் செய்ய முடியாது. யாரிடமாவது எதையாவது கேட்டு வாழ்கிறேன். இந்த வீட்டின் மிகுதியைக் கட்ட நீங்கள் எங்களுக்கு உதவினால் நன்றாக இருக்கும்".

வவுனியா, நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த மற்றொருவர் கூறியதாவது:

"தெலுங்கு மக்கள் மிகவும் ஏழ்மையான மக்கள். நொச்சிக்குளம் கிராமத்தில் சுமார் 22 குடும்பங்கள் உள்ளன. சஜித் பிரேமதாச ஐயா இருந்த காலத்தில் வீடுகளை கட்டுவதற்கு பணம் கொடுக்கப்பட்டது. சுவர்களைக் கட்டுவது மட்டுமே சாத்தியமாக இருந்தது. இந்த நிலங்களுக்கு உரிமைப் பத்திரம் இல்லை. அந்த நேரத்தில் சாப்பிட வழியில்லை. எமக்கு வீடுகளை கட்டித் தருமாறு கோருகின்றோம். பாம்பாட்டி தொழில் செய்து இனிமேல் சாத்தியமில்லை. ஒரு குழந்தை கல்வி கற்க, கடைக்குச் செல்ல குறைந்தது ஐந்து கிலோமீட்டர் பயணிக்க வேண்டும்".

## வறிய மக்களின் வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அமைச்சர் பிரசன்ன நடவடிக்கை!



இது தொடர்பில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொதுமுகாமையாளர் பொறியியலாளர் கே.ஏ.ஜானக தெரிவிக்கும் போது, வவுனியா நொச்சிக்குளம் கிராமத்தில் உள்ள தெலுங்கு மக்களின் வீட்டுப் பிரச்சினையை தீர்க்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை வழங்கியதாக தெரிவித்தார்.

அதன்படி, இது தொடர்பான ஏற்கனவே ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாக பொதுமுகாமையாளர் தெரிவித்தார். இது தொடர்பான அறிவித்தல்கள் கிடைத்ததும் வீட்டுத் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

# உலகில் பெட்ரோலியம் கண்டுபிடிக்கப்பட்டு 90 வருடங்கள் பூர்த்தி



இன்றைய இயந்திர உலகில் எரிபொருளின் தேவை சுவாசிக்கும் மூச்சுக்காற்று போல் ஆகிவிட்டது. எரிபொருள் இல்லையேல் நாடே ஸ்தம்பித்துப் போய்விடும். போக்குவரத்து, மின்சாரம், விவசாயம் உட்பட அனைத்துத் துறைகளும் எரிபொருளையே பெரும்பாலும் நம்பியிருப்பதால் எரிபொருள் இல்லையேல் இயல்பு வாழ்வே இல்லை என்ற நிலைமைக்கு உலகம் வந்துவிட்டது.

பெற்றோலியம் மனித இனத்தின் பல்வேறு கண்டுபிடிப்புகளுக்கும் முன்னேற்றத்துக்கும் அச்சாணியாக இருந்துள்ளது. இன்று உலக அரங்கில் பெற்ரோலிய உற்பத்தியில் முன்னணி வகிக்கும் முதல் பத்து நாடுகளில் சவூதி அரேபியா முதலாம் இடத்தை வகிக்கின்றது. இந்நாட்டின் நாளாந்த பெற்றோலிய உற்பத்தி 12 மில்லியன் பரல்கள் ஆகும் . இதன்மூலம் அந்நாடு தினமும் 13. பில்லியன் டொலர் வருமானமீட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெட்ரோலியம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் அரபு நாடுகள் மிகவறிய நாடுகளின் பட்டியலிலேயே இடம்பெற்றிருந்தன. அரபுநாடுகளில் முதன்முதலில் எண்ணெய் வளம் இருப்பதாகக் கண்டறியப்பட்டவுடன் 1933 மே 23 இல் அப்போதைய சவூதி அதிபர் மன்னர் அப்துல் அஸீஸ் stand of owel எனும் அமெரிக்கக் கம்பனியுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். அயல்நாடு பஹ்ரைனிலும் அப்போது அதுபோன்ற ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

முதன்முதலில் கரையோரப்பகுதியான அல்ஜுபைல் கிராமத்திலேயே அகழ்வுப்பணி ஆரம்பமானது.

இவ்வூர் தம்மாம் நகரிலிருந்து சுமார் 100கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. அகழ்வுப்பணி ஆரம்பித்து இரண்டு வருடங்களாக கைவிடாது முயற்சித்தும் பலன் கிட்டவில்லை. பின்னர் 1935 இல் தம்மாம் நகரில் இடம்பெற்ற அகழ்வில் விடாமுயற்சியின் பலனாக 700 மீட்டர் ஆழத்தில் இயற்கை எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டது. அதிலிருந்து தினமும் 1358 பரல்கள் எரிவாயு கிடைத்தது.

## பெட்ரோலிய உற்பத்தியில் சவூதி முதலிடம்



பின்னர் வெற்றிமேல் வெற்றியாக தோண்டும் இடமெங்கும் அணைகடத்த வெள்ளம்போல் எண்ணெய் வளம் கரைபுரண்டோடியது.

இவ்வரலாற்று வெற்றியின் கதாநாயகனாக சவூதியின் ஸ்தாபகர் அப்துல் அஸீஸ் மன்னர் கருதப்படுகின்றார். இதனைத் தொடர்ந்தே ஏனைய நாடுகள் எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டும் திட்டத்தில் போட்டியிட ஆரம்பித்தன.

பெற்ரோல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடுகளும் அவற்றின் ஒருநாள் வருமானமும் வருமாறு:

சவூதியரேபியா (136.2 பில்லியன் அமெரிக்க டொலர்), ரஷ்யா (73.7 பில்லியன் டொலர்), ஈராக்(46.3 பில்லியன டொலர்), கனடா (39.5 பில்லியன் டொலர்), ஐக்கிய அரபு இராச்சியம் (38.9 பில்லியன் டொலர்), குவைத்(30.7 பில்லியன் டொலர்), ஈரான் (29.1 பில்லியன் டொலர்), நைஜீரியா (27 பில்லியன் டொலர்), சீனா (25.5 பில்லியன் டொலர்), பிரேஸில்(22.1 பில்லியன் டொலர்)

(குறிப்பு: Top ten பட்டியல் வருடாவருடம் புதுப்பிக்கப்படுவதால் நாடுகளின் பட்டியலும் மாற்றத்துக்கு உள்ளாகலாம்)



தகவல்:
**ஏ.டி.எம். ஜலீல்...**
(மதனி), சவூதி தூதுவராலயம், கொழும்பு

---

# மட்டக்களப்பில் மக்கள் உள்ளம் கவர்ந்த பிரிகேடியருக்கு நன்றியுடன் பிரியாவிடை





நெருக்கடியான காலகட்டங்களில் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்காக மனிதாபிமானத்துடன் பணியாற்றிய மட்டக்களப்பு மாவட்ட 231 ஆவது இராணுவத்தின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் திலுப்ப பண்டார உயர்கல்வியைத் தொடர்வதற்காக வெளிநாடு செல்லவுள்ளார்.

231ஆவது கட்டளை அதிகாரி பிரிகேடியர் திலுப்ப பண்டார மட்டக்களப்பு மாவட்டத்தில் கொவிட் 19 காலத்திலும் எரிபொருள் தட்டுப்பாடு போன்ற நெருக்கடியான காலங்களிலும் மக்களின் நன்மைக்காக சேவையாற்றியிருந்தார்.

பிரிகேடியர் திலுப்ப பண்டார மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மத்தியில் நல்லுறவை ஏற்படுத்துவதற்காக அயாராது பாடுபட்டதுடன், இனஐக்கியத்துக்காகவும் உழைத்தவர். இயற்கை விவசாயத்தினை இராணுவத்தினர் மூலம் மேற்கொண்டு உற்பத்திகளை மக்களுக்கு வழங்கியிருந்தார். தற்போதும் கூட இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இராணுவத்தில் 32 வருடங்கள் சேவையாற்றிய பிரிகேடியர் உயர் கல்வியைத் தொடர்வதற்காக பாகிஸ்தான் நாட்டின் இஸ்லாமாபாத்துக்கு செல்லவுள்ளார். இவரின் சேவையை கௌரவித்து அவருக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.





மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் கட்டளை அதிகாரி பிரிகேடியர் திலுப்ப பண்டாரவின் சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இரண்டு வருடங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சேவை புரிந்த பிரிகேடியர், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்களினால் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, உதவி மாவட்ட செயலாளர் ஆ. நவேஸ்வரன் மற்றும் பதவிநிலை அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். இவரை காத்தான்குடியில் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சம்மேளன மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன தலைவர் ரவூப் ஏ. மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பொதுச்செயலாளர் அஷ்ஷெய்ஹ் ஏ.எல்.எம்.சபீல் நழீமி, சட்டத்தரணி ஏ.உவைஸ், சமூக செயற்பாட்டாளர் கே.எம்.கலீல் மற்றும் பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது 231ஆவது கட்டளை அதிகாரி திலுப்ப பண்டாரவின் சேவையை பாராட்டி காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினால் அவருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

இதே போன்று அன்றயை தினம் காத்தான்குடியிலுள்ள இரண்டு பள்ளிவாயல்களுக்கும் பிரிகேடியர் விஜயம் செய்தார். காத்தான்குடி அல் அக்ஷா ஜும்ஆப்பள்ளிவாயலுக்கு சென்ற பிரிகேடியர் திலுப்ப பண்டாரவை பள்ளிவாயலின் தலைவர் கே.எல். எம்.பரீட் தலைமையிலான பள்ளிவாயல் நிருவாகிகள் வரவேற்றனர்.

இதன் போது பிரிகேடியரின் சேவையை பாராட்டி அவருக்கு பள்ளிவாயல் நிருவாகத்தினரால் நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

இதையடுத்து காத்தான்குடி 05 பத்ரிய்யஹ் ஜும்ஆப்பள்ளிவாயலுக்கு விஜயம் செய்த பிரிகேடியருக்கு அப்துல் ஜவாத் ஆலிம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிருவாகிகளால் வரவேற்பளிக்கப்பட்டது. பிரிகேடியரை கௌரவிக்கும் வைபவம் அப்துல் ஜவாத் ஆலிம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் காத்தான்குடி நகர சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஐ.எம்.ஜெஸீம் உட்பட அதன் நிருவாகிகள் பலரும் கலந்து கொண்டனர். இதன் போது பிரிகேடியர் திலுப்ப பண்டாரவுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னமும் வழங்கி வைத்தனர்.

காத்தான்குடியிலுள்ள இரண்டு பள்ளிவாயல்களில் அவரை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மாவட்டத்தின் மதவழிபாட்டுத்தளங்களுக்கும் இவர் விஜயம் செய்து மத சமயப் பிரமுகர்களின் ஆசியையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)*

---

# தங்களது சொந்தச் செலவிலேயே யானைவேலி அமைத்துக் கொள்ளும் நிந்தவூர் விவசாயிகள்!



இலங்கையின் நெல் உற்பத்தியில் இரண்டாம் இடம் வகிக்கும் அம்பாறை மாவட்டத்தின் முக்கிய விவசாயப் பிரிவாகத் திகழும், நிந்தவூர் கமநல சேவைகள் மத்திய நிலையப் பிரிவில் சுமார் 6500 ஏக்கர் நெற்காணியில் இரு போக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சிறந்த விவசாயிகளைக் கொண்ட இப்பிரிவில், மேற்படி இருபோக நெற்செய்கைகளின் போதும், குறிப்பாக அறுவடை நெருங்கும் காலகட்டங்களில் காட்டுயானைகளின் தொல்லையால் விவசாயிகள் பெரும் அவலங்களுக்கும், நஷ்டத்திற்கும் உள்ளாகி வருவதுடன் உயிரிழப்புக்களை சந்திப்பதும் வழக்கமாகவுள்ளது.

காட்டு யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு யானைவேலி அமைத்து தருமாறு இவ் விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலைமையை நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீபின் கவனத்திற்கு நிந்தவூர் விவசாயிகள் கொண்டு வந்தனர்.

அவரது ஆலோசனைக்கும், நிர்வாக ஆதரவிற்கும் அமைய குறித்த யானைத் தொல்லையிலிருந்து தமது விவசாயத்தைப் பாதுகாப்பதற்கென நிரந்தர வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க விவசாயிகள் முன்வந்துள்ளனர்.

குறிப்பாக பிரதேச செயலாளரின் நெறிப்படுத்தலில் நிந்தவூரிலுள்ள 14 விவசாய அமைப்புக்கள் ஒன்றிணைந்ததும் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.நசீல் தலைமையிலுமான செங்கற்படை ஆற்று விவசாயிகள் சம்மேளனம் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதன்படி முதற்கட்டமாக நிந்தவூர் விவசாயக் கண்டங்களுக்குள் காட்டு யானைகள் புகும் பாதையான சாவாறு வடிச்சல் முதல் ஆத்தியடி கட்டு வரையான 3. 5 கிலோமீற்றர் தூரத்திற்கு யானை வேலி அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், நிந்தவூர் விவசாயிகளின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் இத்திட்டத்தின் முதல் கட்டத்தை நிறைவு செய்யவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த யானை பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்கென 65 இலட்சம் ரூபா நிதியை விவசாயிகளிடமிருந்து பெற உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தற்சமயம் வரை சுமார் 52 இலட்சம் ரூபா வரை கிடைத்துள்ளதாகவும் விசாயிகள் சம்மேளன தலைவர் சட்டத்தரணி நசீல் தெரிவித்தார். மிக விரைவில் மீதித் தொகை கிடைத்துவிடும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.





மேலும் இத்திட்டத்தின் பிரதான நிர்மாண வேலைகள் மாலிண்டதிடல் பகுதியில் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கென பிரதேச செயலாளரால் காணியும் வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் குறுகிய காலத்துள் யானை பாதுகாப்பு வேலி அமைக்கும் வேலைகள் நிறைவுபெறுமென எதிர்பார்ப்பதாகவும், இதற்கென ஒலுவில் பிரசேதத்திலிருந்து மின்சார இணைப்பு பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலாளர் லத்தீப் தெரிவித்தார்

மக்கள் பங்களிப்புடனான (விவசாயிகள்) இத்திட்டம் வெற்றிகரமாக அமைய முன்னின்று உழைத்த விவசாயிகள் சம்மேளனத்தினர் மற்றும் சம்மேளன தலைவர் சட்டத்தரணி நசீல், நிந்தவூர் தலைமை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.ஏ.ஹார்லிக், வன ஜீவராசிகள் திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர் தௌபீக் மற்றும் 14 கமக்காரர் அமைப்பினருக்கும் நன்றி தெரிவிப்பதாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விவசாயிகளின் பங்களிப்புடனான மேற்படி ஆக்கபூர்வ வேலைத்திட்டம் முன்னுதாரணமானதெனப் பல்வேறு தரப்பினரும் பாராட்டுத் தெரிவித்துள்ள அதேவேளை,

திகாமடுள்ள மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப், இலங்கையிலேயே முன்னுதாரணமான வேலைத்திட்டம் இதுவெனப் நிந்தவூர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விதந்து பாராட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

**செல்லையா பேரின்பராசா...**
*(துறைநீலாவணை நிருபர்)*

## GCE O/L... (03 ஆம் பக்கத் தொடர்)

கூட்டுத்தாபணத்தின் தயாரிப்பில் பி.பகல் 04.30 மணிக்கு இந்நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும். பொது பயன்பாடு மானிட PRO + என்.விகியு 03 திட்டம் ஆகஸ்ட் 13 ஆம் திகதி காலை 10.30க்கு ஆரம்பமாகுமெனவும் இலங்கை ரூபாவாஹினி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் தெளிவுபடுத்தினர்.

இந் நிகழ்ச்சித் திட்டத்தில் கல்வியமைச்சுடன் இணைந்து தொழில்நுட்ப பாடங்களை கற்பிக்கும் பாடசாலைகள் மற்றும் தனியார் அரச தொழில்நுட்ப மாணவர்களையும் எதிர்காலத்தில் இணைத்துக் கொள்வதற்கும் அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவுறுத்தல் வழங்கினார்.

## எந்த ஒரு... (03 ஆம் பக்கத் தொடர்)

அங்கீகரிக்கப்பட்ட பின்னர், 2023 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி பாராளுமன்றத்தில் மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த யோசனையானது உயர் நீதிமன்றத்தில் அல்லது 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்ட வேறு எந்தவொரு நீதிமன்றத்திலும் விசாரணைக்குட்படுத்த, மறுபரிசீலனை செய்ய அல்லது சவாலுக்கு உட்படுத்தப்பட முடியாது என்றார்.

## ரோசியின்... (03 ஆம் பக்கத் தொடர்)

அவர் மேலும் தெரிவித்துள்ளார் .

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையிடம் தனது அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி அதனை செலுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தெஹிவளை – கல்கிஸ்ஸ நகர சபைக்கான மின்சாரம் ஒரு மணி நேரத்தில் மீண்டும் வழங்கப்பட்டது.

## கொள்கலன் லொறியொன்று...

விபத்து காரணமாக கிரிஉல்ல மீரிகம வீதி போக்குவரத்து நேற்று மதியம் வரை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.

பொல்கஹவெலயிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த அலுவலக ரயிலுடனே, இந்த கொள்கலன் லொறி மோதியது.

ரயிலில் மோதிய கொள்கலன் பெட்டி சுமார் 100 மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டதால் ரயில் சமிக்ஞை, மின்கம்பங்கள், ரயில் கதவுகள் என்பன பலத்த சேதம் அடைந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்தால், ரயிலின் சக்கரங்கள் மற்றும் என்ஜின் பலத்த சேதமடைந்துள்ளன. இதனால் பல ரயில்கள் நேற்று தாமதமாக புறப்பட்டன.

## அநுராதபுரத்தில் கோர விபத்து...

சென்ற 28 வயது கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். படுகாயங்களுடன் இராஜாங்கனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட 26 வயது மனைவி வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

இருவரினதும் சடலங்களும் இராஜாங்கனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்த இளம் தம்பதியினர் அநுராதபுரம் பலுகஸ்வெவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களென பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## அண்மைய உயிரிழப்புகளுக்கு...

நிபுணர்கள் குழுவின் அறிக்கையில், இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இதுகுறித்த அறிக்கையில் நிபுணர்கள் குழு பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

அனாபிலிக்ஸ் ஒவ்வாமை மேலாண்மை, அவசரகால மேலாண்மை, அவசரகால மேலாண்மை தொடர்பான தேசிய மற்றும் நிறுவன வழிகாட்டல்கள், நெறிமுறைகளை மறுபரிசீலனை செய்யவேண்டுமென நிபுணர்கள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## பொய்ப் பிரசாரத்தில் ஈடுபடும்...

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண வைபவத்துக்காக இலங்கை மின்சார சபை 2019 இல்,மின்சாரத்தை விநியோகித்திருந்தது.இதற்கான கட்டணங்கள் இது வரை செலுத்தப்படவில்லையென

மின்சார சபை தெரிவித்திருந்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவிபி) மாகாண சபை உறுப்பினர் நளின் ஹேவகே, தாக்கல் செய்த தகவலறியும் உரிமைச் சட்டத்துக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை மின்சார சபை இவ்வாறு குறிப்பிட்டிருந்தது.

2019 ஆண்டு ஒன்பதாம் மாதம் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை வீரகெட்டிய வீட்டில் நடந்த திருமண வைபவத்துக்கு வழங்கிய தற்காலிக மின் விநியோகத்துக்காக 26,82,246.57 ரூபா செலுத்தப்பட வேண்டுமென இலங்கை மின்சார சபை கூறியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் கோரிக்கைக்கமைய இவ்வாறு மின்சாரம் வழங்கப்பட்டிருந்ததாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், இந்த அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, இலங்கை மின்சார சபை அவ்வாறான எந்தவொரு மின் கட்டண பட்டியலையும் தங்களுக்கு இதுவரை அனுப்பவில்லை. மின் கட்டணப் பட்டியல் எப்போது அனுப்பப்பட்டது என்பதை அறிவிக்குமாறும் கோரியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## SLPP யின் நிலைப்பாடு...

தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ஆற்றிய விசேட உரையையடுத்து தயாசிறி ஜயசேக்கர எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

மாகாண சபைகளில் முதலமைச்சர்களாக பணியாற்றியவர்கள் இந்த பாராளுமன்றத்தில் தற்போது அங்கம் வகிக்கின்றார்கள்.நாம் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலேயே செயப்படுகின்றோம். அவர் எப்போதும் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு என்ற நிலைப்பாட்டிலேயே செயற்படுகின்றார். அதற்கிணங்கவே மாகாண சபை முதலமைச்சர்களுக்கு அமைச்சரவையில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை அவர் வழங்கியிருந்தார்.

அதனால் 13 பிளஸ் தொடர்பிலேயே மஹிந்த ராஜபக்ஷ கருத்துக்களை முன் வைத்துள்ளார்.இதில் மறைக்க எதுவும் கிடையாது. ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டின் போது எமது நிலைப்பாட்டை முன் வைப்போம். என்பதுடன், மஹிந்த ராஜபக்ஷவின் அனுமதியுடனேயே நான் இந்த தகவலை வெளியிடுகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம் பிரதிநிதிகளுடனும்...

இணைத்துக் கொண்டு இப்பேச்சுவார்த்தையை நடத்த முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில்தெரிவித்தார்.

முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்களுடனும் தனியான பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்பி நேற்று பாராளுமன்றத்தில் கேட்டுக்கொண்டார். இதற்கிணங்கவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு பதிலளித்தார்.

வடக்கு கிழக்கைப் பொறுத்த வரை முஸ்லிம்கள் அங்கு முக்கிய பங்கு வகிக்கின்றனர்.எனவே, முஸ்லிம் உறுப்பினர்களோடு தனியான பேச்சு வார்த்தையை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஜனாதிபதி வழங்க வேண்டுமென்றும் ரவூப் ஹக்கீம் கேட்டுக் கொண்டார்.

சபையில் மேலும் தெரிவித்த ரவூப் ஹக்கீம் எம்பி: அதிகாரப் பகிர்வு நல்லிணக்கம் உட்பட முக்கிய பல சிறந்த விடயங்களை முன்வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் உரையாற்றினார். அது தொடர்பில் பிறிதொரு தினத்தில் விவாதம் நடத்த முடியும்.

சர்வ கட்சி மாநாடு தொடர்பில் தெரிவிக்கையில், சில கட்சிகள் அது தொடர்பான தப்பபிப்பிராயங்களை முன் வைப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதே வேளை, உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ள அரசாங்க ஊழியர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில், நாம் ஏற்கனவே பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

நாம் கட்சித் தலைவர்கள் என்ற வகையில் முன் வைக்கும் கோரிக்கை என்னவெனில், உள்ளூராட்சி சபை தேர்தல் நடைபெறும் வரை அவ்வாறு வேட்பு மனு தாக்கல் செய்துள்ள அரசாங்க ஊழியர்கள், அவர்களது கடமையை ஏற்கனவே அவர்கள் மேற்கொண்ட அலுவலகங்களில் முன்னெடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு , கிழக்கு மட்டுமின்றி அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நான் தயாராகவே உள்ளேன். நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரையும் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நியமித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

### வரட்சியால் 13 மாவட்டங்களில் 50,535 குடும்பங்கள் பாதிப்பு

# வரட்சி நிலையை அரசியலாக்க வேண்டாம் –பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**ஸாதிக் ஷிஹான்**

நாட்டில் நிலவும் வரட்சியான காலநிலை பருவகால நிகழ்வு, எனவே இதில் அரசியல் இலாபம் தேட எவரும் முயற்சிக்க வேண்டாமென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமிதா பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

எல்லாவற்றையும் அரசியல் மயப்படுத்தினாலும் மக்கள் பாதிப்புக்களை அரசியல் மயப்படுத்த வேண்டாமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டில் தற்பொழுது காணப்படும் வரட்சி நிலைமைக்கு முகம் கொடுத்தல் மற்றும் எதிர்காலத்தில் ஒன்றிணைந்த செயற்பாடுகளை முன்னெடுத்தல் தொடர்பாக துறைசார் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடனான இடம் பெற்ற கலந்துரையாடல் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கம் அளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று பிற்பகல்



இடம் பெற்றது. கொழும்பில் உள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் இடம்பெற்ற இந்த செய்தியாளர் மாநாட்டில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மேலும் விளக்கம் அளிக்கையில்: நாட்டில் 13 மாவட்டங்களில் 50,535 குடும்பங்களைச் சேர்ந்த 166,904 பேர் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அந்தந்த மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புடன் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிதியை ஒதுக்கியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இராஜாங்க அமைச்சர் தென்னகோன் நன்றி தெரிவித்தார்.

காலநிலையில் ஏற்படும் பருவகால மாற்றங்களினால் நாட்டில் வரட்சியான காலநிலை நிலவுகிறது மேலும் எதிர்வரும் மாதங்களில் எதிர்பார்க்கப்படும் பருவ மழையுடன் நிலைமை மேம்படும்.

பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ பிரிவு, நீர்ப்பாசன அமைச்சு, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு, விவசாய அமைச்சு, கமநல அபிவிருத்தி திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், மகாவலி அதிகாரசபை, மின்சார சபை, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு, வளிமண்டலவியல் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களுடன் நாங்கள் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம்.

மனிதனால் ஏற்படும் பேரழிவுகள் குறித்து விளக்கமளித்த இராஜாங்க அமைச்சர், நாட்டின் பல பகுதிகளில் இருந்து இதுவரை 58 காட்டுத் தீ விபத்துகள் பதிவாகியுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மனித நடவடிக்கைகளால் ஏற்படுவதாகவும் கூறினார். இதுபோன்ற சம்பவங்களை தடுக்கும் வகையில், இதுபோன்ற குற்றவாளிகளுக்கு எதிராக சட்டங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.கே கருணாநாயக்க மற்றும் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஹர்ஷ விதானராச்சி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# 13 தொடர்பில் ஜனாதிபதியின் யோசனைக்கு பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு என்ன?

**லோரன்ஸ் செல்வநாயகம்**

### தயாசிறி சபையில் கேள்வி

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தும் ஜனாதிபதியின் நிலைப்பாடு தொடர்பில், ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என தயாசிறி ஜயசேகர எம்.பி சபையில் கேட்டுக்கொண்டார்.

13 ஐ, அமுல்படுத்தும் யோசனைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைக்கும்போது அரசாங்கத்தின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இது குறித்து அக்கட்சியின் நிலைப்பாட்டை ஜனாதிபதி தெரிவிக்க வேண்டுமென,தயாசிறி ஜெயசேகர பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மற்றும் அக்கட்சி ஊடாக தெரிவாகி தற்போது எதிரணியில் செயற்படுபவர்கள் ஆகியோரும் 13 ஆவது திருத்தம் தொடர்பில் முன்னாள்ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். இது தமக்கு சம்பந்தம் இல்லாதது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரையையடுத்து கேள்வி எழுப்பிய போதே தயாசிறி ஜயசேகர எம்பி, இவ்வாறு தெரிவித்தார்.

தயாசிறி ஜயசேகர எம் பி தமது கேள்வியின் போது, பல பிரச்சினைகளுக்கான தீர்வினை ஜனாதிபதி முன்வைத்துள்ளமை வரவேற்கத்தக்கது. ஏற்றுக்கொள்ளக் கூடிய சிறந்த விடயங்களுக்கு சுதந்திரக் கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி யோசனைகளை முன்வைத்துள்ள நிலையில், அரசாங்கத்தின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு முரணாக 13 ஆவது திருத்த விவகாரத்தில் ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடையாது, அவருக்கு மக்கள் ஆணை இல்லை என்றும் தெரிவித்து வருகிறார்.

அந்த வகையில்,இது ஜனாதிபதியின் தனிப்பட்ட யோசனையா? அல்லது அரசாங்கத்தின் யோசனையா என்பதை ஜனாதிபதி தெரிவிக்க வேண்டும்.

ஜனாதிபதியின் யோசனைக்கு பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு என்ன மற்றும்,அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்த 134 உறுப்பினர்களும் ஒருமித்த தீர்மானத்தை அறிவிக்க வேண்டும். அப்போது தான், ஜனாதிபதி முன்வைத்துள்ள யோசனை தொடர்பில் வினைத்திறனான சிறந்த நிலைப்பாட்டை எடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நவீன தொழினுட்பத்துடன் மீன்பிடி...

கடற்றொழில் அமைச்சு பாரிய பங்களிப்புகளை வழங்கி வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிக்காத அரச அதிகாரிகள் தொடர்பில் கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமெனவும், 2048 இல் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் தொலை நோக்குப் பார்வையை நனவாக்க அனைவரும் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்,

2048 ஆம் ஆண்டளவில் முன்னேறிய இலங்கையை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு பொறுப்பு வாய்ந்த அமைச்சு என்ற வகையில், கடற்றொழில் அமைச்சுக்கும் அதிகளவான பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த இலக்குகளை அடைவதற்காக கடற்றொழில் அமைச்சு கடந்த வருடத்தில் பல வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

மீனவர்களின் பிரச்சினைகளை கண்டறிந்து அவர்களின் நலனுக்காக விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்கு நவீன தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சர்வதேச உறவுகளை வலுப்படுத்துவதில் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. மீனவ சமுதாயத்தின் நலனுக்காக மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு காப்புறுதித் திட்டம், ஓய்வூதியம், சேமிப்புத் திட்டங்கள் போன்ற திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மாகாணசபை தேர்தலை நடத்துவதில்...

கொண்டு வருவது தொடர்பிலும் எந்த ஆட்சேபனையும் கிடையாது. நாளையே அதை கொண்டு வரவும் முடியும் என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் ஆணையை பெற்றுக் கொள்வதற்காக முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள். அதன் பின்னர் அது தொடர்பான திருத்தங்கள் சம்பந்தமாக தீர்மானம் எடுக்க முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் தமது கேள்வியின் போது குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையையடுத்து எம்பிக்கள் சிலர் அது தொடர்பில் ஜனாதிபதியிடம் சில கேள்விகளை எழுப்பினர். இதன் போதே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தமது கேள்வியின் போது,

ஜனாதிபதி முன்வைத்த கருத்துக்கள், யோசனைகளை ஏற்றுக் கொள்வதாகவும் இது தொடர்பில் பரிசீலனை செய்து அதன் பின்னர் சிறந்த வேலை திட்டங்களுக்கு இதய சுத்தியுடன் ஒத்துழைப்பு வழங்க முடியும் என்றும் தெரிவித்தார்.

அதே வேளை, சில ஊடகங்கள் சுகாதார அமைச்சருக்கு எதிராக கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை வாபஸ் பெறப்போவதாக தகவல்களை வெளியிட்டுள்ளன. அவ்வாறு எந்த தீர்மானம் எடுக்கவில்லை. இரண்டு தினங்கள் அல்ல மூன்று தினங்களுக்கு அந்த விவாதத்தை நடத்துவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம் எனக் குறிப்பிட்டார்

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, நாளையே விவாதத்தை ஆரம்பித்து சனிக்கிழமையையும் சேர்த்து மூன்று தினங்களுக்கு அந்த விவாதத்தை நடத்துங்கள். இது தொடர்பில் எமக்கு எவ்வித ஆட்சி ஆட்சேபனையும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

## பாராளுமன்றத்தின் மூலமே...

ஒவ் இந்தியா 'செய்திச் சேவைக்கு கருத்து தெரிவித்த போதே உயர்ஸ்தானிகர் மிலிந்த மொராகொட இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம் குறித்து ஆர்வத்துடன் இலங்கை உள்ளது. தொடர்புபட்ட அனைவருடனும் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். பாராளுமன்றம் மூலமே இதற்கு தீர்வு காணமுடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ன செய்ய முயல்கின்றார் என்பதை அவர் தெளிவாக தெரிவித்துள்ளார், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைப்பதன் மூலம் அவர் அதனை செய்ய முயல்வதாகவும் மிலிந்த மொராகொட தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் இருநாடுகளுக்குமிடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது.இலங்கை,இந்தியாவின் பாதுகாப்புக்களை தனது பாதுகாப்பாக கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்பே எங்களின் பாதுகாப்பு. எங்கள் மத்தியில் நீண்டகால நாகரிக உறவுகள் காணப்படுகின்றன. நாங்கள் ஒரே இரத்தத்தை கொண்டுள்ளோம்.

இரு நாடுகளுக்குமிடையில் அதிக தொடர்பாடல்களும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் செயற்பாடுகளும் இடம்பெற்றுள்ளன. அவை, இலங்கை ஜனாதிபதியின் விஜயத்தால் மேலும் வலுவடைந்துள்ள தாகவும் மிலிந்தமொரகொட குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதியின் கரங்களை...

கட்சிகளும் மற்றும் மக்களும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்காக ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவது அவசியம் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை,13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் ''அற்புதம்' நிறைந்தது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய விசேட உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே, அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அவர், 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலமான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி சபையில் முக்கியமான கருத்துக்களை தெரிவித்தார்.

அதில், அவர் பல காத்திரமான விடயங்களையும் குறிப்பிட்டிருந்தார். அதனை நாம் வரவேற்கின்றோம். 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் அற்புதமானவை.

அந்த வகையில் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வு தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு வடக்கு,கிழக்கு தமிழ் மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் முழுமையான ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தரமற்ற கொத்தமல்லிக்கு...

விசேட அதிரடி பிரிவு அதிகாரிகளால் (07) கைப்பற்றப்பட்டது.

கல்முனை பொலிஸ் பிரிவு பழைய கடற்கரை வீதி பிரதேசத்தில் இவை,கைப்பற்றப்பட்டன.

கல்முனை பொலிஸ் பிரிவு பழைய கடற்கரை வீதி கல்முனை குடி 03 பிரதேசத்தில் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டபோதே இவை கைப்பற்றப்பட்டன.

அங்கு தரமற்ற கொத்தமல்லிக்கு இரசாயன திரவியம் (சல்பர் தூள்) கலந்து மீண்டும் பொதி செய்து விற்பனைக்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. கல்முனைக்குடி பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதான நபரொருவரும் கைது செய்யப்பட்டார்.

அந்த இடத்திலிருந்து சல்பர் தூள் கலக்கப்பட்ட 2,125 கிலோ கொத்தமல்லி, தரமற்ற 82, 750 கிலோ கொத்தமல்லி, 225 கிலோ சல்பர் தூள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர் மேலதிக விசாரணைக்காக நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகார சபையின் அம்பாறை மாவட்ட அலுவலக தலைவர் உள்ளிட்ட அணியினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை திருக்கோவில் முகாம் அதிகாரிகளுக்கு இராணுவ புலனாய்வு அதிகாரிகளிடமிருந்து கிடைத்த தகவலுக்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப்படை கட்டளை அதிகாரி பிரதி பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தரவின் உத்தரவு மற்றும் பணிப்புரையின் பேரில்

இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

பிராந்திய கட்டளை அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் குணசிறியின் கண்காணிப்பின் கீழ் உதவி பொலிஸ் அத்தியட்சகர் வழிகாட்டலில் பொலிஸ் விசேட அதிரடிப்படை திருக்கோவில் முகாம் கட்டளை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர். டபிள்யு.வி. எஸ் ராஜபக்ச உள்ளிட்ட அதிகாரிகள் குழு மற்றும் நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகார சபை அம்பாறை மாவட்ட காரியாலய அதிகாரிகள் குழுவுடன் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொள்ளப்பட்டது.




## நுவரெலியா கணவன்- மனைவி மரணத்தில் தீவிர விசாரணை

# சடலங்களை அடக்கம் செய்ய அனுமதி; மயானத்தில் பொலிஸ் காவலுக்கு உத்தரவு

நுவரெலியாவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த தம்பதியினரின் சடலங்கள் பாதுகாப்பான இடத்தில் அடையாளமிடப்பட்டு அடக்கம் செய்யப்பட வேண்டுமென நுவரெலியா மாவட்ட நீதவான் நாலக்க சஞ்சீவ வீரசிங்க உத்தரவிட்டுள்ளார்.



மேலும் சடலங்கள் புதைக்கப்படும் இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டுமெனவும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பிரேத பரிசோதனை சட்ட வைத்தியர் ஒருவர் ஊடாக மேற்கொள்ளப்பட்டபின்னர்சடலங்களை உறவினர்களிடம் கையளிக்க வேண்டுமெனவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நுவரெலியா நுழைவாயில் பகுதியான டோப்பாஸ் கிராமத்தில் கணவன் மற்றும் மனைவி ஒரே வீட்டில் உயிரிழந்த சம்பவம் கடந்த 07 ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றிருந்தது.

இச்சம்பவத்தில் நுவரெலியா டோப்பாஸ் கிராமத்தில் இலக்கம் (05) வீட்டில் வசித்து வந்த எண்டன் தாஸ் (வயது 31) மற்றும் நாதன் ரீட்டா (வயது 29) என்ற கணவன், மனைவி ஆகியோர் உயிரிழந்திருந்தனர். மேலும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நுவரெலியா குற்றத் தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இச்சம்பவம் இடம்பெற்ற வேளையில் வீட்டிலிருந்த எண்டன் தாஸின் தாய் (வயது 54) பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில்,

அன்று திங்கட்கிழமை இரவு வழமை போல எனது மகனுக்கும் மருமகளுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. நான் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தேன். சமையல் அறையில் பாரிய வெடிப்பு சத்தம் கேட்டது. நான் சமையல் அறைக்குள் சென்று பார்த்தபோது மருமகள் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். நான் மகனிடன் ஏன்? என கேட்டப்போது மின்சாரம் தாக்கி கீழே வீழ்ந்துவிட்டார். யாரையாவது உதவிக்கு அழைக்குமாறு கூறினார். நான் அயலவர்களை கூப்பிடுவதற்காக வீட்டிலிருந்து வெளியே வரும்போது மீண்டும் ஒரு வெடிப்பு சத்தம் கேட்டது. நான் மீண்டும் வீட்டுக்குள் ஓடிச் சென்று பார்த்த போது மகனும் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாக அவர் தெரிவித்தார்.

எனவே இதனை அடிப்படையாக கொண்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அதே நேரம் எண்டன் தாஸூக்கு உள்ளூர் துப்பாக்கி எவ்வாறு கிடைத்தது? சம்பவத்துக்கான பின்னணி என்ன? ,துப்பாக்கி வெடித்ததில் இருவரும் உயிரிழந்தனரா? அல்லது துப்பாக்கிச் சூட்டு நடத்தியதால் இருவரும் உயிரிழந்தனரா? என்ற கோணத்தில் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

சடலங்கள் மீதான பிரேத பரிசோதனை சட்ட வைத்தியர் எம். எம்.குணத்திலக்க முன்னிலையில் நேற்று காலை 9.30 மணிக்கு நுவரெலியா மாவட்ட வைத்தியசாலை பிரேத அறையில் ஆரம்பிக்கப்பட்டது.

ரமேஷ்

## இனந்தெரியாதோரால் தீ வைப்பு

(ஊவா சுழற்சி நிருபர்)



ஒஹிய காட்டுப்பகுதிக்கு இனந்தெரியாதோரால் நேற்றுமுன்தினம் தீ வைக்கப்பட்டுள்ளது. ஒஹிய ரயில் வீதியின் சுரங்கம் மேல் பகுதி வரையிலுள்ள பெறுமதி மிக்க மரங்கள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளதாக வன இலாகா அதிகாரிகள் தெரிவித்தனர். காட்டுத்தீ மேலும் வனப்பகுதிக்குள் பரவாமலிருக்க ஒஹிய வன இலாகா அதிகாரிகள், ரயில் ஊழியர்கள், தபால் நிலைய ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் மிகுந்த சிரத்தையுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக இடர் முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

## பலாங்கொடையில் வரட்சியால் சோளப் செய்கை பாதிப்பு



(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை பிரதேசத்தில் சோளச் செய்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் முறையிடுகின்றனர். பலாங்கொடைப் பிரதேசத்தில் பரந்தளவில் சோள செய்கை மேற்கொள்ளப்படும் தியவின்ன கல்தோட்டை,வெலிபொதயாய,வேலிஓய பகுதிகளில் தமது விளைச்சல்கள் பல வழிகளிலும் பாதிப்படைந்துள்ளதாக இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த ஒரு மாதகாலமாக இப்பகுதியில் மழை பெய்யாமையால் ஆறுகள், குளங்கள், நீர்நிலைகள் உட்பட கிணறுகளும் பாதிப்படைந்துள்ளன. இதனால் சோளப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான நீர் இல்லாமையால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுப்பதாக தெரிவிக்கின்றனர். இதனால் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

## சரக்கு ரயில் முன் பாய்ந்து யுவதி பலி

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



கண்டியிலிருந்து பதுளை நோக்கி பயணித்த இலக்கம் 20 என்ற சரக்கு ரயில் முன் பாய்ந்து யுவதியொருவர் நேற்று (09) காலை உயிரிழந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் மல்லியப்பு பகுதியில் பதுளை நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலில் பாய்ந்து இவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் டயகம பிரதேசத்தைச் சேர்ந்த கணபதி அனுஷா தர்ஷனி என்ற 28 வயதுடைய யுவதி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த யுவதி ஹற்றன் நகரிலுள்ள தனியார் நிதி நிறுவனமொன்றில் பணிபுரிந்து வருவதாகவும், யுவதி ஹற்றன் பொன்னகர் பிரதேசத்தில் வசிக்கும் இளைஞனொருவனை ஐந்து வருடங்களாக காதலித்து வருவதாகவும் ஹற்றன் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

யுவதியின் சடலம் அவரின் காதலனால் அடையாளம் காணப்பட்டுள்ளது. சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக ஹற்றன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தரமான விவசாய உற்பத்திகளை உருவாக்கும் விசேட வேலைத்திட்டம்

(பதுளை தினகரன் விசேட நிருபர்)

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் அனுசரணையின் கீழ் விவசாய திணைக்களம் மற்றும் ஊவா மாகாண விவசாய திணைக்களம் ஆகியன இணைந்து தரமான விவசாய உற்பத்திகளை உருவாக்கும் நோக்கத்துடன் GAPGOOD AGRICULTURAL PRACTICES எனும் பெயரில் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

விவசாய திணைக்களம் மற்றும் ஊவா மாகாண விவசாய திணைக்களம் ஆகியன இணைந்து தரமான விவசாய உற்பத்திகளை உருவாகுதல், உணவு பாதுகாப்பை ஊக்குவித்தல் மற்றும் வணிக அளவில் பயிர் செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் விவசாய உற்பத்திகளை விற்பனை செய்வதற்கென நடைமுறைகள் என பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.



இவ் வேலைத்திட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தைச் சேர்ந்த 200 விவசாயிகளுக்கு GAP சான்றிதழ்கள் வழங்கும் அடையாள நிகழ்வு ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே. எம். முஸம்மில் தலைமையில் நேற்று வெலிமடை போகஹகும்புர பிரதேசத்தில் நடைபெற்றது.

மேலும் 45,000 ரூபா மதிப்பிலான விவசாயத்துக்கு பயன்படுத்தும் பொலித்தீன் பைகள், நீர் வழங்கல் கருவிகள், பூச்சி எதிர்ப்பு கவர் வலைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் UNFAO பிரதிநிதி நலீன் முனசிங்க, மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் காமினி மஹிந்தபால ஜோபியாஸ், திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## இராகலை பச்சத்தண்ணி மாரியம்மன் ஆலய வருடாந்த விழா

இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில் அமைந்துள்ள வரலாறு சிறப்புமிக்க அருள் மிகு ஸ்ரீ பச்சத்தண்ணி மாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவமும், சங்காபிஷேக தேர்த் திருவிழாவும் நாளை (11)வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ ந.சிவராஜா (அ.இ.சமாதான நீதவான்) தலைமையில் தொடர்ந்து ஐந்து நாட்கள் விழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபை செயலாளர் சிவ.புஷ்பராஜ் தெரிவித்தார்.

அத்துடன் 11.08.2023 காலை 07 மணிக்கு கொடியேற்றப்பட்டு அன்றைய தினம் இரவு கரகம் பாலித்தல் நடைபெறவுள்ளது.

12.08.2023 காலை 09 மணி முதல் மாலை வரையான நிகழ்வுகளில் பாற்குட பவணி, சங்காபிஷேகம் மற்றும் மகேஸ்வர பூஜையுடன் பக்தகோடிகளுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

13.08.2023 காலை ஆலய பூஜையுடன் வசந்தமண்டப பூஜை நடைபெற்று காலை (10) மணிக்கு முத்து சப்பரத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஊர்வலம் வந்து ஆசிவழங்கும் நிகழ்வமை' நடைபெறவுள்ளது. (14.08.2023) மாலை (03) மணிக்கு பரவக்காவடி, மாவிளக்கு பூஜை நடைபெற்று இவ்வாலயத்தின் சிறப்புமிக்க தீ மிதிப்பு விழா நடைபெறவுள்ளது.

15.08.2023 காலை (09) மணிக்கு கரகரப்பாக ஊர்வலம் நடைபெறுவதுடன் அன்றைய தினம் பகல் 1.30 மணிக்கு ஆடி மாத ஐந்தாம் செவ்வாய் விசேட பூஜையுடன்,மாலை கரகம் குடிவிடுதல் நிகழ்வு நடைபெறவுள்ளது. உற்சவ நிகழ்வுகளில் கலந்துகொள்ள நாட்டில் பல பாகங்களிலும் இருந்து வரும் பக்த கோடிகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் இராகலை பொலிஸாரால் செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது.

ரமேஷ்

## முஸ்லிம் விவாக, விவாகரத்து திருத்தச்சட்டம்;

# அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா - சிறிலங்கா முஸ்லிம் கவுன்ஸில் கலந்துரையாடல்

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்திருத்தம் குறித்து சமூகத்தில் புரிதலையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மற்றும் சிறிலங்கா முஸ்லிம் கவுன்ஸில் ஆகிய இருதரப்புக்குமிடையில் சுமுக சந்திப்பொன்று ஜம்இய்யாவின் தலைமையகத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில் முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்திருத்தம் சம்பந்தமாக முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பில் இருதரப்பு பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்றன.



முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்திருத்தம் தொடர்பில் தமது நிலைப்பாடு எதுவாக இருப்பினும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மற்றும் ஏனைய முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளால் ஏகோபித்து தீர்மானிக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு தாங்கள் உறுதுணையாக நிற்பதோடு சமூகத்தின் நலன் மற்றும் கருத்தொருமைப்பாட்டை கருத்தில் கொண்டு இத்திருத்தம் தொடர்பாக எட்டப்படும் ஏகோபித்த முடிவுகளுக்கு கூட்டிணைவோடும் புரிந்துணர்வுடனும் செயற்படுவதாகவும் சிறீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் உறுதியளித்தது.

அத்துடன் கருத்து முரண்பாடுகளின்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட காதிமுறையில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு, கருத்து முரண்பாடுள்ள விடயங்களில் உலமாக்களின் வழிகாட்டல்களோடு சிவில் சமூக அமைப்புக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி பயணிக்க வேண்டும் என்று ஜம்இய்யத்துல் உலமா குறித்த கூட்டத்தின்போது வலியுறுத்தியது.

மேலும் 1970 களில் இருந்து தற்பொழுதுவரைவிவாக, விவாகரத்துசட்டத்திருத்தம் தொடர்பில் ஜம்இய்யா குறித்த நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்ற விடயத்தையும் இதன் போது தெரிவித்துக் கொண்டது.

இதில் ஜம்இய்யாவின் தலைமையகம் சார்பாக அதன் பதில் தலைவர் அஷ்ஷைக் ஐ.எல்.எம். ஹாஷிம் ஸூரி, பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித், பொருளாளர் கலாநிதி ஏ.ஏ. அஸ்வர், உப செயலாளர்களுள் ஒருவரான அஷ்ஷைக் எம். எஸ்.எம். தாஸீம், நிறைவேற்றுக் குழுவின் மூத்த உறுப்பினர்களான அஷ்ஷைக் எம்.எச்.எம். புர்ஹான், அஷ்ஷைக் எஸ்.எல். நவ்பர் உட்பட அஷ்ஷைக் எம்.எஸ்.எம். நாளிம், அஷ்ஷைக் ரிபாஹ் ஹஸன், அஷ்ஷைக் எம்.என்.எம். ஸைபுல்லாஹ் ஆகியோரும் முஸ்லிம் கவுன்ஸில் சார்பாக அதன் தலைவர் என். எம். அமீன், செயலாளர் எம்.டீ.எம். ரிஸ்வி, உறுப்பினர்களான முப்தி ஹாஷிம் மற்றும் டாக்டர் மரீனா தாஹா ரிபாய் ஆகியோரும் கலந்து கொண்டனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.08.08
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5200
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,396,424.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 5 6 3 9 2 2

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
சீட்டிழுப்பு திகதி 2023-08-08
509
ரூ. 4,379,329.80
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 27 34 36 37
விசேட இலக்கினம் மீனம்

லக்கி Lucky 7
திகதி 08.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0026
வெற்றி இலக்கினம் மிதுனம்
L7 இலக்கம் 1 0
வெற்றி இலக்கங்கள் 5 7 5 6 5 0
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு
ரூ. 10,699,319.04

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3442
சீட்டிழுப்பு திகதி 2023.08.08
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 71,827,513.60
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 45 46 49 77
விசேட எழுத்து U
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 31716

தன நிதானய
தேதி 2023/08/08
சீட்டிழுப்பு இலக்கம் 1230
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,832,620.80
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 21 25 26 52
விஷேசட ஆங்கில எழுத்து A
Double Chance இலக்கம் 32898

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1548
08/08/2023
Double Chance 03009
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 403,480,636.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து E
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 12 26 36 47

# கிழக்கின் குரல்



## வங்கிகள், நிதி நிறுவனங்களின் முகாமையாளர்களுக்கு

# நிதி பாதுகாப்பு தொடர்பாக பொலிசாரால் ஆலோசனை

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)





மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குப்பட்ட பகுதியில் இயங்கிவரும், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் முகாமையாளர்களுக்கு, நிதி பாதுகாப்பு தொடர்பாக களுவாஞ்சிகுடி பொலிசாரால் ஆலோசனை வழங்கும் நிகழ்வு செவ்வாய்கிழமை (08) களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும், வங்கிகள், நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட பல நிதி தொடர்பில் மக்களுக்கு சேவையாற்றிவரும் அமைப்புக்களின் முகாமையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இலகுவாக கொள்ளையில் ஈடுபடும் இடங்களாக வங்கிகள், நிதிநிறுவனங்கள் மற்றும் நகைக்கடைகள் என்பன காணப்படுகின்றன. அந்த வகையில் குற்றவாளிகள் எவ்வாறு கொள்ளையில் ஈடுபடலாம், நிதி நிறுவனங்களுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் எவ்வாறு உட்புகுவது, எவ்வாறு வெளியேறுவது, என்பது தொடர்பில் முன்னரே ஆராய்ந்து கொள்வதோடு, அவர்கள் கொள்ளைகளுக்காக நவீன தொழில் நுட்பங்களையும், பயன்படுத்துகின்றார்கள்.

தன்னியக்க நிதிப் பரிமாற்றல் (ஏரிஎம், சிரிஎம்) இயந்திரங்களிலும், முகமூடி, ஜக்கட், தலைக்கவசம், போன்வற்றையும் அணிந்து சென்று கொள்ளையிடுகின்றார்கள்.

இவைகள் தொடர்பில் நிதி நிறுவனங்களின் முகாமையாளர்கள், உத்தியோகஸ்த்தர்கள், பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்கள் உள்ளிட்ட அனைவரும் மிகவும் விழிப்புடன் செயற்படல் வேண்டும். குறிப்பாக இரவு நேரக் கடமையில் ஈடுபடும் பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்கள் மிகவும் உன்னிப்பாக செயற்படல் வேண்டும்.

நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கு மேலதிக பாதுகாப்புத் தேவை என கருதினால், எதுவித தயக்கமுமின்றி 24 மணி நேரமும் எமது பொலிஸ் நிலையத்தை நாடலாம், என இதன்போது களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.




மருதமுனை முனாஸ் எழுதிய 'புதிய நெருடல்கள்' நூல் வெளியீட்டு விழா 05ஆம் திகதி சனிக்கிழமை பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந் விழாவில், கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏம்.எஸ்.எம்.ஹாரிஸ் முதன்மை பிரதியை நூலாசிரியர் ஏ.எம்.முனாஸிடமிருந்து பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம். (படம்:மருதமுனை தினகரன் நிருபர்)

## கல்முனையில் கணவனை இழந்த பெண்ணுக்கு வீடு வழங்கி வைப்பு



(பெரியநீலாவணை விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கீழ் பாண்டிருப்பில் வசித்து வரும் கணவனை இழந்த மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவருக்கு 15 இலட்சம் ரூபா பெறுமதியான வீடு திங்கட்கிழமை (07) கையளிக்கப்பட்டது.

சென்ட்ரல் பினான்ஸ் கல்முனை முகாமையாளர் ரி. அனோஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பிரதம அதிதியாகவும், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஜே.அதிசயராஜ் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு பயனாளியிடம் வீட்டை கையளித்தனர்.

சென்ட்ரல் பினான்ஸ் நிறுவனத்தின் வடக்கு கிழக்கு பிராந்திய அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் நிதி பங்களிப்பில் இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கல்முனை இராணுவ முகாம் கட்டளை அதிகாரி உதித்த களுவாராச்சி சிறப்பு அதிதியாக கலந்து கொண்டதுடன், சென்ட்ரல் பினான்ஸ் வடக்கு, கிழக்கு பிராந்திய முகாமையாளர் பாலசுந்தரம் கமலநாதன், முன்னாள் பிராந்திய விற்பனை முகாமையாளர் ஆறுமுகம் சிறிதர், பிராந்திய விற்பனை முகாமையாளர்களான பிரதிப் பத்தமராசா, அன்ரனி சிவராஜா உட்பட அரச உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலர் இதில் கலந்து கொண்டனர்.

## புதிய தொழில் நுட்பத்தின் ஊடாக உணவு உற்பத்தி செயல்முறை பயிற்சி



இறக்காமம் தினகரன் நிருபர்

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பிரிவு மாணவர்களினால், ஏற்பாடு செய்யப்பட்ட புதிய தொழில் நுட்பத்தின் ஊடாக உணவு உற்பத்தி செயல்முறை பயிற்சி, இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (08) இடம் பெற்றது.

இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி எம். என். எப். றக்ஸா அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வை, விவசாய போதனா ஆசிரியர்களான எஸ். ஏ. எல். பஹ்மி அஹமட் மற்றும் எஸ். ஏ. முஹம்மது அஸ்ஹர் ஆகியோர்களின் வழிகாட்டலில் இடம்பெற்றது.

இதன் போது இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மற்றும் வரிப்பத்தான் சேனை அல் அமீன் மகா வித்தியாலயத்தின் உயர்தர தொழில்நுட்ப பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தொழில் நுட்பத்தின் கூடிய பல்வேறு செயல்முறை பயிற்சி வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக விடயத்துக்கு பொறுப்பான விரிவுரையாளரும் பேராசிரியருமான அதபத்து, இறக்காமம் பிரதேச பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

## கிழக்கு ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு உலக வங்கி உதவி

### மாகாண கல்வி பணிப்பாளர் அகிலா

(காரைதீவு குறூப் நிருபர்)



கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக உலக வங்கியின் உதவியுடன் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டு வருகிறது. பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி திட்டம்(SBPTD) என்ற மகுடத்தின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

முன்னோடியாக மூதூர், பட்டிருப்பு, சம்மாந்துறை ஆகிய மூன்று வலயங்களில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் முன்னேற்ற அறிக்கை தொடர்பாக செவ்வாய்க்கிழமை (08) மூன்று வலயங்களுக்கும் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம், மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் எம்.எம். ஜவாத், பிரதி கல்விப் பணிப்பாளர் ஆர்.நிமலரஞ்சன் ஆகியோர் விஜயம் செய்து அதிபர் மற்றும் கல்வி சார் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடாத்தினர். சம்மாந்துறை வலயத்திற்கான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியில் வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் ஓய்வறை( staff room) என்பது இனிமேல் ஆசிரியர் அபிவிருத்தி பிரிவு (Teacher development unit) என்று மாற்றப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

## தமிழ் பிரதேசங்களில் சிங்கள மொழியில் விண்ணப்பப் படிவம்

(கல்முனை விசேட நிருபர்)

வெளிநாடுகளில் தொழில்புரியும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு 10,000 ரூபா பெறுமதியான பொதி வழங்கும் திட்டத்திற்காக, அம்பாறை மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் ஊடாக விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவம், தனிச் சிங்கள மொழியில் இருப்பதால், தமிழ் பேசும் பயனாளர்கள் இதனை நிரப்பிக் கொள்ள முடியாமல் திண்டாடி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் அதிகமான பிரதேச செயலகங்கள் தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாக கொண்டவையாகும். முன்னதாக தமிழ் மொழி மூல விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

எனினும் சில தினங்களின் பின்னர் தமிழ் மொழி மூல விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும் எனக் கூறி, தனிச்சிங்கள மொழி மூலமான விண்ணப்பப் படிவம் வழங்கப்பட்டிருப்பதுடன், அதனையே பூர்த்தி செய்து தருமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களினால் கோரப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் குறித்து மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளும், அரசியல் மற்றும் சிவில் சமூக பிரமுகர்களும் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என பாதிக்கப்பட்ட பயனாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.





பொத்துவில் பிரதேச பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட ஆங்கில தினப்போட்டியில் பொத்துவில் மினாறுல் உலூம் வித்தியாலய மாணவர்கள் முதலாம், இரண்டாம் இடங்களை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். அம் மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. இதன்போது பாடசாலை அதிபர் ஏ.தாஜஹான் மாணவர்களுக்கு மாலை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். (படம்;பாலமுனை விசேட நிருபர்)

## அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளராக நியமனம்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



கல்முனை வலய பணிமனையில் கடமையாற்றிய பொறியியலாளர் ஏ.எம்.ஸாஹிர் பதவி உயர்வுபெற்று, அம்பாரை மாவட்ட பிரதம பொறியியலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

கல்முனை கட்டடத் திணைக்களத்தில் பிரதம பொறியியலாளராக நீண்ட காலம் சேவையாற்றிய இவர், நேற்று (09) புதன்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் கடமையேற்பு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், சமூக சேவைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய அபிவிருத்தி சபையின் செயலாளராகவும், சாய்ந்தமருது நலன்புரி அமைப்பின் (SWF) செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

இவர் இளைஞர்களின் கல்வி நடவடிக்கைகளிலும் அவ்வப்போது தனது பங்களிப்பை செய்து வருகின்றமை அவரது பணிகளில் ஒன்றாகும்.

## விசேட தேவையுடையவர் ஒருவர் ஆற்றில் மூழ்கி உயிரிழப்பு

பாசிக்குடா நிருபர்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் காயான்கேணியில் செவ்வாய்க்கிழமை (8) விசேட தேவையுடையவர் ஒருவர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

காயான்கேணி வட்டவானைச் சேர்ந்த இ.இரத்தினவேல் வயது (47) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அருகில் உள்ள கடற்கரைப் பகுதிக்கு சென்று வீடு திரும்பும் வழியில் இராலோடைக்கும், வட்டவான் ஆகிய இரு கிராமங்களுக்கிடையில் ஊடறுத்துச் செல்லும் ஆற்றினை கடந்து வரும் போது இவர் உயிரிழந்துள்ளார்.

திடிரென அவருக்கு ஏற்பட்ட வலிப்பு நோய் காரணமாக நீரினுள் வீழ்ந்து மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கினறனர். நேரமாகியும் வீடு திரும்பாமை குறித்து உறவினர்கள் தேடிய போது குறித்த ஆற்றுப் பகுதியில் அவரது சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

சடலம் பொலிசாரின் உதவியுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக உறவினாகள் தகவல் தெரிவித்தனர்.





அக்கரைப்பற்று வலயமட்ட "சிங்கள தின" நிகழ்வு, அட்டாளைச்சேனை ஸஹ்றா வித்தியாலயத்தில் புதன்கிழமை (09) நடைபெற்றது. நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் உரையாற்றுவதையும், கலந்து கொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம்.

படம்;பாலமுனை தினகரன் நிருபர்

## சாய்ந்தமருது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு விளக்கமறியல்

(கல்முனை விசேட நிருபர்)

பெண்ணொருவருக்கு வட்ஸ் அப்ஸ் ஊடாக ஆபாசப் படங்களை அனுப்பி பாலியல் ரீதியில் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில், கைது செய்யப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர், ஆபாச புகைப்படங்களை பல தடவைகள் இப்பெண்ணின் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வந்திருப்பதுடன், தனது ஆசைக்கு இணங்குமாறு வற்புறுத்தி வந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

# நகர்வலம்



# வரட்சிப் பாதிப்புக்குள்ளான ஒரு ஹெக்டயார் தலா ஒரு இலட்சம் ரூபா நஷ்டஈடு

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவிப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



தற்போது ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை காரணமாக சேதமடைந்துள்ள பயிர்களுக்கு ஒரு ஹெக்டயாருக்கு 1 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த தொகை போதுமானதாக இல்லை எனவும் அதனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கஹட்டகஸ்திகிலிய கமநல சேவை திணைக்கள பகுதிக்குட்பட்ட நெலுகொல்லாகட மற்றும் குவுக்கொல்லாவ குளங்களின் புனரமைப்பு பணிகளை மேற்பார்வை செய்வதற்காக அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவுடன் நேற்று முன்தினம் (08) சென்றிருந்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

CSIAP செயற்திட்டத்தின் கீழ் 19 மில்லியன் ரூபா செலவில் குவுக்கொல்லாவ குளத்தின் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கு குளக் கட்டு, மதகு மற்றும் கால்வாய் அமைப்பு என்பன புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

7.3 மில்லியன் ரூபா செலவில் நெலுகொல்லாகட குளத்தின் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.அங்கு கால்வாய் அமைப்பு என்பன புனரமைப்பு செய்யப்படுகின்றன. மேற்படி குளங்களின் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதன் மூலம் கடந்த காலங்களைவிட எதிர்காலத்தில் பெரும்போக மற்றும் சிறுபோகங்களின் போது கூடுதலான காணிகளில் நெற்செய்கையினை மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

குளங்கள் புனரமைப்பு செய்யப்படும் போது கால்வாய் அமைப்பது தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் விவசாயிகள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதுடன் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு அமைய அதற்கான வசதிகளை செய்து கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேலும் அறுவடைகளை கொண்டு செல்வதற்கு காணி ஊடாக விவசாய பாதை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் விடுத்த வேண்டுகோளிற்கமைய நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் அங்கு விஜயம் செய்திருந்தனர்.

## பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸின்

# 'சிந்திப்போம்' நூல் வெளியீடு இன்று





பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எழுதிய 'சிந்திப்போம்' பத்திகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று (10) மாலை 4.00 மணிக்கு கொழும்பு 7 இல் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கை மிகவும் உன்னத மற்றும் செழுமை மிகு நிலைமையை அடைய வேண்டும் என்ற உயர்ந்த எதிர்பார்ப்போடு முற்போக்குப் பார்வை நோக்குடன் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் சில காலமாக தேசிய பத்திரிகையொன்றுக்கு எழுதிய பத்திகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகிறது.

முன்னதாக பல்வேறு துறைகளை அடிப்படையாகக் கொண்டு அவர் ஐந்து படைப்புகளை இலக்கியத்துறைக்கு சமர்ப்பித்துள்ளர். 'சிந்திப்போம்' நூல் வெளியீட்டு நிகழ்வொன்று 50 சதவீதம் விசேட விலைக்கழிவுடன் இந்நூலை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# அம்பலாந்தோட்டை அல் அக்பரில் சின்னம் சூட்டும் நிகழ்வு



**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

அம்பலாந்தோட்டை, மெலேகொலனி அல் அக்பர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் இவ்வருட மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஐ. ஆர். மொஹமட் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் (07) நடைபெற்றது.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக ஹம்பாந்தோட்டை இந்திய துணைத்தூதரக துணைத்தூதுவர் திபின் பீ. ஆர் மற்றும் கௌரவ அதிதியாக பாடசாலையின் பழைய மாணவி டொக்டர் பஸ்மினா அரூஸ் கலந்து சிறப்பித்தனர். இவர்களுடன் சட்டத்தரணி எஸ். எம். ரிஸாம், பிரதி அதிபர் அஷ்ஷெய்க் அல் ஹாபிழ் எம். ஏ. பஸ்லான், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு; அரசாங்கம் ரூ. 50 மில். நிதி ஒதுக்கீடு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் இம்முறை சிறுபோக நெல் அறுவடையின்போது கிடைக்கும் நெல்லினை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்காக வேண்டி ஐம்பது மில்லியன் ரூபா நிதியினை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் அநுராதபுரம் மாவட்ட முகாமையாளர் டீ.எம்.என். தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளை மையப்படுத்தி நெல் கொள்வனவு செய்யும் மத்திய நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. இதன் மூலம் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பெரிதும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நெல் சந்தைப்படுத்தும் சபையினால் நெல்லினை கொள்வனவு செய்யும் மத்திய நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் தமது நெல்லினை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்குமாறும் முகாமையாளர் விவசாயிகளை கேட்டுள்ளார்.

## கணித திறன் விருத்தி போட்டி

# நேகம மு. வித்தியாலயத்திலிருந்து மூன்று மாணவர்கள் தெரிவு

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

வட மத்திய மாகாண மட்டத்தில் நடைபெறும் பாடசாலைகளுக்கிடையிலான கணித திறன் விருத்தி வினா விடைப் போட்டியில் கலந்து கொள்வதற்காக கெகிராவ கல்வி வலய நேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து மூன்று மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் எச். ராஜி ஐனுல் ஹக் தெரிவித்தார்.

தரம் 06 பிரிவில் எஸ்.எப். சுக்ரியா, தரம் 08 பிரிவில் ஆர். எப். ஹப்சா, தரம் 11 பிரிவில் எம். எஸ். துபைல் அகமட் ஆகிய மூன்று மாணவர்களுமே தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

மேற்படி மாணவர்கள் மூவரும் கெகிராவ கல்வி வலயத்திலுள்ள பலாகல, இபலோகம, கெகிராவ, பளுகஸ்வெவ ஆகிய நான்கு கோட்டத்திலும் உள்ள தமிழ், சிங்கள இரு மொழிப் பாடசாலைகளிலிருந்தும் வலயத்திலிருந்து இந்த மூன்று மாணவர்களும் அதிகூடுதலான புள்ளிகளைப் பெற்று மாகாண மட்டத்தில் நடைபெறும் கணித திறன் விருத்தி வினா விடைப் போட்டியில் கலந்து கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாழைத்தோட்டம் மஸ்ஜிதுல் முனீரில் மாணவர்கள் கௌரவிப்பு



**ஏ.எஸ்.எம். ஜாவித்**

கொழும்பு, வாழைத்தோட்டம் மஸ்ஜிதுல் முனீர் மத்ரஸாவின் அல்குர்ஆன் பயிற்சிகளை முடித்த மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் நினைவுச்சின்னங்கள் மற்றும் பரிசில்கள் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

மௌலவிகளான ரயிசுத்தீன் மற்றும் சிஹாப்தீன் ஆகியோரின் வழி நடத்தலில் பள்ளிவாசலின் தலைவர் ஜஹாங்கீர் அலி தலைமையில் பள்ளிவாசலில் இடம் பெற்ற நிகழ்வில், 44 மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் உஸ்தாத்மார்களுக்கும் பள்ளிவாசல் நிர்வாகமும் பெற்றோர்களும் இணைந்து கௌரவித்தனர்.

இதன்போது விசேட பேச்சாளராக கலாநிதி நியாஸ் மௌலவி பவுண்டேசனின் நலன்புரிச் சங்கத் தலைவர் மௌலவி எல்.எம். லமீர் ஹாபிழ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

கதிர்காமம் காமினிபுர பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்று கொண்டிருந்த நபரொருவர் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் இன்னொரு சைக்கிளுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த நபர் பாரிய காயங்களுக்குள்ளாகி திஸ்ஸ மகாராமை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்பு உயிரிழந்துள்ளதாக திஸ்ஸமகாராமை பொலிஸார் தெரிவித்தனர்.

# எங்களிடம் ஒப்படைத்திருப்பது பணிப்பாளர் பதவியை அல்ல; உங்கள் பிள்ளைகளை

## பிள்ளைகளின் நலன்கருதியே தீர்மானங்கள் எடுப்போம் - புத்தளம் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**





“எங்களிடம் ஒப்படைத்திருப்பது பணிப்பாளர் பதவியை அல்ல; மாறாக உங்கள் பிள்ளைகளை. அதனால் நாம் எடுக்கும் தீர்மான முடிவுகளை பிள்ளைகளின் நலனைக் கருத்திற்கொண்டு எடுக்க வேண்டும் என புத்தளம் கல்விப் பணிப்பாளர் ஏ.எச்.எம். அர்ஜுன தெரிவித்தார்.

மூன்று கல்விப் பணிப்பாளர்களையும் வரவேற்று கௌரவிக்கும் வைபவம் புத்தளம் முஹைதீன் ஜும்ஆ பெரிய பள்ளியின் கல்விக் குழுவின் தலைமையில் புத்தளம் சிவில் சமூகத்தின் பங்களிப்புடன் புத்தளம் பெரிய பள்ளிவாசலில் அண்மையில் நடைபெற்றது.

பிரதி கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து பணிப்பாளர்களாக பதவி உயர்வுடன் புதிய நியமனம் பெற்ற புத்தளம் வலய கல்விப் பணிப்பாளர் ஏ.எச்.எம். அர்ஜுன,

மாஹோ வலய கல்விப் பணிப்பாளர் ஆர்.எம்.ஐ.எம். அலி ஜின்னா, இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் புத்தளம் கற்கை நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பி. திவாகர் ஆகியோரே கௌரவிக்கப்பட்டனர். புத்தளம் வலய கல்விப் பணிமனையின் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர்கள், புத்தளம் பெரிய பள்ளியின் கல்விக் குழுவின் உறுப்பினர்களுடன் சமூக செயற்பாட்டாளர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்து இங்கு உரையாற்றிய கல்விப்பணிப்பாளர் அர்ஜுன,

18 வருடங்களாக புத்தளம் கல்விப் பணிமனையில் பல்வேறு பிரிவுகளில் நாங்கள் பணியாற்றியதோடு புத்தளத்தில் பிறந்தவர்கள் என்ற அடிப்படையில் புத்தளம் என்ற சிந்தனையுடன் பிள்ளைகளுக்கு நலனை செய்வோம் என்ற எண்ணத்தில் ஒரே குழுவாக களம் இறங்கியுள்ளோம்.

புத்தளம் நகர பெற்றோர் மத்தியில் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். இவ்வளர்ச்சி நகரைச் சூழவுள்ள பாடசாலைகளுக்கும் பரவச் செய்ய அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அதற்கு புத்தளம் சமூகத்தின் ஒத்துழைப்பு இன்றியமையாது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஏனைய கல்வி வலயங்களை விட பின்தங்கிய நிலையில் இருக்கும் புத்தளம் கல்வி வலயத்தை முதல்நிலைக்கு கொண்டுவர முடியுமென்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



# மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் மரநடுகை



**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

குறுகிய காலத்தில் கூடிய பலனைப் பெற்றுத் தரக்கூடியதான 100 கமுகு மரக்கன்றுகள் நடும் நிகழ்வு மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் ஏ.ஸீ.எம். றிப்கான் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வைத்தியர் ஷோபாத் விஜேரத்ன கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தனது உரையில், 'கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு வருமானம் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதே இதன் நோக்கமாகும்' எனக் குறிப்பிட்டார்.

அதிபர் ஏ.ஸீ.எம்.றிப்கான் உரையாற்றுகையில், ஏற்பாட்டாளரான வைத்தியர் ஷோபாத் விஜேரத்ன உள்ளிட்ட "தம்ரிவி" அமைப்புக்கு நான் மாணவர்கள் சார்பில் நன்றி கூறுகிறேன். வரட்சியான காலங்களிலும் பாடசாலைச் சூழலை குளிர்ச்சியாகவும், அழகாகவும் வைத்திருக்க இம்மரங்கள் துணை புரியும்' எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் செயற்றிட்ட அதிகாரி ஏ.யூ.மான்னகே உள்ளிட்ட அமைப்பின் அங்கத்தவர்களும், சமூக சேவகர் கே.கனகர், மத்துகம வலயக் கல்விக் காரியாலய அபிவிருத்தி அதிகாரிகளான ஆர்.ஏ.ஜீ.எஸ்.ரணவீர, ஆர். எஸ்.எல்.ஆர்.செவ்வந்திகா, எம். ஜீ.ஜீ.ரீ.கமஎதிகே, களுத்துறை மற்றும் மத்துகம பிரதேச செயலக பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் அதிகாரிகளான பீ.வனராஜ், எம்.பீ.எப். நுலாரா, எம்.என்.எப்.முர்ஸினா ஆகியோரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலைக்கழகத்தில் சர்வதேச தமிழியல் மாநாடு







**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தமிழ் துறையால் நடத்தப்பட்ட சர்வதேச தமிழியல் மாநாடு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையுடன் (08) இனிதே நிறைவுற்றது.

'சமூக கட்டுமானத்தில் சங்கமருவிய கால அற இலக்கியங்கள்' எனும் தொனிப்பொருளின் கீழ் தமிழ்த்துறை தலைவர், பேராசிரியர் கி.விசாரூபன் தலைமையில் இந்த மாநாடு கடந்த திங்கட்கிழமை (07) ஆரம்பமாகி நேற்று முன்தினம் (08) வரை இரண்டு நாட்கள் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்த தமிழியல் மாநாட்டில் சிறப்புரைகள், ஆய்வுக்கட்டுரை தொகுதி வெளியீடுகள், புலமையாளர் கௌரவிப்பு, ஆய்வரங்க அமர்வுகள் மற்றும் கலை நிகழ்வுகள் உள்ளிட்டவையும் நடைபெற்றன.

## மீனவர்களை விளக்கமறியலில் வைக்க முல்லை. நீதிமன்றம் உத்தரவு

**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தண்ணிமுறிப்புக்குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது ஏற்பட்ட முறுகல் நிலைமையில் கைது செய்யப்பட்ட 44 மீனவர்களுக்கு மீண்டும் விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீனவர்களை இம்மாதம் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ரி.பார்த்தீபன் உத்தரவிட்டுள்ளார்.

இந்த மீனவர்களுக்கு ஏற்கெனவே விளக்கமறியல் வழங்கப்பட்ட நிலையில், மீண்டும் இவர்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (08) நீதிமன்றத்தில் பொலிஸார் முற்படுத்திய போதே, இந்த மீனவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

தண்ணிமுறிப்புக்குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டபோது, முறுகல் நிலை ஏற்பட்ட நிலையில், கடந்த சனிக்கிழமை (05) இந்த 44 மீனவர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில் பிறப்பு பதிவின்றி 15 சிறுவர்கள்

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் பிறப்பு பதிவின்றிய 15 சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (08) நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்ற வழக்குகள், தாய் தந்தை முரண்பாடு உள்ளிட்டவைகளால் இச்சிறுவர்களுக்கு பிறப்பு பதிவு மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த காலாண்டில் பிறப்பு பதிவின்றிய 104 சிறுவர்கள் காணப்பட்ட போதும், தொடர் முயற்சிகளுக்கு பின்னர் 89 பேருக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். ஆலய சூழலில் குழந்தைகளுடன் யாசகம் பெறுவதை தடுக்க தீர்மானம்

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி கோயில் உட்பட பிரசித்தி பெற்ற கோயில்களில் மஹோற்சவ திருவிழாக் காலத்தில், யாசகம் பெறுவதை தடை செய்யும் நோக்கில் இறுக்கமான கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், குழந்தைகளை வைத்துக்கொண்டு யாசகத்தில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்துவதற்கு முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.



சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (08) கூட்டம் நடைபெற்ற போதே, இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டது.

திருவிழா நடைபெறும் வேளையில் கோயில் வீதிகளில் யாசகம் பெறும் நடவடிக்கை இடம்பெறுவதுடன், சிலர் குழந்தைகளை வைத்துக்கொண்டும் யாசகத்தில் ஈடுபடுவதாகவும் இதனால், கோயிலுக்கு வரும் பக்தர்கள் இடையூறை எதிர்நோக்க நேரிடுவதாகவும் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. ஆகையால், கோயில் சூழலில் குழந்தைகளுடன் யாசகம் பெறுவதை தடை செய்வது தொடர்பாக கூட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

செல்வச்சந்நிதி கோயிலின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா இம்மாதம் 16ஆம் திகதியும் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா இம்மாதம் 21ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளது.

# வடக்கின் உதயம்

## நெடுந்தீவில் கைதான தமிழக மீனவர் ஒன்பது பேருக்கு சிறைத்தண்டனை

**யாழ். விசேட நிருபர்**

யாழ். நெடுந்தீவில் கைதான 9 தமிழக கடற்றொழிலாளர்களுக்கும் ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதித்த ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம், அதை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 9 கடற்றொழிலாளர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, மறுநாள் 26ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது, இவர்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (08) வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இவர்களை நேற்று முன்தினம் மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே, மேற்படி தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இழுவைமடி பயன்பாடு, அனுமதியின்றி கடற்றொழிலில் ஈடுபட்டமை மற்றும் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்தமை ஆகிய 3 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த 9 பேரையும் குற்றவாளியாக நீதிமன்றம் கண்டது.

19 வயது யுவதியின் 54 வயது காதலர் கொலை

## யாழ்ப்பாணத்தில் கைதான 6 பேருக்கு விளக்கமறியல்

**யாழ். விசேட நிருபர்**

19 வயதுக் காதலியுடன் சென்ற 54 வயது குடும்பஸ்தரை அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேரை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ். சுன்னாகம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இவர்கள் இருவரும் காதல் வயப்பட்டு, தங்களது வீடுகளை விட்டுச் சென்று வேறொரு இடத்தில் தங்கியிருந்துள்ளனர். இந்நிலையில், இவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைப்பதாக இவர்களின் வீட்டார் தெரிவித்ததையடுத்து, இருவரையும் ஊருக்கு வரவழைத்து, மரத்தில் கட்டி வைத்து தாக்கியுள்ளனர்.

இதன்போது, 54 வயது குடும்பஸ்தர் உயிரிழந்ததுடன், காயமடைந்த பெண் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணையை முன்னெடுத்த சுன்னாகம் பொலிஸார், 6 சந்தேகநபர்களை சம்பவ தினமான கடந்த திங்கள் (07) இரவு கைது செய்து, நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய் (08) முன்னிலைப்படுத்திய போதே, இவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் இருவரை நேற்று முன்தினம் சுன்னாகம் பொலிஸார் கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ். கட்டைக்காட்டு விபத்தில் இளைஞர் பலி

**நாகர்கோவில் விசேட, யாழ்ப்பாணம் குறூப் நிருபர்கள்**



யாழ்ப்பாணம், கட்டைக்காடு இராணுவ முகாமுக்கு அருகில் மோட்டார் சைக்கிளொன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில், 22 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (08) நள்ளிரவு 11.00 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதுடன், இதில் மன்னாரின் முள்ளிக்குளம், மருதகட்டி பிரதேசத்தைச் சேர்ந்த செபமாலை நிரோஜன் எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இளைஞர், உடனடியாக அம்பியூலன்ஸ் வண்டியில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும், அவர் உயிரிழந்து விட்டதாக, வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் விரிவான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கை, இந்திய ஆளுமைகளை கௌரவிக்கும் முகமாக கத்தாரில் விருது வழங்கல் விழா

இலங்கை மற்றும் இந்திய ஆளுமைகளை கௌரவிக்கும் முகமாக விருது வழங்கும் விழாவொன்றை கத்தாரில் மூன்று அகவைகள் கடந்து இயங்கிவரும் ஸ்கை தமிழ் ஊடகம் நடத்தவுள்ள நிலையில், இதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இதற்காக இம்மாதம் 31ஆம் திகதிவரை விண்ணப்பிக்க முடியும். அல்லது, www.skytamilnews.com/awards இணையத்தளத்தினுடாக உங்களது விபரங்களை சமர்ப்பிக்க முடியுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.




இதற்கான ஊடக அனுசரணையை தினகரன் பத்திரிகை, தினகரன் வார மஞ்சரி பத்திரிகை வழங்கியுள்ளது. கத்தாரில் பணிபுரிந்து திறமைகளை வெளிக்காட்டியவர்களுக்கு விருது வழங்கப்படவுள்ளது. திறமைகளை கௌரவிக்கும் முகமாக சாதனை விருது, பெண்கள் சிறப்பு விருது, ஆண்டின் வணிகத் தலைவர் விருது, சிறந்த புகைப்படக் கலைஞர் விருது, சிறந்த எழுத்தாளருக்கான விருது, சிறந்த ஊடகவியலாளர் விருது, சிறந்த கலைஞர் விருது, சிறந்த அறிவிப்பாளர் விருது, இளம் சாதனையாளர் விருது, விவசாய ஊக்குவிப்பு விருது, சிறந்த டிஜிட்டல் கற்றல் கண்டுபிடிப்பு விருது, சிறந்த சமூக ஊடக செல்வாக்கு விருது என்று 12 பிரிவுகளாக விருது வழங்கப்படவுள்ளது. விருது வழங்கும் விழா கத்தாரில் மிகப் பிரம்மாண்டமாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு உளவள பயிற்சி

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு உளவள பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, யாழ். மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (08) மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறுவர் அபிவிருத்தி எனும் போது, முதலில் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களுக்கு உளவள பயிற்சி தேவை. நாளாந்த செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஆசிரியர்களுக்கு உளவளப் பயிற்சி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக வடமாகாண கல்வி பணிப்பாளருடன் தான் கலந்துரையாடியுள்ளதாகவும் தனியார் நிறுவனமூடாக இந்தப் பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இயக்கச்சியில் தொடரும்

## சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க மக்கள் வேண்டுகோள்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு தொடர்ந்து இடம்பெற்று வருவதாக, பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடல் மட்டத்திலிருந்து வெறுமனே ஒன்றரை மீற்றர் உயரம் கொண்ட இயக்கச்சி பிரதேசத்தின் ஆற்று சமவெளி பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் ஆயிரக்கணக்கான லோட் மணல் அகழப்பட்டு யாழ்ப்பாணத்தை நோக்கிக் கொண்டு செல்லப்படுவதாகவும், அம்மக்கள் தெரிவித்தனர்.

இந்த மணல் அகழ்வை உடனடியாக தடுக்கா விட்டால் மிக விரைவில் இயக்கச்சி பிரதேசத்தின் நிலம் உவர் நிலமாக மாற்றமடைந்து, மக்கள் வாழ முடியாத சூழல் ஏற்படுமெனவும், பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனவே, இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு, விரைவாக மணல் அகழ்வை தடை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும், அம்மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



யாழ். பிரதேச செயலகத்தில்

## விழிப்புலனற்றோர் வெள்ளைப் பிரம்பை பயன்படுத்தும் பயிற்சி

**பருத்தித்துறை விசேட நிருபர்**

பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயிலும் விழிப்புலனற்ற மாணவர்களுக்கு வெள்ளைப்பிரம்பை பயன்படுத்தி நடப்பதற்கான பயிற்சியை வழங்கும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்வொன்று, யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் நேற்று புதன்கிழமை (09) நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.சுதர்ஷன் தலைமையில், வெள்ளைப்பிரம்புகள் மற்றும் சீருடைகள் விழிப்புலனற்ற மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் விழிப்புலனற்றோர் சங்க அமைப்புகளை சேர்ந்தோர், விழிப்புலனற்ற மாணவர்கள் கலந்துகொண்டனர். இந்த விழிப்புணர்வு நடவடிக்கை ஏனைய இடங்களிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது.



# பொது இணக்கப்பாட்டுடன் 13ஆவது அரசியலமைப்பை முன்னெடுப்போம்... 

(01ஆம் பக்கத் தொடர்)

அதிகாரம் போன்ற உணர்வு பூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் விடயம் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு கடினமானதாக அமையலாம். முதலில் ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் உடன்பாட்டுக்கு வந்து நாட்டின் எதிர்காலத்திற்காக 13 ஆவது திருத்தத்தை கட்டம், கட்டமாக செயற்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்காக காணாமல் போனோர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மூன்று மாதங்களுக்குள் பணிகளை நிறைவு செய்யும் நோக்கில் தரவு உள்ளீட்டை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். காணாமல் போனவர்களுக்காக சான்றிதழ் வழங்குவதை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். 1987ஆம் ஆண்டில், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. நாட்டில் 36 வருடங்களாக மாகாண சபை முறைமை செயற்பட்டு வருகின்றது. எனினும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விதம் தொடர்பில் பல சிக்கல்கள் உள்ளன. அத்துடன் மாகாண சபைகள் தொடர்பிலும் பல பிரச்சினைகள் உள்ளன.

நாம் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எமது நாட்டின் அபிவிருத்திக்கும் எதிர்காலத்திற்கும் ஏற்ற வகையில் 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், இந்த பாராளுமன்றத்தில் நாம் அனைவரும் வெளிப்படையாகவும் நடுநிலையாகவும் ஆழமாக கலந்துரையாடிய பின்னர் ஒரு உடன்பாட்டிற்கு வந்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். அதனால்தான், அண்மையில் சர்வகட்சி மாநாட்டை ஏற்பாடு செய்தோம்.

இந்த மாநாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

இம்மாநாட்டில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக எங்களால் முழுமையான உடன்பாட்டை எட்ட முடியவில்லை. அதிகாரப் பரவலாக்கத்திற்கான ஒரு குறிப்பிட்ட தேசிய வேலைத்திட்டம் பற்றி வெளிப்படையான கருத்துக்கள் எதுவும் அங்கு முன்வைக்கப்படவில்லை. சில அரசியல் கட்சிகள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க தயங்குவதும் விருப்பமில்லாமல் இருப்பதும் தெளிவாகியது. மாநாட்டில் பங்கேற்ற சில அரசியல் கட்சிகள் அவநம்பிக்கையை மனத்தில் வைத்துக் கொண்டு இதில் பங்கேற்றன. கடந்த காலங்களில் நடந்த சில சர்வகட்சி மாநாடுகளில் அவர்கள் பெற்ற அனுபவம் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

இனியாவது நாம் இந்த நிலையை மாற்றுவோம். அரசின் அனைத்து செயல்பாடுகளையும் எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சியின் பங்கு என்று நினைக்கும் மரபிலிருந்து விடுபடுவோம். எதிர்கட்சிகளின் கருத்தை பொருட்படுத்தாமல் செயல்படும் வழக்கத்திலிருந்தும் விலகி இருப்போம். நாம் அனைவரும் நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் செயல்படுகிறோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய பாதையில் முன்னேறினால் மட்டுமே நம் நாட்டை முன்னேற்ற முடியும். அந்த புதிய பாரம்பரியத்தை உருவாக்க நாங்கள் பாடுபடுகிறோம்.

நான், எப்பொழுதும் வலியுறுத்தும் ஒரு விடயத்தை இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். கடந்த காலத்தை கிளறிக் கொண்டிருக்காமல், எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்போம். உங்களுக்கும் எனக்கும் கசப்பான அனுபவங்கள் உண்டு. அது உண்மை. ஆனால் அவற்றை பற்றி பேசிக் கொண்டிருக்காமல் எதிர்காலத்தைப் பற்றி ஆராய வேண்டும். நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து, நேர்மையான நோக்கத்துடன் ஒன்றிணைந்து பொதுவான முடிவை எடுப்போம்.

13 ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகளை அமுல்படுத்துவதில் கடந்த 36 வருடங்களாக நாம் வெற்றி பெற்றுள்ளோமா? தோல்வியடைந்தோமா? அவ்வாறு வெற்றி பெறவோ தோல்வியடையவோ காரணங்கள் என்ன? நாம் இதைப் பற்றி பேசலாம். கலந்துரையாடுவோம். ஆழமாகப் நோக்குவோம். உலகின் புதிய போக்குகளைப் ஆராய்வோம்.

நமது பிராந்தியத்தில், இந்தியா மற்றும் சீனா போன்று மேற்கு நாடுகளான அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய பெரிய நாடுகளும் அதிகாரத்தை பரவலாக்கியுள்ளன. மேலும், பிரித்தானியா, நெதர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளும் அதிகாரத்தை பரவலாக்கியுள்ளன.

சீனாவிலிருந்து ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறேன். சீனாவின் சிறுபான்மையினர் மொத்த மக்கள் தொகையில் 9 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளனர். ஆனால் அவர்கள் இந்த சிறுபான்மையினருக்கு வலயங்கள்,கோரளைகள் மற்றும் மாநகரங்கள் போன்ற பல நிர்வாகக் கட்டமைப்புகளில் தன்னாட்சி அதிகாரங்களை வழங்கியுள்ளனர்.

தேசியக் கொள்கையின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் ஊடாக, உலகின் பல்வேறு நாடுகள் வெற்றி பெற்றுள்ளன. அந்த நாடுகளில் இருந்து படிப்பினை பெறுவோம். அதையெல்லாம் கருத்தில் கொண்டு நமது நாட்டிற்கு மிகவும் பொருத்தமான கட்டமைப்பை அடையாளம் காண்போம்.

மாகாண சபைகளுக்காக வருடத்திற்கு சுமார் 550 பில்லியன் ரூபாவை செலவிடுகிறோம். இந்த பணத்திற்கு மாகாண சபைகளினால் நியாயம் நடந்துள்ளதா? இந்த பணம் மக்கள் நலனுக்காக பயன்படுத்தப்பட்டதா? நாம் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய விடயமிது.

இலங்கையில் உள்ள ஒவ்வொருவரும் மாகாண சபையை பராமரிக்க 22,000 ரூபாவை செலவிடுகின்றனர். நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒரு மாகாண சபையை பராமரிக்க 88,000 ரூபாவை செலவிடுகிறது. அந்த பணத்திற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு பலன்கள் கிடைக்கிறதா? பல்வேறு அரசாங்கங்கள், பல நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்காக மாகாண சபை முறையை ஒழிக்க முடியாது.

மாகாண சபைகளுக்கும், மத்திய அரசாங்கத்திற்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையே உள்ள அதிகாரம் குறித்து தனித் தனியாக தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே, மாகாண சபைக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையிலான விடயதானங்கள் பொருந்தாமல் இருக்கிறது. பணியாற்றும் போது ஒருவருக்கொருவர்மோதிக்கொள்கிறார்கள். ஒரே பணி இரண்டு இடங்களில் செய்யப்படுகிறது. பணிகள் தாமதமாகிறன. மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு பதிலாக வளர்ந்து வருகின்றன.

இவ்வாறான காரணங்களினால், மாகாண சபைகளை வெள்ளை யானைகள் என்று கூறும் நபர்களும் நாட்டில் இருக்கின்றார்கள்.

எவ்வாறாயினும், அந்த அனைத்து குறைபாடுகளுக்கும் பலவீனங்களுக்கும் மத்தியில், மாகாண சபைகளை இலங்கையின் அரசியல் பாதையில் தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்திய கட்டமைப்பு என்று அழைக்கலாம். மாகாண சபைகள் திறமையான அரசியல் தலைவர்களை உருவாக்கும் மேடையாகவும் நிறைவேற்று அதிகாரம் மற்றும் பாராளுமன்றத்திற்கான நுழைவாயிலாகவும் மாறியுள்ளது. கடந்த காலங்களில் மாகாணசபை உறுப்பினர் பதவியிலிருந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்த பலர், நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் ஏனைய பொறுப்பான பதவிகளை வகித்த பல சந்தர்ப்பங்களை நாம் காண முடியும். இன்று இச்சபையில் அமர்ந்துள்ள அமைச்சர்களில் அநேகர், மாகாண சபை உறுப்பினர் தொட்டு முதலமைச்சர் பதவி வரை பல்வேறு பதவிகளை வகித்துள்ளனர்.

மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போது, சில அரசியல் கட்சிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தன. சில கட்சிகள் ஜனநாயக முறையிலும், சில கட்சிகள் ஜனநாயகத்திற்கு விரோதமாகவும் எதிர்ப்பு தெரிவித்தன. பல உயிர்கள் பலியாகின. நாட்டின் சொத்துக்களும் தேசிய வளங்களும் எரிக்கப்பட்டன. அது கடந்த காலம். ஆனால் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் எவையும், மாகாண சபைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்று கூறவில்லை. அந்த அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் மாகாண சபைகளை பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளனர்.

இங்கு இன்னொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். மாகாண சபை அதிகாரப் பகிர்வு, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இந்த நாட்டின் அதியுயர் சட்டமாகும். அதை நாம் புறக்கணிக்க முடியாது. நிறைவேற்று அதிகாரமும், பாராளுமன்றமும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான எனது முன்மொழிவுகளையும் எதிர்கால திட்டங்களையும் நான் இந்த சபையில் முன்வைக்கிறேன். அந்த பரிந்துரைகளை ஆழமாக ஆராயுங்கள். உங்கள் யோசனைகளை சமர்ப்பிக்கலாம். அந்தக் கருத்துக்கள் அனைத்தையும் ஆராய்ந்து, மாகாண சபைகளின் வகிபாகம் மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்து இறுதித் தீர்மானத்தை எட்ட வேண்டிய பொறுப்பு முழுவதுமாக இந்த கௌரவ சபையையே சாரும்.

முன்னேற்றகரமான ஜனநாயக நாடுகளில் புதிய போக்கு என்ன? மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்திற்கு பதிலாக பரவலாக்கப்பட்ட நிர்வாகத்தை உருவாக்குதல். அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார விடயங்கள் மக்களுக்கு நெருக்கமாக இருக்கும் வகையில் அதிகாரப் பரவலாக்கம். இதற்காக, உலகின் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அதிகாரப் பரவலாக்கம் என்பது நேரடி ஜனநாயகத்தை அணுகுவதற்கான ஒரு வழியாகக் கருதப்படுகிறது.

அனைத்து மக்களும் ஒன்றுகூடி முடிவெடுக்கும் நேரடி ஜனநாயகத்திற்குச் செல்லும் எந்த ஆட்சி முறையாலும் இயலாது. ஆனால் அரசியல், பொருளாதார மற்றும் சமூக செயல்பாட்டில் மக்களின் பங்கேற்பையும் விருப்பத்தையும் வெளிப்படுத்தும் வகையில் ஒரு நிறுவன கட்டமைப்பை உருவாக்க முடியும். மாகாண சபை முறைமை என்பது அதிகாரத்தை மக்களிடம் கொண்டு செல்லும் கட்டமைப்பாகும்.

அதுமட்டுமல்லாமல், அதிகாரத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்கான பல வழிமுறைகளை அண்மைக்காலமாக ஆரம்பித்துள்ளோம். துறைசார் குழுக்களைப் பலப்படுத்தப்படுத்தி, இதில் இளைஞர்களை இந்த நோக்கத்திற்காகவே இணைத்துக் கொண்டோம். மேலும், அடிமட்ட அளவில் மக்கள் ஆட்சியில் பங்கெடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மக்கள் சபைகளை நிறுவுவதற்கு நாம் பணியாற்றி வருகிறோம். ஜனசபை செயலகத்தை ஆரம்பித்தோம். மாதிரி சட்டசபைகள் அமைக்கப்பட்ட பின்னர், சட்டசபை சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுப்போம்.

இந்தப் பின்னணியில் மாகாண சபைகள் ஊடாக மக்களுக்கு அதிக அதிகாரத்தை கொண்டு செல்லும் வழிமுறைகளையும் திட்டங்களையும் தயாரிக்க வேண்டும் என நான் கருதுகின்றேன். அப்போதுதான் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் நிறுவனமாக மாகாண சபைகளைப் பயன்படுத்த முடியும்.

கடந்த சில வருடங்களாக பாராளுமன்றத்தின் பல்வேறு குழுக்கள், மாகாண சபைகள் மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்து ஆழமாக பரிசீலிக்கப்பட்ட பல ஆவணங்களை வெளியிட்டுள்ளன. அதில் ஒன்று எனது தலைமையிலான இலங்கை அரசியலமைப்பு பேரவையின் வழிநடத்தல் குழுவால் 2017 செப்டெம்பர் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையாகும். இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகளுக்கு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

அரசியலமைப்பின் 03, 04 மற்றும் 05 ஆகிய பிரிவுகளில் திருத்தம் செய்வது குறித்த பரிந்துரைகள் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த உத்தேச அரசியலமைப்பு திருத்தங்களை நாங்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கிறோம்.

பின்வரும் விடயங்கள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

01. மாகாண பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பான தேசிய கொள்கைகளை வகுப்பதில் மாகாண சபைகளின் பங்களிப்பைப் பெறுதல்.
02. மாகாண பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பான தேசியக் கொள்கைகளை உருவாக்குவதன் மூலம், மத்திய அரசாங்கத்திற்கு பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை கையேற்பது அல்லது மாகாண சபையால் செயல்படுத்தப்படும் நிறைவேற்று மற்றும் நிர்வாக அதிகாரங்களில் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வது.
03. மேற்படி பரவலாக்கப்பட்ட விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிறைவேற்று மற்றும் நிர்வாக அதிகாரங்கள் மாகாண சபைகளிடமே இருக்கும்.

இடைக்கால அறிக்கை குறித்து கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜாதிக்க ஹெல உறுமய, ஒன்றிணைந்த எதிர்க் கட்சி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜனாதிபதியின் சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் ஆவணங்களை சமர்ப்பித்தனர். அதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை மற்றும் மத்திய சுற்றயற் கூறு தொடர்புகள் பற்றிய உபகுழுவின் அறிக்கை என்பன குறித்தும் கவனத்திற்குக் கொள்ள வேண்டும்.

இந்த அனைத்து ஆவணங்களின் ஊடாகவும், மாகாண சபை முறைமை எமது ஆட்சி கட்டமைப்பில் இருந்து அகற்றப்பட முடியாத ஒரு நிறுவன கட்டமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வாகவோ அல்லது அதிகாரப் பரவலாக்கல் அலகாகவோ மாகாண சபைகளை ஏற்காத மக்கள் விடுதலை முன்னணியும், ஜாதிக்க ஹெல உறுமயவும் கூட மாகாண சபை முறைமையில் திருத்தப்பட வேண்டிய விடயங்களும் திருத்தப்படக்கூடாத விடயங்களும் இருப்பதை ஒப்புக் கொண்டுள்ளன.

இவையனைத்தின் ஊடாகவும் மாகாண சபையானது இலங்கையின் ஆட்சி முறையில் இருந்தும் அரசியலில் இருந்தும் அகற்ற முடியாத ஒரு நிலையான காரணியாக மாறியுள்ளது என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எட்ட முடிந்தால், தேசிய அடையாளத்தைப் பாதுகாத்து ஒரே தேசமாக எழுச்சி பெறவும், நாட்டின் அதிகாரத்தை மக்களிடம் நெருங்கிச் செல்லும் வகையில் பரவலாக்குவதற்கும் வாய்ப்பு கிடைக்கும். மாகாண சபை முறைமை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி ஒன்பது மாகாணங்களிலும் நிறுவப்பட்டன.

மாகாண சபைகளை சரியான பாதையில் வழிநடத்துவதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு பாதுகாக்கப்படுகிறது. மறுபுறம், இது மிகவும் திறமையான மற்றும் அதிக சேவை வழங்கும் நிறுவன கட்டமைப்பாக உறுதிப்படுத்த முடியும். பொது மக்களுக்கு நெருக்கமான வகையில் அதிகாரப் பரவலாக்கத்திற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, மாகாண சபை முறைமையை பொது மக்களுக்கு ஏற்ற, பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றும், நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் நிறுவனமாக மேம்படுத்துவதே எமது முதன்மையான நோக்கமாக இருக்க வேண்டும்.

இதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கும் வகையில், பல சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் முன்வைக்கவும், பல புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நான் முன்மொழிகிறேன்.

01. பிரதேச செயலாளர்கள் நியமனம்
02. கல்வி தொடர்பான சேவைகளை நடைமுறைப்படுத்த தேவையான அதிகாரத்தை மாகாண சபைக்கு வழங்குதல்.

மாகாண சபை பட்டியல் அட்டவணை 3, உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைக் கல்வி தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் செயற்படுத்துதல்.

03. தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பான சேவைகளுக்காக மாகாண மட்டத்தில் சபைகளை நிறுவுதல்
04. பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரமளித்தல்
05. விவசாயப் புத்தாக்கம் மற்றும் கீழ் மட்டத்திலான அனைத்து விவசாய சேவைகளையும் வழங்க மாகாண சபைகளுக்கு அதிகாரமளித்தல்
06. மாகாண சுற்றுலா மேம்பாட்டு சபைகளை நிறுவுதல்
07. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்கள் தொடர்பான வரையறையை ரூ. 04 மில்லியனில் இருந்து ரூ. 250 மில்லியனாக உயர்த்த கைத்தொழில்கள் சட்டத்தில் திருத்தங்களைச் சேர்த்தல்.

இந்த பாராளுமன்றம் உடன்படுமாக இருந்தால், இந்த எல்லையை ரூ. 500 மில்லியனாக உயர்த்த தயாராக உள்ளோம்.

08. மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட சில பணிகள் இன்னமும் மத்திய அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதால் அந்த தவறை திருத்துதல்
09. 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி மாவட்ட அபிவிருத்தி சபைகளை நிறுவுதல்

மத்திய அரசாங்கத்தின் தேசிய கொள்கைகளுக்கு அமைவாக ஒவ்வொரு மாகாண சபைகளும் மூன்று வருட அபிவிருத்தி திட்டத்தை தயாரித்தல். மத்திய அரசின் அபிவிருத்தித் திட்டங்களும் அந்தந்த அதிகார எல்லைகளுக்கு ஏற்ற வகையில் இந்தத் திட்டத்திற்குள் உள்வாங்க வேண்டும்.

இந்த மூன்றாண்டு திட்டத்தை மாவட்ட அபிவிருத்தி சபைகள் ஊடாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பை மாகாண சபைகளுக்கு வழங்குதல்.

**(நாளை தொடரும்)**


## இலங்கை வங்கி
## ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

1. கடன் வசதி தொடர்பு இலக்கங்கள் : 81507980, 81507077 மற்றும் 83217172

கொச்சிகடே, பல்லன்சேன, சில்வர் சான்ட் வீதி, "வஜயறுவன்" இல.35 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு.ரத்நாயக முதியான்சேலாகே றுவன் நளின் தனஞ்ஜய பெரேரா, திருமதி காலலகே பவித்ரா சானி நிம்ஷிகா பீரிஸ் மற்றும் திருமதி ரீட்டா மர்லின் பெரேரா அல்லது பெரேரா ரீட்டா மர்லின் ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக் சோஷலிசக் குடியரசின் 2019.06.07 ஆம் திகதி 2127 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.05.23 ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. M.H.T. கருணாரத்ன அவர்கள் 2023.09.19 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**
ஆதனம் 2

மேல்மாகாணம் கம்பஹா மாவட்டம் அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் நீர்கொழும்பு மாநகரசபை எல்லைகளுள் நீர்கொழும்பு பிரதேச செயலகப்பிரிவில் பல்லசேன வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பல்லசேன வடக்கில் அமைந்த "தல்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் என்.டீ.ஜீ.சீ.குணசேகர தயாரித்த 13.11.2005 திகதியிட்ட வரைபடம் இல.3078/Bல் துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் கே.வினிதாவின் காணியும், கிழக்கில் பாதையும், தெற்கில் நீர்கொழும்பிலிருந்து கொச்சிகடை வரை பெருந்தெருவும், மேற்கில் எலயும் எல்லைகளாகக் கொண்டு ஒரு நூற் பதினைந்து தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ1.பே15.10) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் G66/109ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**டப்லியு.கே.வி.என். பெர்ணாண்டோ**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**வைக்கால் கிளை**

உரிமைப் பத்திரங்களை பரிசோதிப்பதற்கு ஏலதாரர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதோடு முகாமையாளர், இலங்கை வங்கி, வைக்கால் கிளை எனும் தொலைபேசி இலக்கத்தின் 031-2277280 ஊடாக மேற்குறிப்பிட்ட சொத்துக்களுடன் தொடர்புடைய பிற ஆவணங்கள் தொடர்பாகவும் அறிந்துகொள்ளலாம்.



## இலங்கை வங்கி

**மத்திய மாகாணத்தில் பின்வரும் கிளை இடமாற்றத்திற்காக வாடகை அடிப்படையில் பொருத்தமான கட்டடமொன்று தேவைப்படுகின்றது.**

### கம்பளை நகரக் கிளை

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடமானது நகர மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதோடு, பிரதான வீதியிலிருந்தான அதன் முகப்பு குறைந்தபட்சம் 30 அடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 2800 - 3500 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கட்டடமாகவிருத்தல் வேண்டும்.
- 2x2 தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- போதுமான அளவு நீர் வழங்கல், மேலதிக நீருக்கான தாங்கி, 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், தொலைபேசி வசதிகள், மலசலகூட வசதிகள், அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாயில் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் இருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 10'x10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறையொன்று இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடத்துடன் மாதாந்த வாடகை உட்பட இயைபுடைய விபரங்களை பின்வரும் முகவரிக்கு 14 நாட்களுக்குள் அனுப்பவும்.

**உதவிப் பொது முகாமையாளர் (மத்திய மாகாணம்),**
**இலங்கை வங்கி, மத்திய மாகாண அலுவலகம்,**
**சீ பேங்க் கட்டடம், கண்டி.**
**தொலைபேசி இல. 081-2201444**



## இலங்கை வங்கி

### திஸ்ஸமஹாராம கிளை

**ஊழியர் உத்தியோகபூர்வ விடுதிக்காக பொருத்தமான வீடொன்று தேவைப்படுகின்றது**

**திஸ்ஸமஹாராம இலங்கை வங்கியிலிருந்து 500 மீற்றருக்குள் அமைந்துள்ள பின்வரும் வசதிகளைக் கொண்ட வீடொன்று குத்தகைக்குத் தேவை.**

- ஆகக்குறைந்தது 04 அறைகள், 02 இணைந்த மலசலகூடங்கள், உணவு அறை மற்றும் சமையலறை இருத்தல் வேண்டும்.
- மின்சாரம், நீர்த்தாங்கி சகிதமான நீர் வசதிகள், தரையோடு பதிக்கப்பட்ட தரைப் பரப்பு உட்பட அடிப்படை வசதிகள் இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள், கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி மற்றும் இணக்கச் சான்றிதழ் போன்ற ஆவணங்களின் பிரதிகளுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை வங்கி திஸ்ஸமஹாராம கிளை ஊழியர் உத்தியோகபூர்வ விடுதிக்குப் பொருத்தமான கட்டடம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**உதவிப் பொது முகாமையாளர்,**
**இலங்கை வங்கி,**
**தென் மாகாண அலுவலகம்,**
**இல. 11, குமாரதுங்க மாவத்தை, மாத்தறை.**
**தொலைபேசி: 041-2232238**
**தொலைநகல்: 041-2234880**
**மின்னஞ்சல்: bocsp@boc.lk**

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை தேசிய பல் மருத்துவமனை (போதனா) - கொழும்பு-07

### பயிற்சி மருத்துவ அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ இல்ல வசதிகளை வழங்குவதற்காக வாடகை அடிப்படையில் தனிப்பட்ட வீடொன்றை பெற்றுக்கொள்ளல்.

கொழும்பு 07, இலங்கை தேசிய பல் மருத்துவமனையில் (போதனா) காத்திருப்பு கடமையில் ஈடுபடுகின்ற பயிற்சி மருத்துவ அதிகாரிகளுக்கு தங்குமிடவசதிகளை வழங்குவதற்காக வாடகை அடிப்படையில் தனியார் வீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய வழங்குநர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

- ➢ அறைகளின் எண்ணிக்கை 03
- ➢ பாதுகாப்பான இடமாக இருத்தல் வேண்டும்
- ➢ மின்சாரம், நீர், குளியலறை வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்
- ➢ வைத்தியசாலைக்கு வருகை தருவதற்கு வசதியாக அருகில் இருப்பது குறித்து கவனத்தில் கொள்ளப்படும்
- ➢ குறித்த அதிகாரிகளால் தள பரீசிலனை மேற்கொள்ளப்பட்டு, பெறுகை திர்மானிக்கப்படும்.
- ➢ மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் ரூ. 1,500.00

குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணத்தை அலுவலகத்தின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்னர் குறித்த கேள்வி ஆவணங்களை 2023.08.10 மு.ப. 9.00 முதல் 2023.08.21 பி.ப. 2.00 வரை இலங்கை தேசிய பல் மருத்துவனை (போதனா) இன் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாக பொதி செய்து பொறியிடப்பட்ட உறைகளில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "பயிற்சி மருத்துவ அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ இல்ல வசதிகளை வழங்குவதற்காக வாடகை அடிப்படையில் தனிப்பட்ட வீடொன்றை பெற்றுக்கொள்ளல்" - 2023.08.22 என்று குறிப்பிட்டு 2023.08.22 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

இல்லையெனில் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். வழங்குநர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களை தொ.பே.இல. 011-2693106 இடம் பெற்றுக்கொள்ளலாம்.

**மருத்துவர் பீ.யூ. கம்லத்கே,**
**தலைவர், பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய பல் மருத்துவமனை (போதனா)**
**கொழும்பு-07.**

# இலங்கை வங்கி

## தொழில்நுட்ப ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

கீழ்குறிப்பிட்டவாறு சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை கூறல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| ஏல விலை கூறல் இல. | P/PROC/2023/151 |
| பெறுகையின் விபரம் | இலங்கை வங்கிக்கு மேம்படுத்தப்பபட்ட அச்சுறுத்தற் பாதுகாப்பு மென்பொருட் தீர்வினை வழங்கி, விநியோகித்து, நிறுவி, செயற்படுத்திப் பராமரித்தல். (Advanced Threat Protection Software Solution) |
| மீளளிக்கப்படாத ஏல விலைக் கட்டணம் | ரூபா.25,000.00 (ரூ.21,195.65+ரூ.543.48 SSCL + ரூ.3,260.87 VAT) |
| ஏல விலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித்திகதியும் நேரமும் | 2023.08.29 1400 மணி வரை |
| ஏல விலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும் | 2023.08.31 1000 மணி வரை |
| முன்கூட்டிய ஏலவிலைகூறல் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும் இடமும் | 2023.08.16 1400 மணிக்கு இலங்கை வங்கி தலைமையகத்தின் 06ஆம் தளம் |

1. **ஏல விலைகூறலை கவனத்திற்கொள்ளும் பொருட்டு விலைகூறுவோர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.**
   i. கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் ஏலவிலை கூறுபவரின் அண்ணளவான குறைந்தபட்ச வருடாந்தப் பணப் புரள்வானது ரூ. 100 மில்லியனாகக் காணப்பட வேண்டும். (2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022 அல்லது 2020, 2021 மற்றும் 2022.)
   ii. ஏலவிலை கூறுபவர் முன்மொழியப்பட்ட தீர்வின் அங்கீகாரம் பெற்ற விற்பனை மற்றும் சேவை வழற்குநராகக் காணப்பட வேண்டும். முன்மொழியப்பட்ட தீர்வுக்கு உற்பத்தியாளரின் உறுதிப்படுத்தலானது அத்தியாவசியமாகும்.
   iii. ஏலவிலை கூறுபவர் இலங்கையினுள் கடந்த 05 ஆண்டுகளில் (2018.07.01ஆம் திகதி முதல் இன்று வரை) முன்மொழியப்படும் மென்பொருட் தீர்வினை ஒத்த குறைந்தபட்சம் 01 தீர்வையாவது வழங்கி, நிறுவி, செயற்படுத்தி பராமரித்துக்கொண்டிருக்க வேண்டும்.
   iv. ஏலவிலை கூறுபவர் கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தபட்சம் மூன்று உலகளாவிய நிதி நிறுவனங்களிற்காவது முன்மொழியப்பட்டுள்ள தீர்வுகளை வழங்கி, நிறுவி, செயற்படுத்தி பராமரித்துக் கொண்டிருக்க வேண்டும். (2018.07.01ஆம் திகதி முதல் இன்று)
   v. விலை கூறுவோர் தகவற் தொழில்நுட்பப் பாதுகாப்புத் தீர்வுகளைச் செயற்படுத்துவதில் அனுபவம் வாய்ந்த சான்றளிக்கப்பட்ட தகவற் பாதுகாப்பு அலுவலர்கள் இருவரையாவது கொண்டிருத்தல் வேண்டும்
   vi. ஏலவிலை கூறுபவர் இலங்கையினுள் காணப்படும் வங்கியின் வர்த்தக எல்லை தொடர்பாக வேறுபட்ட ஆர்வத்தை உடையவராகக் காணப்படக் கூடாது.
   vii. ஏலவிலை கூறுபவர் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கை வங்கியினால் அல்லது ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் காணப்படாதவராக இருத்தல் வேண்டும்.
2. விலை கூறல் ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமையகக் காரியாலயத்தின் 14ஆம் தளத்திலுள்ள, சொத்துக்களும் சேகரிப்பும் பகுதியில், கடமை தினங்களில் 0900 மணி முதல் 1400 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
3. ஏல விலை கூறல்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் விலை கூறல்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
4. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா விலை கூறல்களையும் நிராகரிக்கும் அல்லது விலை கூறலின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
5. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்", இல.01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2434786

1975 BOC www.boc.lk
A (lka) Fitch, AAA Brand Finance

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சு
## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
### சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விலைமனுக்கோரல் – 2023/2024

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் சிற்றுண்டிச்சாலை சேவையை நடாத்திச் செல்வதற்காக இவ்வேலைக்காக பதிவு செய்து கொண்டுள்ள அனுபவம் வாய்ந்த சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்பவர்களிடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2023-09-01ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 2023-10-01ஆம் திகதி முதல் சிற்றுண்டிச்சாலை சேவை ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

01. கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் தலைமை அலுவலகத்தின் 15ஆம் மாடியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையில் நாளொன்றுக்கு சுமார் இரண்டாயிரம் (2000) பணியாட் தொகுதியினருக்கு உணவு வழங்குதல் வேண்டும் என்பதுடன் இந்த சிற்றுண்டிச்சாலை நவீன துணைச்சாதனங்கள் மற்றும் உபகரணங்களையும் கொண்டது.
02. சிற்றுண்டிச்சாலைக்காக வாடகை அறவிடப்படமாட்டாது. சிற்றுண்டிச்சாலைக்கான தளபாடங்கள் திணைக்களத்தினால் இலவசமாக வழங்கப்படும் என்பதுடன் செலவிடப்படும் மின்சாரம், நீர் மற்றும் எரிவாயு என்பனவற்றுக்கான கட்டண பற்றுச்சீட்டின் 5% தொகை மட்டும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்படும். இந்த வசதிகளை கவனத்திற் கொண்டு நிவாரண விலையில் உணவு பானங்களை வழங்குதல் வேண்டும்.
03. 2023-08-10ஆம் திகதி முதல் 2023-08-31ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள கட்டிடத்தின் 15ஆம் மாடியிலுள்ள பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ பிரிவில் குறித்த விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. விலைமனுதாரர்களினால் கடிதத் தலைப்பின் மூலம் செய்யப்படும் வேண்டுகோளின் பேரில் 2023-08-10ஆம் திகதி முதல் 2023-08-31ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆணையாளர் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்) அவர்களிடமிருந்து விலைமனு மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. விலைமனு மாதிரிப் படிவங்கள் உட்பட கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கேள்விக் கட்டணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளரின் பெயரில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்குக் கிளையின் பிரதான சிறாப்பருக்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. விலைமனுக்களுடன் 10,000.00 ரூபா பெறுமதியான இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கோரியவுடன் செலுத்தப்படக்கூடிய பிணை முறியொன்று அல்லது மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளரின் பெயரில் வைப்புச் செய்தல் வேண்டும்.
07. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-09-01ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ஆணையாளர் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்), உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியினால் நேரில் கொண்டு வந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள கட்டிடத்தின் 15வது மாடியில் அமைந்துள்ள பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ கிளையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிற்றுண்டிச்சாலை சேவை வழங்கலுக்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
08. விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்து கொள்ளலாம். உள்நாட்டு இறைவரித் திணைக்கள கட்டிடத்தின் 15வது மாடியில் உள்ள ஆணையாளரின் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்) அலுவலகத்தில் 2023-09-01ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
09. மேலதிக விபரங்கள் தேவையாயின் இத்திணைக்களத்தின் பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ கிளையின் 0112135461, 0112135462 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**பாரிய அளவிலான பெறுகைக் குழுவின் தலைவர்,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02.**
**2023-08-10.**

NLB
NATIONAL LOTTERIES

# தேசிய லொத்தர் சபை

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### ஓர் (01) ஆண்டு (2023/2024) காலத்திற்காக தேசிய லொத்தர் சபைக்கு துப்புரவு சேவையை வழங்குவதற்கான பெறுகை

1. ஓர் (01) ஆண்டு (2023/2024) காலத்திற்காக தேசிய லொத்தர் சபைக்கு துப்புரவு சேவையை வழங்குவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய லொத்தர் சபை (NLB) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. தேவைகளின் விரிவான விபரக்குறிப்பு விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.
3. தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.
4. விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு விலைகேட்புக்கான தகுதியுடைய வழங்குநராவதற்கு பின்வரும் மேலதிக தகைமைகளுடன் உள்ளூரில் பதிவு செய்யப்பட்ட வழங்குநராக இருத்தல் வேண்டும்.
   - வர்த்தக பதிவு சான்றிதழின் பிரதி
   - தொடர்புடைய துறையில் குறைந்தது ஐந்து (5) ஆண்டு அனுபவம் (விலைமனுவுடன் சேர்த்து அத்தாட்சி சமர்ப்பித்தல் வேண்டும்)
   - (வெட் பொருந்துவதாயின்) வெட் பதிவு சான்றிதழின் ஒரு பிரதி
5. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 01, தேசமான்ய என். டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, 1ஆவது மாடி, பெறுகை பிரிவு உதவி பொது முகாமையாளர் (பெறுகை) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. -0114607020/ 0114607021) என்பதோடு கீழ் குறிப்பிடப்பட்ட காலத்தில் எந்த ஒரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கீழுள்ள முகவரியில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக **3,500.00** ரூபாவை (வெட் உட்பட) செலுத்தி எந்த ஒரு வேலை நாட்களிலும் **2023.08.10** ஆம் திகதி தொடக்கம் **2023.08.31**ஆம் திகதி வரை **9.00 மணி** தொடக்கம் **15.00 மணி** வரை கீழுள்ள முகவரிக்கு வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் சிங்கள மொழியிலான விலைமனு ஆவணங்களில் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப் பணத்தில் இருத்தல் வேண்டும்.
7. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை **2023.09.01** ஆம் திகதி **14.30** மணி அல்லது அதற்கு முன்னர் தரப்பட்டுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது கைகளில் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது, நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்பது நிறைவுற்ற பின் நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, "6ஆவது மாடியின் "கூட்ட அறையில்" விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, தலைவர் என்ற பயனாளிக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் மாத்திரம் வழங்கப்பட்ட நூற்று ஐம்பதாயிரம் **(ரூபா 150,000.00)** விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனு பிணையின் செல்லுபடிக்காலம் 2023.09.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.14 ஆம் திகதி வரை இருத்தல் வேண்டும்.
8. வெற்றிகரமான விலைமனுதாரர் ஒப்பந்த பெறுமதியின் 10% செயல்திறன் பிணை ஒன்றை வழங்குதல் வேண்டும். அந்த செயல்திறன் பிணை 13 மாத காலத்திற்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. ஆவணங்களை முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் நிறுவன முத்திரையுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"ஓர் (01) ஆண்டு (2023/2024) காலத்திற்காக தேசிய லொத்தர் சபைக்கு துப்புரவு சேவைகளை வழங்குவதற்கான விலைமனுக்கள்"** மற்றும் (**NLB/PRC/09/CL/0085/2023**) என்று குறிப்பிடுதல் வேண்டும்.
10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2023.08.23** ஆம் திகதி 10.00 மணிக்கு கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபையில் இடம்பெறும்.
11. விலைமனுக்களை தயாரிப்பது அல்லது சமர்ப்பிப்பதுடன் தொடர்புபட்டு விலைமனுதாரர்கள் மூலம் ஏற்படும் எந்த ஒரு செலவு அல்லது இழப்புக்காகவும் தேசிய லொத்தர் சபை பொறுப்பேற்காது.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**தேசிய லொத்தர் சபை,**
**இல. 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே முதலிகே மாவத்தை,**
**கொழும்பு 01.**

# மன்னார் மடுத் திருத்தலத்தின் ஆவணி திருவிழாவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி

*மன்னார் குறூப், தலைமன்னார் விசேட நிருபர்கள்*

மன்னார் மடுத் திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெற வுள்ளதை முன்னிட்டு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக, மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.



இம்முறை நாட்டின் பல பாகங்களிலிருந்தும் 7 இலட்சத்துக்கும் அதிகளவான பக்தர்கள் திருப்பலியில் கலந்துகொள்வார்களென்று எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில், அவர்களின் நலனை கருத்திற்கொண்டு சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

மன்னார் மடு ஆவணித் திருவிழாவின் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று, மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் மடுத் திருத்தலத்தில் நேற்று புதன்கிழமை (09) நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பக்தர்களுக்காக குடிநீர், சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து, பாதுகாப்பு போன்ற தேவைகளை உரிய திணைக்களங்களுடன் இணைந்து மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, திருவிழாவில் கலந்துகொள்ளவுள்ள பக்தர்களின் வசதி கருதி கொழும்பிலிருந்து மடுச் சந்திவரை விசேட ரயில் சேவையை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

# போதைக்கு அடிமையான 33 சிறுவர்கள் கடந்த இரு மாதங்களில் கண்டுபிடிப்பு!

*யாழ். விசேட நிருபர்*

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு மாத காலப் பகுதியில் 33 சிறுவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக, யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி வரும் நிலை அதிகரித்து வருவதுடன், கடந்த இரண்டு மாத காலப்பகுதியில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான இந்தச் சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# பொன்னாவெளியில் சீமெந்து தொழிற்சாலைக்கு எதிராக 7ஆவது நாளாகவும் ஆர்ப்பாட்டம்

*கிளிநொச்சி குறூப் நிருபர்*

கிளிநொச்சி, பூநகரி பொன்னாவெளி பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள சீமெந்து தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்து மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏழாவது நாளாகவும் வேரவில் வைத்தியசாலைக்கு அருகில் நேற்று புதன்கிழமை (09) இடம்பெற்றது.



வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி ஆகிய பிரதேச மக்கள் சுழற்சி முறையிலான ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர். பொன்னாவெளியில் சீமெந்து தொழிற்சாலை அமைப்பதற்காக சுண்ணக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கு டோக்கியோ சீமெந்து நிறுவனம் ஆய்வு மேற்கொண்டுபணியைமுன்னெடுக்கவுள்ளநிலையில் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கடற்கரையை அண்டிய தமது பிரதேசங்களில் சுமார் 300 மீற்றர்வரை ஆழத்தில் சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளும் போது, தமது பிரதேசங்களினுள் கடல்நீர் உள்வருமெனவும் அதனால், தமது பிரதேசங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படுமெனவும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

# மீசாலையில் இடம்பெற்ற விபத்தில் மாணவி காயம்

*சாவகச்சேரி விசேட நிருபர்*

யாழ். சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை ஐயா கடைச் சந்தியில், ஏ-09 வீதியில் நேற்று புதன்கிழமை (09) மதியம் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தரம் 06 இல் கல்வி கற்கும் மீசாலை கிழக்கைச் சேர்ந்த 11 வயதுடைய ந.சர்மிதா எனும் மாணவியே விபத்தில் படுகாயமடைந்துள்ளார். பாடசாலை முடிந்து தனது தாத்தாவுடன் மோட்டார் சைக்கிளில் இம்மாணவி சென்ற போது, தனியார் பேருந்து மோதி விபத்து இடம்பெற்றது. இம்மாணவி, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இம்மாணவியை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற 77 வயதுடையவர் கையில் சிறு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

கட்டிடங்கள் திணைக்களம்

# கேள்விகளுக்கான அழைப்பு

## கொபெய்கனே, வெல்பொதுவெவயில் உள்ள மத்திய மருந்தக கூரையின் மிகுதி வேலைகள் - படிநிலை III

**(ஒப்பந்த இல. BD-063/Z3/23/RCT03/2023)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 7.7 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவுடையதுமான பொபெய்கனே, வெல்பொதுவெவயில் உள்ள மத்திய மருந்தக கூரையின் மிகுதி IIIஆம் படிநிலை வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் (வலயம் 3) பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.
   நிர்மாணக் காலம் 84 நாட்கள்.
2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iv) மற்றும் 03/2020ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிட நிர்மாணத் துறைக்காக C8, C7 அல்லது C6 தரத்தில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
   ''பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை *(Original Certificate of PCA 03)* கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். *PCA 03* பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது''
4. குருநாகலை, வில்கொட வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 3), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4..00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
   தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 037-2222437, தொலைமடல்: 037-2222197
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை (ரூபா 2,500.00) 2023-08-10ஆம் திகதி முதல் 2023-08-23ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் குருநாகலை, வில்கொட வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 3), பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விகளை 2023-08-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 3), பிரதான பொறியியலாளர் அலுவலகம் (வலயம் 3), கட்டிடத் திணைக்களம், வில்கொட வீதி, குருநாகல் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இதே முகவரியில் வருகை தந்துள்ள கேள்வி கோரலில் கலந்துகொள்ள கேள்விதாரர்களினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 115,000.00 ரூபா தொகைக்கு
   * 2023 டிசம்பர் 06ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.0ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட

கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொறி. எஸ்.எஸ். ரன்வத்த,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் (பிராந்தியம் 3),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, "செத்சிறிபாய",**
**பத்தரமுல்லை.**




## 2006 இல 5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3) ஆம் பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் சொத்துக்கள் செயற்பாடற்றதாக்கும் அறிவித்தல்

இல 101, ரஜமஹாவிஹார மாவத்த, மிரிஹான, கோட்டே முகவரியில் வசிக்கும் ஓமல்பகே தினேஷ் ஹர்டி ரணசிங்ஹ என்பவரின் பெயரில் உள்ள கீழ்க்காணும் சொத்துக்களை மேற்படி சட்டத்தின் 35ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட விரோத செயற்பாட்டின் மூலம் அல்லது ஏதேனும் சட்டவிரோத செயற்பாட்டின் மூலம் பெற்றுக்கொண்ட தொகையின் மூலம் ஈட்டப்பட்டது என உறுதி செய்யப்பட்டிருப்பதால் மேற்படி சட்டத்தின் 7 மற்றும் 8ஆம் பிரிவின் பிரகாரம் 2023.07.13 முதல் ஹோமாகம உயர் நீதிமன்றத்தில் SPL/03/2023 இன் கீழ் செயற்பாடற்றதாக்கும் கட்டளை உறுதி செய்யப்பட்டு நீடிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு என்.எம். மாபிட்டிகமவினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 2021.05.03ம் திகதிய இல 15 விற்பனை முறியில் குறிப்பிடப்படும் இலக்கம் 480 C பட்டேவல கிராம அதிகாரி பிரிவில் பத்தவத்த எனும் காணிக்கு இல-3520 என்ற வரைபடத்தின் பிரகாரம் பிரித்து வேறாக்கிய 'லொட் 2' என்ற காணித்துண்டின் பத்து பேர்ச் (ஏ:00 ரூ:00 பேர்:10) அளவுடைய காணி (முன்னைய பதிவு A342/71, 72, 73, 74, 146)

மேற்படி காணி சம்பந்தமாக தமது உரித்துரிமையை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு உண்மையான மூன்றாம் தரப்பினர்களுக்கு வசதிகளை வழங்கும் முகமாக இத்தால் பிரசுரிக்கிறேன்.
**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்.**

## பெறுகை அறிவித்தல்

### உடுபத்தாவ பிரதேச சபை

உடுபத்தாவ பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட பின்பு துருப்பிடிக்காத பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு 5x5x5.5 அடி அளவான கம்பி வலையுடனான 10 உள்ளிடும் பெட்டிகளை தயாரிப்பதற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்வி ஆணங்களை 2023.08.10 முதல் 2023.08.24 வரை அலுவலக நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.15 வரை பெற்றுக் கொள்ளலாம்.
2. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களுடனான கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'துருப்பிடிக்காத குப்பைகளைச் சேர்க்கும் உள்ளிடும் பெட்டிகளை தயாரித்தல் - 2023' என்று குறிப்பிட்டு 2023.08.25 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு செயலாளர், உடுபத்தாவ பிரதேச சபை, உடுபத்தாவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
3. கேள்விகள் திறத்தல் 2023.08.25 பி.ப. 2.15 இற்கு இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
4. 2023.08.25 பி.ப. 2.00 இற்கு பின்னர் கிடைக்கும் மற்றும் குறித்த கேள்வி ஆவணங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்துடன் கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் எடுத்தல் உடுபத்தாவ பிரதேச சபைக்கு உரியது.
5. இது பற்றிய மேலதிக விபரங்களை எதிர்பார்ப்பின் அபிவிருத்தி அதிகாரி திரு. எச்.எம்.எல். தெபாவெல வை அழையுங்கள்.
   தொ.பே. இலக்கம் - 037-2286577

**செயலாளர்**
**உடுபத்தாவ பிரதேச சபை, உடுபத்தாவ.**

# ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை

## (ஆலோசனை சேவைகள் - நிறுவனத்தை தெரிவுசெய்தல்)

| | | |
|---|---|---|
| **நாடு** | : | இலங்கை |
| **திட்டத்தின் பெயர்** | : | கொழும்பு நகர புத்துயிராக்கல் செயல் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் |
| **கடன் எண்** | : | L0081A |
| **பணியின் தலைப்பு** | : | சமூக பொருளாதார ஆய்வு, RAP அபிவிருத்தி சமூக அணிதிரட்டல், திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி |
| **குறிப்பு எண்** | : | SCURP/2019/C3-S/001( i ) & SCURP/2019/C3-S/003(i) |

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, கொழும்பு நகர புத்துயிராக்கல் செயல் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து நிதியைப் பெற்றுள்ளது, மேலும் இந்த நிதியின் ஒரு பகுதியை ஆலோசனைச் சேவைகளுக்குப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

உத்தேச ஆலோசனை தேவையின் நோக்கம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது. :-

(1) மீள் குடியேற்ற செயற்றிட்டங்கள் (RAPs) மற்றும் கட்டமைப்பு இழப்புகளின் பட்டியல் தயாரிக்க திட்டப் பகுதியில் உள்ள அனைத்து கட்டமைப்பு இழப்புகள் மற்றும் திட்டப் பகுதியிலுள்ள மக்கள் மீதான சாத்தியமான சமூக-பொருளாதார தாக்கங்களை அடையாளம் காண ஒரு சமூக-பொருளாதார அடிப்படை கணக்கெடுப்பை நடாத்துதல். மீள்குடியேற்றத்திற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள 15 இடங்கள் தொடர்பான மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்கள் மற்றும் இத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட ஏனைய மக்கள் மீதான அனைத்து பாதிப்புகளையும் மீள் குடியேற்ற செயற்றிட்டங்கள் நிவர்த்தி செய்ய வேண்டும்.

(2) திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் (PAPs) சமூக-பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும், தற்போதுள்ள வாழ்வாதார நடவடிக்கைகளை அடையாளம் காண பொருத்தமான பங்கேற்பு சமூக அடிப்படையிலான அணுகுமுறையைப் பயன்படுத்தி விரிவான தேவை மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும்.

(3) பாலினம் மற்றும் வயதுக்கு ஏற்ப புதிய வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட அவர்களின் பொருளாதார, சமூக ஆதாரங்கள் மற்றும் சாத்தியக்கூறுகளைத் தீர்மானித்தல்.

(4) திறன் அபிவிருத்தித் திட்டங்கள், தொழில்நுட்பப் பயிற்சித் திட்டங்கள், சமூக அணிதிரட்டல் திட்டங்கள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட பிற தொடர்புடைய அம்சங்கள், திட்டங்கள், மீள்குடியேறுதல் என்பவற்றை வீடுகளில் செயல்படுத்துதல்.

இந்த முன்மொழியப்பட்ட பணிக்கான மொத்த காலப்பகுதி 2 ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது என்பதுடன் இது முதலாம் படிநிலைக்கு மட்டுமேயாகும். முன்மொழியப்பட்ட பணியானது, அதிகாரப்பூர்வமாக வழங்கப்பட்டால் மற்றும் எப்போது வழங்கப்பட்டாலும், சம்பந்தப்பட்ட ஏற்பு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படும். இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுக்குப் பிறகு வாடிக்கையாளரின் ஒப்புதலுக்கு உட்பட்டு மேலும் ஒரு வருடத்திற்குக் குறையாத மேலதிக ஒப்பந்த காலத்துடன் இரண்டாவது கட்டம் நடைமுறைப்படுத்தப்படும், கட்டம் II செயல்படுத்த அனுமதிக்கப்படாவிட்டால், சேதங்கள் மற்றும் பலவற்றை மீட்டெடுப்பதற்கான எந்தவொரு கோரிக்கைக்கும் இது ஒரு காரணமாக இருக்காது. குறிப்பு விதிமுறையின் (TOR) 3ஆம் உருப்படியின் கீழ் இரண்டு கட்டங்களும் விவரிக்கப்பட்டுள்ளன.

முன்மொழியப்பட்ட ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு ஆர்வமுள்ள தகுதியான ஆலோசனை நிறுவனங்கள் அழைக்கப்படுகின்றன. வளமுள்ள ஆலோசகர்கள், இந்த முன்மொழியப்பட்ட சேவையைச் செய்வதற்குத் தேவையான தகுதிகள் மற்றும் பொருத்தமான அனுபவத்தைப் பெற்றுள்ளனர் என்பதை நிரூபிக்கும் தகவலை வழங்க வேண்டும்.

சுருக்கப்பட்டியல் மூலப்பிரமாணம் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:-

i. ஒரு கூட்டு முயற்சியின் போது, உள்நாட்டு ஆலோசனை நிறுவனம் முதன்மையாக இருக்க வேண்டும்.

ii. கடந்த ஐந்து ஆண்டுகளில் (2018-2022) மூன்றாண்டுகளின் தேறிய இலாப வரம்பு சாதகமாக இருக்க வேண்டும்.

iii. கடந்த 10 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 01 அடிப்படைக் கணக்கெடுப்பு வகைப் பணி மற்றும் குறைந்தபட்சம் 01 வாழ்வாதார அபிவிருத்தி வகைப் பணி (கூட்டு முயற்சியாக இருந்தால், குறைந்தபட்சம் ஒரு நிறுவனமாவது இந்தத் தேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்) உட்பட குறைந்தது 05 பணிகள் மேலதிக தகுதியாக இருக்கும்.

iv. நேரடி வரிகள் தவிர்த்து, மொத்த மதிப்பாக 300,000.00 அமெரிக்க டொலர்களுக்குக் (US $) குறையாத பெறுமதியுடைய இதனையொத்த குறைந்தபட்சம் ஒரு (01) பணி அல்லது இரண்டு (02) பணிகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். US $ ஆக மாற்றுவதற்கு, அந்தந்த பணிகளின் நிறைவு திகதியில் இருக்கும் பொருந்தமான நாணயமாற்று விகிதம் பயன்படுத்தப்படும்.

v. பன்முக வளர்ச்சி வங்கிகள் (MDB) அல்லது சர்வதேச நிதி நிறுவனங்களின் (IFI) கீழ் செயற்படுத்தப்பட்ட குறைந்தபட்சம் இதனையொத்த ஒரு (01) பணி.

AIIB வங்கியின் வட்டி மற்றும் தகுதி முரண்பாடுகள் குறித்த AIIB கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள AIIB இன் "பெறுநர்களுக்கான பெறுகை அறிவுறுத்தல்கள்" பிரிவு II, பத்தி 4.4 மற்றும் பந்தி 4.9 ஆர்வமுள்ள ஆலோசகர்களின் கவனத்திற்கு ஈர்க்கப்படுகிறது.

வளமுள்ள ஆலோசகர்கள் தங்கள் தகுதிகளை மேம்படுத்த மற்ற நிறுவனங்களுடன் இணைந்துகொள்ளலாம். ஆனால் சங்கம் ஒரு கூட்டு முயற்சியாக மற்றும்/ அல்லது துணை ஆலோசனையில் உள்ளதா என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். ஒரு கூட்டு முயற்சியில், கூட்டு முயற்சியில் உள்ள அனைத்து பங்குதாரர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டால், முழு ஒப்பந்தத்திற்கும் கூட்டாகவும் பலவிதமாகவும் பொறுப்பானவர்கள் ஆவர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் (https://www.moudh.gov.lk/), நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (https://www.uda.gov.lk/) இலங்கை இலத்திரனியல் பெறுகை முகாமைத்துவ தகவல் முறைமை, (https://promise.lk//) மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (https://www.aiib.org/en/index.html) மற்றும் UNDB நிகழ்நிலை (https://devbusiness.un.org/) எனும் இணையதளங்களிலிருந்து EOI தகவல் படிவம் மற்றும் குறிப்பு விதிமுறையை (TOR) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

EOI ஆவண ஆதாரங்களுடன் "EOI தகவல் படிவத்தில்" குறிப்பிடப்பட்டுள்ளபடி கோரப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து ஆவணங்களும் ஆங்கில மொழியில் இருக்க வேண்டும் மற்றும் கொடுக்கப்பட்ட வடிவங்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். கொடுக்கப்பட்ட வடிவங்கள் இல்லாமல் வழங்கப்பட்ட தகவல்கள் மதிப்பீட்டிற்கு கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

கோரப்பட்ட அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய ஆர்வ வெளிப்பாடுகளை 2023-09-11ஆம் திகதி 15.00 மணித்தியாலத்திற்குப் பிந்தாமல் (உள்ளூர் நேரம்) ஒன்றில் (i) நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும் அல்லது (ii) பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். EOI அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சமூக-பொருளாதார ஆய்வு, மீள்குடியேற்ற செயற்றிட்ட (RAP) அபிவிருத்தி, சமூக அணிதிரட்டல், திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி என்பவற்றிற்கான ஆலோசனை சேவைக்கான ஆலோசனை நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆர்வ வெளிப்பாடு" எனத் தெளிவாகக் குறிக்கப்படல் வேண்டும். EOI தாமதமான சமர்ப்பிப்பு திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.

பெறுநர்களுக்கு, பெறுகை வழிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தரம் மற்றும் செலவு அடிப்படையிலான பிரிவு (QCBS) முறையின் பிரகாரம் ஒரு ஆலோசகர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

மேலதிக தகவலுக்கு, பின்வரும் விவரங்களை சரியான முறையில் பயன்படுத்தவும்.:-

**தலைவர்**
**அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழு (CPCM)**
**மே/பா செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**கொழும்பு நகர புத்துயிராக்கல் செயல் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல்,**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,**
**5 வது மாடி, செத்சிறிபாய படிநிலை I, பத்தரமுல்ல.**
**மின்னஞ்சல் முகவரி: scurp.procurement@gmail.com**

**Repeat Your ad For Better Offers**

பாதுகாப்பு அமைச்சு

# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் கீழே குறிப்பிட்டுள்ள பதவிகளுக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**(1) விஞ்ஞானி** {பொறியியலாளர் (சிவில்)/ அளவிடல் அளவையாளர்/புவிச்சரிதவியலாளர்)} **ஏஆர்-1, தரம் ii**

**சிவில் பொறியியலாளர் - 03 பதவி வெற்றிடங்கள்**
**அளவை அளவையாளர் - 01 பதவி வெற்றிடம்**
**புவிச்சரிதவியலாளர் - 07 பதவிகள்**

**தகைமைகள்:**

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பொறியியல்/அளவை அளவிடல்/புவிச்சரிதவியல் ஆகியவற்றில் பெற்ற அல்லது உரித்தான துறையில் பொருத்தமான பாட இணைப்புக்களுடன் பெற்ற நான்கு வருட இளமாணிப் பட்டம்

அல்லது

ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞானத்தில் பெற்ற அல்லது உரித்தான துறையில் பொருத்தமான பாட இணைப்புக்களுடன் பெற்ற மூன்று வருட இளமாணிப் பட்டம்.

அத்துடன்

உரித்தான துறையொன்றில் பெற்ற பட்டப்பின் பட்டம்/டிப்ளோமா.

அல்லது

இ) உரித்தான துறை நிறுவனத்திலிருந்து பெற்ற கூட்டிணைந்த அங்கத்தினர்

**(2) தொழில்நுட்ப அலுவலர்/ அளவை அலுவலர் - ஜேஎம் 1-1, தரம் ii (02 பதவி வெற்றிடங்கள்)**

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சிவில் பொறியியல்/ அளவை அளவிடல் துறையில் பெற்ற இளமாணிப் பட்டம் அல்லது பதவிக்கு உரித்தான பாட பரப்பில் பெற்ற பட்டமொன்று.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிறுவகமொன்றினால் வழங்கப்பட்டதும் 07 (ஏழாம்) மட்டத்திற்கு குறையாத தேசிய தொழிற்பயிற்சித் தகைமையில் பெறப்பட்ட தேர்ச்சித் சான்றிதழொன்று.

அல்லது

தொழில்நுட்பவியலில் சித்தியடைந்த தேசிய டிப்ளோமா அல்லது தேசிய தொழிற்பயிற்சித் தகைமையில் 6 ஆம் மட்டத்திற்கு குறையாத நிகரான தகைமை மற்றும் அரசாங்க திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபை அல்லது புகழ்வாய்ந்த வாணிப தாபனமொன்றில் உரித்தான துறையில் ஐந்து (05) வருட அனுபவம்.

அல்லது

தொழில்நுட்பவியலில் சித்தியடைந்த தேசிய டிப்ளோமா அல்லது தேசிய தொழிற்பயிற்சித் தகைமையில் 5 ஆம் மட்டத்திற்கு குறையாத நிகரான தகைமை மற்றும் அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்வாய்ந்த வாணிப தாபனமொன்றில் உரித்தான துறையில் பத்து (10) வருட அனுபவம்.

**(3) தகவல் அலுவலர் - ஜேஎம் 1-1, தரம் ii (01 பதவி வெற்றிடம்)**

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பதவிக்கு உரித்தான பாடப்பரப்புக்களுடன் விஞ்ஞானம்/தொழில்நுட்பவியலில் பெற்ற இளமாணிப் பட்டம்.

அல்லது

6 ஆம் மட்டத்திற்கு குறையாத தகவல் தொழில்நுட்பவியலில் டிப்ளோமா அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் தகவல் அல்லது நிகரான தகைமை மற்றும் அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்வாய்ந்த வாணிப தாபனமொன்றில் உரித்தான துறையில் ஐந்து (05) வருட அனுபவம்.

அல்லது

தேசிய தொழிற்பயிற்சித் தகைமையில் 5 ஆம் மட்டத்திற்கு குறையாததும் அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்வாய்ந்த வாணிப தாபனமொன்றில் உரித்தான துறையில் பத்து (10) வருட அனுபவம்.

**(4) கணக்கியல் அலுவலர் - ஜேஎம் 1-1, தரம் ii (01 பதவி வெற்றிடம்)**

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முகாமைத்துவ வர்த்தகத்தில் பெற்ற இளமாணிப் பட்டமொன்று.

அல்லது

இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் இடைநிலை/தகுதிச்சான்றிதழ் அல்லது கணக்கியலில் தேசிய உயர் டிப்ளோமா அல்லது முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவகத்தின் இடைநிலை அல்லது கணக்கியலில் பெற்ற டிப்ளோமா.

உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**(5) முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) எம்ஏ 2-2, தரம் iii (08 பதவி வெற்றிடங்கள் (சிவில்/அளவை அளவிடல்/படவரைஞர்)**

**தகைமைகள்:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிறுவகமொன்றினால் வழங்கப்பட்டதும் 07 (ஏழாம்) மட்டத்திற்கு குறையாத தேசிய தொழிற்பயிற்சித் தகைமையில் பெறப்பட்ட தேர்ச்சித் சான்றிதழொன்று அல்லது அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் அல்லது நிகரான தகைமை.

உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**(6) சாரதி, பிஎல்-3, தரம் iii (03 பதவி வெற்றிடங்கள்)**

**தகைமைகள்:**

ஆகக் கூடியது இரு அமர்வுகளில் ஆகக் குறைந்தது இரு (02) திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தி.

அத்துடன்

மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட உரிமம் வாகனம் செலுத்துதத்தில் சாரதி உரிமத்தைப் பெற்ற பின்னர் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்:**

**சம்பள அளவுத்திட்டம்:**

| | |
|---|---|
| ஏஆர்-1, தரம் ii | 53,150-1375x10-1910x15-95,550 ரூபா. |
| ஜேஎம் 1-1, தரம் ii | 42,600-10x755-18x1135-70,580 ரூபா |
| எம்ஏ 2-2, தரம் iii | 30,310-300x10-350x7-600x4-710x20-52,360 ரூபா. |
| பிஎல்-3, தரம் iii | 26,290-270x10-300x10-330x10-350x12-39,490 ரூபா |

சம்பள படிமுறை – ஆரம்ப படிமுறையாகும்)

**வயதெல்லை:**

**ஏஆர்-1 மற்றும் ஜேஎம் 1-1** - வயதானது 22 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**எம்ஏ 2-2/ பிஎல்-3** - வயதானது 18 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

உள்வாரி தகைமைகளுக்கமைவாக உள்வாரி விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஏனைய நன்மைகள்:**

* வாழ்க்கை செலவுப் படி
* நிறுவனத்தினால் ஊசேநி இற்கு 12% அத்துடன் ஊநநி இற்கு 3% பங்களிப்பிற்கு உரித்து.
* அரசாங்கம் மற்றும் நிறுவக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்.

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் பொருத்தமான நிறுவன தலைவர்களூடாகவே அனுப்பப்படல் வேண்டும். சுயதரவு அடங்கலான உரித்தான சான்றிதழ்களின் பிரதிகள் அடங்கலான விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2023 ஒகஸ்ட் 22 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழே கையொப்பமிட்டவரை வந்தடைதல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை தயவு செய்து குறிப்பிடவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு-5.**






## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு பரீட்சைகள் 2023.08.18, 24ஆந் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு 2022.10.12ஆம் திகதி 2301/36 மற்றும் 2022.09.15ஆம் திகதி 2297/55 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | | குருநாகல் | |
| பிரதேச செயலாளர் பிரிவு | | பொல்பித்திகம | |
| கிராம சேவகர் பிரிவு | | 354 பொல்பித்திகம | |
| காணி அமைச்சின் இலக்கம் | | 4-3/10/2019-MV/465 DIVPP/LAND/LA/ACQUI/3-10/இ/ஓ/2021/23 | |
| **வரைபட இல.** | **கிராமத்தின் பெயர்** | **துண்டு இல** | **முழு காணியின் விஸ்தீரணம்** |
| இ.கி.வ. இலக்கம் 09 இல பிற்சேர்க்கை இல 9 தாள் இலக்கம் 14 | பல்லேகெலே | 430, 431, 433, 434, 435, 436, 437 வரை | 0.1532 ஹெக்டயார் |
| **வரைபட இல.** | **கிராமத்தின் பெயர்** | **துண்டு இல** | **முழு காணியின் விஸ்தீரணம்** |
| இ.கி.வ. இலக்கம் 2851 இல் பிற்சேர்க்கை இல 3 தாள் இலக்கம் 4 | போகொள்ள | 89-91 வரை | 0.0998 ஹெக்டயார் |
| இ.கி.வ. இலக்கம் 2853 இல பிற்சேர்க்கை இல 1 தாள் இலக்கம் 1 | திவுல்லேகம | 4-7 வரை | 0.0536 ஹெக்டயார் |
| இ.கி.வ. இலக்கம் 2854 இல பிற்சேர்க்கை இல 1 தாள் இலக்கம் 1 | கதுருபொலயாகம | 4-8, 10, 12-34, 36-43 வரை | 2.6239 ஹெக்டயார் |
| இ.கி.வ. இலக்கம் 2852 இல் பிற்சேர்க்கை இல 11 தாள் இலக்கம் 15 | பொல்பித்திகம | 389, 390, 392-396, 398-399, 403-416, 418-420, 424, 427, 429-431, 433-438,442-449, 452-454, 456, 458-467, 469-473, 475-477, 479, 481-483, 485 வரை | 2.8927 ஹெக்டயார் |

**டி.எம்.எஸ். தஸநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**பொல்பித்திகம.**

**பிரதேச செயலாளர், காரியாலயம், பொல்பித்திகம,**
**திகதி 2023-08.07**

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. RDA/PD/CKEP/2013/01

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 29.09.2016ஆம் திகதிய 1986/45 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி (III) ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மேல் |
| மாவட்டம் | : கம்பஹா |
| பிரதேச செயலாளர் பிரிவு | : களனி |
| சிறு பிரிவு | : ராகம் பத்துவை |
| கிராமத்தின் பெயர் | : வெதமுல்லை |
| காணியின் பெயர் | : -- |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : கம். 3936 |
| துண்டு இல. | : 01-06 (06 துண்டுகள்) |

**ஏ.டி. சிறிவர்த்தன,**
**(சட்டத்தரணி)**
**காணி சுவீகரித்தல் அதிகாரி**
**(கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்கள்) மற்றும் பணிப்பாளர் - காணி (பதில் கடமையாற்றுபவர்), வீதி அபிவிருத்தி அதிகார சபை**

**காணிப் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**04வது மாடி, 'மகநெகும மஹமெதுர'**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்தை, பத்தரமுல்லை.**
**20.07.2023**

Repeat Your ad For Better Offers

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
சிறு விளம்பரங்கள்
சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை
முதல் 15 சொற்களுக்கு
330/- ரூபா
ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
E-Mail :-
classified@lakehouse.lk
011 2 429 383 / 011 2 429 347

# இலங்கை வங்கி

## கட்டடமொன்று தேவை

**பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளை இடமாற்றுவதற்காக பொருத்தமான கட்டடமொன்றை நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள தேவையாகவுள்ளது.**

1. **பெத்தேகம**
2. **ஊரகஸ்மங்ஹந்திய**
3. **கராப்பிட்டிய**
4. **அங்குணகொலபெலஸ்ஸ**

### உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தல் கூடாது.
- தரைப் பரப்பு ஏறக்குறைய 3000 - 3500 சதுர அடி அளவைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். மாடிக் கட்டடமாகவிருந்தால் தரைத் தளம் ஆகக்குறைந்தது 2000 சதுர அடிகளாகவும் மிகுதியை மேல் தளம் கொண்டதாகவிருத்தல் வேண்டும். (ஒடுக்கமானதாக இருத்தலாகாது)
- கட்டடத்தின் முகப்பு ஆகக்குறைந்தது 30 அடி அகலத்தைக் கொண்டதாக பிரதான வீதிக்கு முகப்பாக நகர மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- இலகுவில் பிரவேசிப்பதற்கும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கும் போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- மூன்று நிலை மின்சாரம் (60Amp), நீர் வசதிகள், ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு, ஆண், பெண் இருபாலாரும் வெவ்வேறாகப் பயன்படுத்தக்கூடிய மலசலகூட வசதிகள், அவசர வெளியேற்றக் கதவுகள், மாற்றுத்திறனாளிகள் நுழை பாதை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இருத்தல் வேண்டும்.
- கட்டடத்திற்கு 2'x2' தரையோடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்திற்கு கீழ்க்கூரை (சீலிங்) அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறம் 10x10 சதுர அடி அளவிலான மின்பிறப்பாக்கி அறையொன்று காற்றோட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அந்த அறை இரும்பு கிறில் இடப்பட்டு மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)
- நீரை சேமித்து வைப்பதற்கு 1000 லீற்றர் கொள்ளளவுடைய நீர்த்தாங்கியொன்று இருத்தல் வேண்டும்.
- பின்புறக் கதவு மற்றும் ஜன்னல்களுக்கு பாதுகாப்பு கிறில் இடப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள், கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி மற்றும் இணக்கச் சான்றிதழ் போன்ற ஆவணங்களின் பிரதிகள் என்பவற்றுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பத்தேகம/ ஊரகஸ்மங்ஹந்திய / கராப்பிட்டிய / அங்குணகொலபெலஸ்ஸ கிளைகளுக்கான பொருத்தமான கட்டடம்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**உதவிப் பொது முகாமையாளர்,**
**இலங்கை வங்கி,**
**தென் மாகாண அலுவலகம்,**
**இல. 11, குமாரதுங்க மாவத்தை,**
**மாத்தறை.**

**தொலைபேசி: 041-2232238**
**தொலைநகல்: 041-2234880**
**மின்னஞ்சல்: bocsp@boc.lk**

நிதி அமைச்சு

# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

## வளிச்சீராக்கி அமைப்பைப் பராமரித்தல்

கொழும்பு-02, சேர் சிற்றம்பலளம் ஏ கார்டினர் மாவத்தையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமையகத்தில் மத்திய வளிச்சீராக்கி அமைப்பு மற்றும் நவம் மாவத்த அலுவலகத்தின் வளிச்சீராக்கி அமைப்பு பராமரித்தல் சார்பாக 2023ஆம் ஆண்டிற்காக அது பற்றி அனுபவம் மற்றும் நிபுணத்துவம் கொண்ட இலங்கைக்குள், வர்த்தக நடவடிக்கைகளை நடத்திச் செல்கின்ற நிறுவனங்களில் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) இன் கீழ் மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்தம் வழங்குவதற்காக தகைமை பெறுவதற்கு வெற்றிகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாது இருப்பதுடன், கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| **பெறுகையின் பெயர்** | தலைமையகத்தின் மத்திய வளிச்சீராக்கி அமைப்பை பராமரித்தல் | நவம் மாவத்த அலுவலகத்தின் வளிச்சீராக்கி அமைப்பை பராமரித்தல் |
|---|---|---|
| **பெறுகை இலக்கம்** | IR/PAM/2/05B/AC/2023 | IR/PAM/2/04F/2023 |
| **கேள்விதாரரின் அடிப்படைத் தகைமைகள்** | i. இலங்கைக்குள் செல்லுபடியாகும் வியாபார பதிவுச் சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.<br>ii. ICTAD/CIDA நிறுவனத்தின் EM5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல். (பதிவு 2024.01.31 வரை செல்லுபடி இருத்தல் வேண்டும்)<br>iii. குறித்த துறையில் குறைந்தபட்சம் 03 வருட அனுபவமுடைய பராமரிப்பு ஊழியர் குழாம் இருத்தல்.<br>iv. அரச திணைக்களம்/ நிறுவனம் அல்லது சிறந்த நம்பகமாக தனியார் துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மத்திய வளிச்சீராக்கி அமைப்பை பராமரித்தல் சம்பந்தமாக 05 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் | i. இலங்கைக்குள் செல்லுபடியாகும் வியாபார பதிவுச் சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.<br>ii. ICTAD/CIDA நிறுவனத்தில் EM5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல். (பதிவு 2024.01.31 வரை செல்லுபடி இருத்தல் வேண்டும்.<br>iii. குறித்த துறையில் குறைந்தபட்சம் 03 வருட அனுபவம் இருத்தல் |
| **ஒப்பந்தத்தின் கால எல்லை** | 2023.09.01 முதல் 2025.08.31 | 2023.11.01 முதல் 2025.10.31 |
| **கேள்விகள் திறக்கப்படும் நேரம்** | 2023.09.01 பி.ப. 2.00 | 2023.09.01 பி.ப. 2.30 |

ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் காசாளரிடம் மீளளிக்கப்படாத ரூ. 2000/- வீதமான கட்டணத்தை, காசாக செலுத்திய பின்னர் கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 15ஆம் மாடியில் பெறுகை மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவிற்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்று நகல் பிரதிகளுடன் 2023.08.10 முதல் 2023.08.31 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம் கொடுப்பனவுகள் காசாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

04. பொறியிடப்பட்ட கேள்விகள் 2023.09.01 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின், 15ஆம் மாடியில், பெறுகை மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவில், பாரிய பெறுகைக் குழவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அம்முகவரியின் 15ஆம் மாடியில், பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவில் உள்ள கேள்வி (டென்டர்) பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் சமர்ப்பிக்கப்படும் கேள்வியுடன் சம்பந்தப்படுமாறு 'உள்நாட்டு இறைவரி தலைமையக கட்டிடத்தின் மத்திய வளிச்சீராக்கி அமைப்பு பராமரித்தல்' அல்லது நவம் மாவத்த அலுவலக கட்டிடத்தின் வளிச்சீராக்கி அமைப்பு பராமரித்தல்' என்று குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் நிராகரிக்கப்படும்.

05. கேள்விகள் ஏற்கப்படும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் திறக்கப்படுவதுடன், கேள்விதாரருக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அக்கேள்வி திறக்கப்படும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதி உண்டு.

06. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் 2024.01.01 வரை செல்லுபடியாவதுடன் நிறுவனம் சார்பாக கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு சட்டரீதியிலான அதிகாரம் கொண்ட நபர்களால் கையொப்பம் இடப்பட்ட கேள்விப் பிணைமுறியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. மேலதிக விபரங்கள், தேவையெனில் தொ.பே.இல. 0112135460, 0112135461 மூலம் பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவ பிரிவில் சிரேஷ்ட ஆணையாளர், இடம் விசாரித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பாரிய அளவிலான பெறுகைக் குழு,**
**உள்நாட்டு இறைவரித்திணைக்களம்**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த**
**கொழும்பு-02**
**2023.08.09**

NLB

# தேசிய லொத்தர் சபை

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய லொத்தர் சபைக்காக மொத்த லொத்தர் சீட்டுகளை எடுத்துச் செல்வதற்கான 650 பைகள் மற்றும் 22 பீங்கான் பாத்திரங்களை (Dinner set) கொள்வனவு செய்வதற்கான பெறுகை

தேசிய லொத்தர் சபைக்காக கனிஷ்ட பெறுகைக் குழு தலைவரினால் தேசிய லொத்தர் சபைக்கு கீழ் குறிப்பிடப்படும் உருப்படிகளை வழங்குவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02.

| உருப்படி | விலைமனு இலக்கம் | அளவு | விலைமனு பிணை பெறுமதி (ரூபா) | விலைமனு ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) (வெட் உடன்) (ரூபா) |
|---|---|---|---|---|
| மொத்த லொத்தர் சீட்டுகளை எடுத்துச் செல்வதற்கான பைகள் | NLB/PRC/17/Courier Bag/123/2022 | 650 | 25,000.00 | 1,000.00 |
| பீங்கான் பாத்திரங்கள் (Dinner set) | NLB/PRC/20/DIN/SET/122/2022 | 22 | 25,000.00 | 1,000.00 |

03. தேசிய போட்டி ரீதியான விலைமனு கோரலுக்கான நடைமுறை மூலம் இந்த விலைக்கேட்பு நடத்தப்படும்.
04. ஆர்வம் காட்டுகின்ற தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை கொழும்பு 01, தேசமான்ய என். டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இலக்கம் 32 இல் அமைந்துள்ள தேசிய லொத்தர் சபையின் 01 ஆவது மாடியில் பெறுகை பிரிவில், உதவிப் பொது முகாமையாளர் (பெறுகை) மூலம் (தொலைபேசி - 0114607020/ 0114607021) பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்து எந்த ஒரு வேலை நாட்களிலும் கீழ் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் 2023.08.10 ஆம் திகதி தொடக்கம் 2023.08.31 ஆம் திகதி வரை 09.00 மணி மற்றும் 15.00 மணிக்கு இடையிலான நேரத்தில் விலைமனு ஆவணத்தை இலவசமாக பரீட்சிக்க முடியும்.
05. மேலுள்ள இலக்கம் 02 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி மற்றும் கீழுள்ள முகவரிக்கு வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட தாளில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து 2023.08.10 ஆம் திகதி தொடக்கம் 2023.08.31 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணிக்கு இடையிலான காலத்தில் இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவண தொகுதியை கொள்வனவு செய்ய முடியும்.
06. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023.09.01 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுற்ற உடன், வருகை தந்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில், கிடைக்கப்பெற்றிருக்கும் விலைமனுக்களை, கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இலக்கம் 32, தேசிய லொத்தர் சபையின் 6ஆவது மாடியில் திறக்கப்படும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் திறக்கப்படாது நிராகரிக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலேயுள்ள 2 இன் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்காக, இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் மாத்திரம் வழங்கப்பட்டதும் கொழும்பு-01, தேசமான்ய, N.W.J. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபையின் தலைவரை பயனாளியாக கருதப்பட்ட விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் தன்மையானது 2023.09.01ஆம் திகதியிலிருந்து 2023.11.29ஆம் திகதி வரையுமாகவிருத்தல் வேண்டும்.
07. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவிலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் - (உருப்படியின் பெயர்) விலைமனு மற்றும் விலைமனு இலக்கத்தை குறிப்பிட்டு நிறுவனத்தின் முத்திரையை இட்டு அனுப்ப வேண்டும்.
08. மொத்த லொத்தர் சீட்டுகளை எடுத்துச் செல்வதற்கான 650 பைகளை கொள்வனவு செய்யும் பெறுகை தொடர்பில் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஒன்று 2023.08.24 ஆம் திகதி 10.00 மணிக்கு கொழும்பு 01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, இலக்கம் 32இல் அமைந்துள்ள தேசிய லொத்தர் சபையில் இடம்பெறும்.

**தலைவர்**
**கனிஷ்ட பெறுகை குழு**
**தேசிய லொத்தர் சபை**
**இலக்கம் 32**
**தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை**
**கொழும்பு 01**

Daily News Classifieds, the Housewives' companion

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## கல்வி அமைச்சு

## தரவு முகாமைத்துவ கிளைக்காக மடிக்கணனிகளின் பெறுகை

(வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்)

**Contract No.: ED/07/101/03/2023/AS-05**

1. கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் விதித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரவு முகாமைத்துவ கிளைக்காக மடிக்கணனிகளின் பெறுகைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ளன. ஏற்றுக் கொள்ளும் கடிதம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஒப்படைத்தல் கால எல்லையானது 12 வாரங்களாகும். விலைமனுதாரர்கள் மொத்த பொதிக்காக விலைமனுக்கோரல்களை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல. | அம்சத்தின் விளக்கம் | அம்சங்களின் எண்ணிக்கை | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|
| 1. | மடிக்கணனிகள் (i5) | 263 | 1,000,000.00 |

விலைமனுதாரர் விலைமனுவுடன் விலைமனுப்பிணைகளை வழங்கல் வேண்டும்.

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கல்வி அமைச்சின் 'இசுறுபாய', 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2785573 அல்லது 0112785141-50 நீடிப்பு 1530) 2023 செப்டம்பர் 04 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. மேலேயுள்ள பெறுகைக்கான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2023 ஓகஸ்ட. 17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கல்வி அமைச்சின் 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் நடைபெறும்.
5. 2023 செப்டம்பர் 04 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 20,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கிலமொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பெறுகை பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்)
6. 2023 செப்டம்பர் 05 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராகக்கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, 'இசுறுபாய', கல்வி அமைச்சு, 5 ஆம் மாடி, பெறுகைப் பிரிவில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்களை மூடிய பின்னர், மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஆகியன அடக்கப்பட்டுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Procurement of Laptops for Data Management Branch,"** மற்றும் **ED/07/101/03/2023/AS-05** என்ற IFB இலக்கமும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**கல்விஅமைச்சு,**
**''இசுருபாய'',**
**பத்தரமுல்ல.**

# இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு அதற்கடுத்த கூட்டிலுள்ள திகதிகள் வரை மீட்கப்படாதுள்ள நகைகள் அட்டவணையின் இறுதிக் கூட்டில் உள்ள திகதியில் அதே கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (ஏலங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.)

**அடகு நகைகளின் விபரங்கள்**

| கிளையின் பெயர் | நகைகள் அடகு வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி | மீட்பதற்கான இறுதித் திகதி | ஏல விற்பனைத் திகதியும் இடமும் |
|---|---|---|---|
| 52 | MF1467 | தண்டுவன்கல வத்த | 148.66 |
| 53 | BF0163 | தெல்கொட | 147.16 |
| 54 | MF1478 | செனோரா | 146.37 |
| 55 | MF0481 | எக்பர்த் | 146.36 |
| 56 | MF0659 | ரைய் | 145.76 |
| 57 | MF1480 | நிவ் ஹோப்வெல் | 144.73 |
| 58 | MF0168 | எந்தொன | 144.45 |
| 59 | MF0210 | ஹவுட்டன் | 144.13 |
| 60 | MF1531 | இஹல பனாபிட்டிய | 143.59 |
| 61 | MF0624 | விக்கிலிய | 143.19 |
| 62 | MF0104 | வெல்அந்துர | 142.89 |
| 63 | MF0263 | வேவத்த | 142.51 |
| 64 | MF1458 | செரோன் | 142.06 |
| 65 | MF1075 | கடிகல்ஹேன | 141.25 |
| 66 | MF1284 | நிவ் பனாவென்ன | 139.11 |
| 67 | MF1466 | டீ லங்கா | 139.04 |
| 68 | MF0369 | மாரதென்ன | 138.84 |
| 69 | MF1601 | புலு ஹில்ஸ் | 138.16 |
| 70 | MF0083 | ரில்ஹேன | 138.03 |
| 71 | MF1496 | கோ-ப்-டீ | 137.81 |
| 72 | MF0103 | ஓபாத்த | 137.75 |
| 73 | MF0594 | பொஸ்கொம்பி | 137.65 |
| 74 | MF0801 | ஹபுகஸ்தென்ன | 137.65 |
| 75 | MF1453 | கலவான | 136.87 |
| 76 | MF1495 | நில்வின் வீவ் | 135.88 |
| 77 | MF1397 | ஃபர்ன்டேல் | 134.89 |
| 78 | MF0108 | போரோனுவ | 134.61 |
| 79 | MF0258 | பலாங்கொட டீ சக்தி | 134.05 |
| 80 | MF0625 | நிவ் இராஸ்ஸகல | 133.63 |
| 81 | MF0367 | சிசில்டன் | 133.34 |
| 82 | MF0262 | ஹப்பர் பலாங்கொட | 132.99 |
| 83 | MF0449 | எனன் | 132.17 |
| 84 | MF0200 | பெட்டியாகல | 132.13 |
| 85 | BF0150 | ஷர்வுட் | 131.61 |
| 86 | MF0107 | நீலாகம | 118.15 |
| 87 | MF1554 | தண்டுவன்கல CTC | 104.90 |

**பச்சை தேயிலை இலை வழங்குனர்கள் யாரேனும் தனது பச்சை தேயிலை இலை வழங்கியதற்கு உரிய பணம் கிடைக்கவில்லை எனில் தயவு செய்து உதவி தேயிலை ஆணையரிடம் அல்லது முடிந்தவரை என்னிடம் முறையீடு செய்யவும்.**

**பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், விசாகா மாவத்தை, புதிய பதுளை வீதி, பண்டாரவளை.
தொலைபேசி / தொலைநகல் - 057-2222812

**கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-140, அம்பகமுவ வீதி, கம்பளை.
தொலைபேசி / தொலைநகல் - 081-2352279

**இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-61/1, புதிய நகரம், இரத்தினபுரி.
தொலைபேசி / தொலைநகல் - 045-2222136

**மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-23, அளுத் மாவத்தை, உயன்வத்த, மாத்தறை.
தொலைபேசி / தொலைநகல் - 041-2222636

**காலி மாவட்டம் (எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு தவிர)**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், வலஹன்துவ வத்த, வலஹன்துவ, காலி.
தொலைபேசி / தொலைநகல் - 091-2232052

**களுத்துறை மற்றும் காலி மாவட்டம் (எல்பிட்டிய பிரதேசத்திற்கான செயலாளர் பிரிவு)**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், வதுரான வீதி, பதுரலிய.
தொலைபேசி / தொலைநகல் - 034-2247444

**நுவரெலியா மாவட்டம்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல-10, நானுஓயா வீதி, கெலேகால, நுவரெலியா.
தொலைபேசி - 052-2234695
தொலைநகல் - 052-2234686

**தேயிலை ஆணையாளர்**
**இலங்கைத் தேயிலைச் சபை**
**இல. 574, காலி வீதி, கொழும்பு 03.**

- பதிவு செய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்கள் - தயவுசெய்து தேயிலை தயாரிக்க முதிர்ச்சியடையாத மற்றும் சேதமடையாத பச்சை தேயிலை இலைகளை கொள்வனவு செய்யவும்.
- தேயிலை வைத்திருப்பவர்கள், பச்சை இலை விற்பனையாளர்கள் - முதிர்ச்சியடையாத மற்றும் சேதமடையாத பச்சை தேயிலை இலைகளை தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில் எச்சரிக்கையாக இருங்கள்.
- சிறியளவிலான தேயிலை உற்பத்தியாளர்கள் - பச்சை தேயிலை இலைகளை உடனடி பணத்திற்கு வழங்குவதைத் தவிர்க்கவும், அப்படியெனின் நீங்கள் ஒரு பாரிய இழப்பை சந்திக்க நேரிடும்.

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

## ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை வலுவூட்டல் செயற்றிட்டம்.

## நிதியிடல் - உலக வங்கி

1. 01 ஆம் அட்டவணையிலுள்ள வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

**அட்டவணை - 01**

| தொ. இல. | ஆளடையாளம் காணல் இல. | விளக்கம் | விலைமனுதாரருக்குரிய தேவைப்படும் தரம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) | பொறியியலாளரின் மதிப்பீடு (மில். ரூபாவில்) | பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலப்பகுதி (நாட்காட்டி நாட்கள்) | பிராந்தியம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | EP/PDHS(21)/PSSP/ENG/BT/2023-07 | வாழைச்சேனை BH இல் பூர்த்தி செய்யப்படாத வடிகால் முறைமையை பூர்த்தி செய்து தொடர்ந்தும் மேற்கொள்ளல் (சிவில் வேலைகள்) | சி7 இற்கு மேற்பட்டது | 80,000.00 | 7.60 | 30 | மட்டக்களப்பு |
| 02. | EP/PDHS(21)/PSSP/ENG/BT/2023-08 | களுவாஞ்சிக்குடி BH இல் வடிகால் முறைமையை தாபித்தல் (சிவில் வேலைகள்) | சி7 இற்கு மேற்பட்டது | 250,000.00 | 24.60 | 60 | மட்டக்களப்பு |
| 03. | EP/PDHS(21)/PSSP/ENG/BT/2023-09 | வாழைச்சேனை BH இல் வடிகால் முறைமையை மேம்படுத்தல் (Insulation & Mechanical Equipment) | சி7 இற்கு மேற்பட்டது | 80,000.00 | 7.60 | 30 | மட்டக்களப்பு |
| 04. | EP/PDHS(21)/PSSP/ENG/BT/2023-10 | களுவாஞ்சிக்குடி BH இல் வடிகால் முறைமையை மேம்படுத்தல் (சிவில் வேலைகள்) | சி7 இற்கு மேற்பட்டது | 80,000.00 | 7.60 | 30 | மட்டக்களப்பு |
| 05. | EP/PDHS(21)/PSSP/ENG/AM/2023-08 | நாமல்ஓயவின் PMCU இன் புதுப்பித்தல் | சி7 இற்கு மேற்பட்டது | 84,000.00 | 8.40 | 45 | அம்பாறை |
| 06. | EP/PDHS(21)/PSSP/ENG/AM/2023-09 | Renovation of L/1/3 MO Quarters and MO Dormetry at BH Dehiattakandiya | சி7 இற்கு மேற்பட்டது | 93,000.00 | 9.30 | 45 | அம்பாறை |
| 07. | EP/PDHS(21)/PSSP/ENG/TR/2023-06 | Tile work and 1st floor additional fittings works, Price variation at OPD & HLC building at DH Thampalagamam (Final stage) | சி7 இற்கு மேற்பட்டது | 125,000.00 | 12.40 | 45 | திருகோணமலை |
| 08. | EP/PDHS(21)/PSSP/ENG/BT/2023-11 | திராய்மடு RMSD கட்டிட நிருவாக அலகை பூர்த்தி செய்தல் | சி7 இற்கு மேற்பட்டது | 85,000.00 | 8.45 | 45 | மட்டக்களப்பு |
| 09. | EP/PDHS(21)/PSSP/ENG/AM/2023-10 | லுஹுகல பிரதேச தற்போதுள்ள MOH கட்டிட புதுப்பித்தல் | சி7 இற்கு மேற்பட்டது | 81,000.00 | 8.02 | 45 | அம்பாறை |
| 10. | EP/PDHS(21)/PSSP/ENG/AM/2023-11 | தெஹியத்தகண்டிய BH இல் சத்திரசிகிச்சை, கழிப்பறை மற்றும் நோயாளிகளுக்கான அமர்ந்திருக்கும் இடப்பரப்பு ஆகியவற்றின் நிருமாணம் | சி7 இற்கு மேற்பட்டது | 63,000.00 | 6.30 | 45 | அம்பாறை |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) 50 மில். ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமையானது 04/2016(iv) என்ற இலக்கத்தையுடைய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் ICTAD (தற்போது CIDA) இன் 1 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிட நிருமாணத்தின் தேவைப்படும் தரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வரும் தகவுத்திறனை கொண்டிருத்தல் வேண்டும்.
   அ) கடந்த மூன்று வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிருமாண வேலையின் வருடாந்த சராசரிப் பெறுமதியானது ஆகக் குறைந்தது கேள்வியிடக்கூடிய தொகையின் 70% ஆகவிருத்தல் வேண்டும் (சான்று பகரும் ஆவணங்களாக ஆகக் குறைந்தது 3 வருடங்களுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட மீதி அறிக்கையானது இணைக்கப்படல் வேண்டும்)
   ஆ) ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகளின் தேறிய ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகள் மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள எந்தவொரு முற்பணக்கொடுப்பனவுகள் நீங்கலானது கேள்வியிடக்கூடிய தொகையின் 30% இற்கு குறைவாகவிருத்தல் ஆகாது. விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு முன்னராக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட சான்று பகரும் ஆவணமானது தொழில் வழங்குநருக்கு நேரடியாக முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
   இ) பணிநிலை அலுவலர்கள் 01 எண்ணிக்கையான NDT (சிவில்) தகைமையையுடைய தொழில்நுட்ப அலுவலராக அல்லது நிகரான 3 வருட அனுபவத்தையுடைய அல்லது 5 வருட அனுபவத்தையுடைய NCT அலுவலராகவிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பெற்று வேலை நாட்களில் பி.ப. 3 மணி வரையும் திருகோணமலை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2023.08.09 ஆம் திகதியிலிருந்து 2023.08.31 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் பி.ப. 3 மணி வரையும் 6,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், திருகோணமலை, நீதிமன்ற வீதி, 120 ஆம் இலக்கத்திலுள்ள மாகாண சுகாதார சேவைகள் (கிமா) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரரினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து (2023.08.31) 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. 2023.11.28 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் 01 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தொகைக்குமாக கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது ‘‘நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதமாகவும்’’ இருப்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியிலும் அமைந்திருத்தல் வேண்டும்.
9. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர், பெறுகைக் குழு என முகவரியிடப்பட்டு இரு பிரதிகளில் திருகோணமலை, நீதிமன்ற வீதி, 120 ஆம் இலக்கத்திலுள்ள கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
10. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2023.09.01 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணியாகுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடியவுடன் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
11. விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளை சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
12. திருகோணமலை கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் 2023.08.24 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடத்தப்படும்.
13. விலைமனுக்கோரல் ஆவணத்தின் தகைமை தகவலின் 2 ஆம் உருமாதிரியில் ஒவ்வொரு விலைமனுதாரரும் அவர்களின் தற்போதய வேலைப் பாரத்தை பிரகடனப்படுத்தல் கட்டாயமானதாகும்.
14. கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் திருப்தியற்ற செயற்பாட்டை மேற்கொண்ட அல்லது பிழையான தகவலை சமர்ப்பித்த விலைமனுதாரர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு செயற்பாட்டின் போது நிராகரிக்கப்படுவார்கள்.
15. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும். திணைக்கள பெறுகைக் குழுவானது அதனது சொந்த தீர்மானத்தின் பெயரில் எந்தவொரு தனியான அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

**மருத்துவ கலாநிதி**
**D.G.M. கொஸ்தா,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம், திருகோணமலை.**
08.08.2023.

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## ISUZU (EURO IV) வகை Road Sweeper இயந்திரத்திற்கும் தேவையான பிரஷ் கொள்வனவு செய்தல்

**கேள்வி இல :- PRDA/WP/PRO/2023/15R**

இவ் அதிகார சபையின் கீழேயுள்ள கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும், அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| S/NO | Description of Road Sweeper Machine | Unit | Qty | Bid Bond | |
|---|---|---|---|---|---|
| | | | | Cash (Rs) | Bank/ Insurance Bond (Rs.) |
| 1 | Model - Isuzu (EURO IV) | Nos | 10 பிரஷ் தொகுதிகள் | 15,000.00 | 30,000.00 |
| 2 | Chassis No - JAAMP 75H87103951 | | | | |
| 2 | Brush Machine | | | | |
| | (a) Make - SCMWAZE | | | | |
| | (b) Model - A 4000 | | | | |
| 3 | Brush Size | | | | |
| | (a) Inner Diameter - 19” | | | | |
| | (b) Outer Diameter - 29” | | | | |
| | (c) Segment - 04 | | | | |
| 4 | Brush Type - Steel | | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.08.10 முதல் 2023.08.24 ம் திகதிகளில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை கேள்விப் படிவக் கட்டணம் ரூ. 1,150.00 இற்கு உட்பட்டு, இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணை தொகையை பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் 2023.08.25 பி.ப. 2.30 இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இல. 59, செபஸ்தியன் மேடு, கொழும்பு-12.**
**தொ.பே. இலக்கம் :- 011-4849825, 011-4849845**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# அறிவித்தல்

## கேள்விக்கான அழைப்பு

## இலங்கை மின்சார (தனியார்) கம்பனி

**கேள்வியின் பெயர் : சுத்திகரிப்புச் சேவை பெறுகை**

**கேள்வி இலக்கம் : LECO/NU/ADM/112/2023**

இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் நுகேகொட கிளை அலுவலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 2023/ 2025ம் ஆண்டிற்காக சுத்திகரிப்பு சேவை பெறுகைக்காக தகைமையுடைய மற்றும் தகுதிகொண்ட கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| சேவை நிலையம் | முகவரி | ஊழியர் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | பெண் | ஆண் |
| கிளை, அலுவலகம், நுகேகொடை. | இல. 204, ஹைலெவல் வீதி, நுகேகொடை | 02 | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (நுகேகொட) | இல. 115, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொடை | - | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (மஹரகம) | இல. 48/7, நீலம்மஹர வீதி, கொடிகமுவ, மஹரகம. | - | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (பொரலஸ்கமுவ) | இல. 61, மஹரகம வீதி, பொரலஸ்கமுவ. | - | 01 |

01. உத்தேச சேவைக்காலம் கேள்வி வழங்கப்பட்ட தினம் முதல் ஒரு வருடமாகும்.
02. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) மூலம் கேள்விகள் மேற்கொள்ளப்படும்.
03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களுக்கு நுகேகொடை, ஹைலெவல் வீதி, இல. 204இன் அமைந்துள்ள நுகேகொட கிளை அலுவலகத்தின், மனிதவள மற்றும் நிர்வாக அதிகாரியிடம் இன்றைய தினம் முதல் 07 நாட்களுக்குள் அலுவலக நாட்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 4.30 இற்கிடையில்) கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. மீளளிக்கப்படாத ரூ. 1,000.00 கட்டணத்தை செலுத்திய பின்னர் கேள்வி ஆவணச் தொகுதியொன்றை நுகேகொட கிளை அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம். குறித்த கொடுப்பனவுகளை நுகேகொட கிளை அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்கு காசாக மேற்கொள்ளல் வேண்டும்.
05. கேள்விகள் 2023.08.23 பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கிளை அலுவலகத்திற்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் அல்லது பெக்ஸ் மூலம் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
06. கேள்விகோரல் 2023.08.23 பி.ப. 3.00 இற்கு கிளை அலுவலகத்தில் பெறுகைக் குழுவின் மூலம் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் நேரடியாக சமுகமளிக்க வாய்ப்பு உண்டு.
07. கேள்விகளை ஒப்படைப்பதற்காக குறித்த இறுதித் திகதியில் இருந்து 60 நாட்களுக்குள் கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை மின்சார (தனியார்) கம்பனி**
**(கிளை அலுவலகம், நுகேகொடை)**
**இல. 204, ஹைலெவல் வீதி,**
**நுகேகொடை.**
**011-2856380/ 011-2813509**

Sunday Observer ADZ
தினகரன்
Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)
Any Single Newspaper: ரூ. 800/- (Except Thinakaran Varamanjari)
Two Newspapers: ரூ. 1,000/- (Except Thinakaran Varamanjari)
Three Newspapers: ரூ. 1,330/-
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# இறுதி அறிவித்தல்

## சீத்தாவக்கபுர நகர சபையின் வைப்புத் தொகையை விடுவித்தல்

2020.12.31ம் திகதிக்கு முன்பு உங்களால் சீத்தாவக்கபுர நகர சபையில் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மீளளிக்கப்படும் வைப்புத் தொகையாக வைப்புச் செய்து இதுவரை மேற்படி பணத்தை மீள பெற்றுக்கொள்ளவில்லையெனில் மேற்படி பணத்தை வைப்புச் செய்து பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை 2023.09.15ம் திகதிக்கு முன்பு அலுவலக நேரங்களில் சீதாவக்கபுர நகர சபைக்கு சமர்ப்பித்து குறித்த பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கிறேன். உங்களால் வைப்புச் செய்யப்பட்டுள்ள சகல தொகைகளும், அத்தினத்திற்கு முன்பு மீளப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் தவரின் மீண்டும் எந்த அறிவித்தலும் இன்றி அத் தொகை சபையின் பொது நிதிக்கு வைப்புச் செய்து கணக்கை முடிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

**கே.ஏ. சந்தன பத்மசிரி**
**செயலாளர் மற்றும் சீத்தாவக்கபுர நகர சபையின் அதிகாரம், செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**சீத்தாவக்கபுர நகர சபை**
**அவிசாவளை.**
**2023.08.08**

### பொது அறிவித்தல்

கம்பனியொன்றிடனொன்று இணைக்கப்படுவதற்கான 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்.

நிறுவனத்தின் பெயர்:
**ரெண்ட்ஸ் (பிறைவட்) லிமிட்டட்**

இணைப்பு : **PV 00275158**

**கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி இல:**
249/1, மாலபே வீதி, தலங்கம வடக்கு, கொஸ்வத்தை, பத்தரமுல்ல.

**செனவிரத்ன ரன்ஹோட்டி கமகே ஜகத் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் தலைவர்**

### பொது அறிவித்தல்

கம்பனியொன்றிடனொன்று இணைக்கப்படுவதற்கான 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்.

நிறுவனத்தின் பெயர்:
**கோல்டு ரஷ் (பிறைவட்) லிமிடெட்**

இணைப்பு : **PV 00275205**

**கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி இல:**
249/1, மாலபே வீதி, தலங்கம வடக்கு, கொஸ்வத்தை, பத்தரமுல்ல.

**செனவிரத்ன ரன்ஹோட்டி கமகே ஜகத் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் தலைவர்**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

# பெறுகை அறிவித்தல்

## கல்கமுவ பிரதேச சபை

- கல்கமுவ பிரதேச சபை அதிகாரம் பிரதேசத்திற்கு சொந்தமான இஹல திகன சமூக நீர் வழங்கல் திட்டத்தின் நீர்க்குழாய் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
- கல்கமுவ பிரதேச சபையின் திண்மக் கழிவுப் பொருள் நிலையத்திற்கு 'பேல்' இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல்**
2023.08.10 முதல் 2023.08.24 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கல்கமுவ பிரதேச சபை தலைமையகத்தில் மீளளிக்கப்படாத ரூ. 2000.00 பெறுகைக் கட்டணத்தைச் செலுத்தி கேள்விப்பத்திரங்கள் மற்றும் பிரதான மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்விகளைப் பெற்றுக் கொள்ளல்**
2023.08.25 மு.ப. 10.00 வரை பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை கல்கமுவ பிரதேச சபை தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள, கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது செயலாளர், பிரதேச சபை, கல்கமுவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அன்று மு.ப. 11.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் பெறுகை விண்ணப்பதாரிக்கு அல்லது அவரது எழுத்துமூல அனுதி பெற்ற பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். வார நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.15 வரை 037-2254081 என்ற தொலைபேசி இலக்கத்தில் மேலதிக விபரங்களை உங்களுக்கு பெற்றுக் கொள்ளலாம்.

**ஏ.பீ. நிமல் ரத்னாயக்க**
**செயலாளர்,**
**பிரதேச சபை, கல்கமுவ.**

# அரச சேவை பரஸ்பர சகாய நிதிச் சங்கம்

## 139 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

கொழும்பு 07, ரோயல் கல்லூரி,
"நவரங்ஹல" வில்
2023 ஓகஸ்ட் 19 சனிக்கிழமை
மு.ப.8.45 ஆரம்பமாகும்.
அரச சேவை பரஸ்பர சகாய நிதிச்சங்கத்தின் 139 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு வருகைதருமாறு எல்லா அங்கத்தவர்களையும் முகாமைத்துவ குழு அன்போடு அழைக்கின்றது.

**அ.சே.ப.ச.ச.அலுவலகம்**
**இல - 155/5, காசல் வீதி,**
**கொழும்பு - 08**
**தொ.பே - 011-2665228.**

**M.அசோக பீரிஸ்**
**இணைச்செயலாளர் மற்றும் பொருளாளர்**
**08.08.2023**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## இலங்கை அரசாங்கம்
## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு
## நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்

கடன் இல. Cr. 5685-lk & 9255-lk

# விலைக்கோரல் அறிவித்தல்

1. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவரகத்திடமிருந்து நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒரு பகுதியை பின்வரும் ஒப்பந்தங்களுக்கு கொடுப்பனவாகச் செய்யவுள்ளது.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணை முறி | தகைமை தேவைப்பாடுகள் | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| **செயற்றிட்டப் பெறுகைக் குழு (மேல்நிலை)** | | | | | |
| **வேலைக் கேள்விகள்** | | | | | |
| முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி நகர நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணம் ஒப்பந்த இல. MWS&EID/WaSSIP/Mullativu/ Urban / NCB/Mallavi WSS/AF/2023/01 | ரூபா 100,000/- | ரூபா 33,000,000/- | CS1 அல்லது CS2 தரத்தில் CIDA நிறுவனத்தின் கட்டிட நிர்மாணத் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜுபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 செப்டெம்பர் 20ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |

3. செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.
4. சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்பாட்டு செயற்றிட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படுமிடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்விகளை பின்வரும் முகவரிக்கு ஒன்றில் நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அல்லது தூதஞ்சல் மூலம் அனுப்பலாம்.

   **பெறுகைப் பணிப்பாளரின் அலுவலகம்,**
   **நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு,**
   **இல. 35, ''லக்திவ மெதுர",**
   **புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த,**
   **பத்தரமுல்ல, இலங்கை.**

7. சகல கேள்விகளும் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்.**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்.**
**சமூக நீர் திட்டங்களின் சிக்கல்களுக்கு 1914 எனும் எண்ணைத் தொடர்புகொள்ளவும்.**

# விலை மனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனுகோரல் முடிவு திகதி | விலை மனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/101** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (சாய்ந்தமருது மின் பாவனையாளர் சேவை நிலையம்)- கல்முனை (இரண்டு வருட காலம்) | 23-08-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம், கல்முனை 067-2229276 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,திருகோணமலை 026-2222666 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/102** வாடகைக்கு 4WD டபிள் கப் மின் அத்தியட்சகர் - III (விநியோக பராமரிப்புபிரிவு) - திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 23-08-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்து மூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

வளமான வாழ்விற்கு மின்சாரம்

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## Printing of Shared Care Clinical Record (Health-1314)

## தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

### சுகாதார அமைச்சு

தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்சித்திட்டத்தினால் திட்டமிட்டவாறு **Shared Care Clinical Record (Health-1314)** என்பதை அச்சிடுவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்சித்திட்ட பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | விளக்கம் | அளவு | மீளளிக்கப்படும் விலைமனுப் பிணை (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| NCCP/GOSL/ PC/27/2023 | Printing Shared Care Clinical Record (Health-1314) | 8,750 books | 14,000.00 | 1,000.00 |

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
2. ஆர்வமும் தகுதியுமுடைய விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்று 2023.08.10 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து 2023.08.29 ஆம் திகதியன்று வரையும் அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
3. 2023.08.10 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து 2023.08.29 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 இலங்கை ரூபாவை மாத்திரம் (1,000 இ.ரூபா) செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட அலுவலகத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். ரொக்கப் பணத்தை பெற்றுக் கொண்டவுடன் உரித்தான பணப்பற்றுச்சீட்டு வழங்கப்படும்.
4. விலைமனுக்கள் 2023.08.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக மு.ப. 10 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2023.08.31 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்களுக்கான இந்த அழைத்தலின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்த அனைத்து விலைமனுதாரர்களும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்களை திறக்கும் வேளையில் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றனர்.
5. இந்த பெறுகையான **Shared Care Clinical Record (Health-1314)** அச்சிடுவதற்கு விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் பொறுப்பேற்கமாட்டார்.

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்,**
**555/5, பொதுச் சுகாதார கட்டிடத்தொகுதி,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05.**

**தொலைபேசி : 011-2368627**
**தொலைநகல் : 011-2368627**
**மின்னஞ்சல் : nccpmohsl@gmail.com**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## Supply and delivery of pre-cured Tread Liners, Bonding Gum, Gum Solvent (S.B.P.) and related materials to SLTB Ampara Tyre Factory

**Procurement No.: SMOT/04/11/ATF-SLTB**

1. Pre-cured tread liners, Bonding Gum, Gum solvent (S.B.P.) மற்றும் இவை சார்ந்த பண்டங்கள் ஆகியனவற்றை இபோச அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ள விபரக்குறிப்புக்களுக்கு உறுதிப்படுத்தும் வகையில் வழங்கக்கூடிய தகுதியுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து 2023.09.01ஆம் திகதி பி.ப. 2 மணி வரை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2023.08.10 ஆம் திகதியிலிருந்து 2023.08.31 ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 45,000 ரூபாவைச் செலுத்திய பின்னர் கொழும்பு-05, கிருள பாதை, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் பிரிவு, பிரதான பெறுகை முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| விளக்கம் | விலைமனுப்பிணை |
|---|---|
| Supply and Delivery of Pre-cured tread liners, Bonding Gum, Gum Solvent (S.B.P.) and related materials for SLTB Ampara Tyre Factory, on 30 days credit. | 3 மில்லியன் ரூபா |

2. தேவைப்படும் Pre-cured tread liners, Bonding Gum, மற்றும் ஏனைய தொடர்புள்ள பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கான ISO:9001 தர சான்றிதழைக் கொண்டுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் மாத்திரம் மற்றும் முன்வைக்கப்படும் அம்சங்களை உற்பத்தி செய்யக்கூடிய ISO:9001 தர சான்றிதழைக் கொண்டுள்ள வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்ளூர் முகவர்கள் ஆகியோர் விலைமனுக்களை முன்வைப்பதற்கான தகுதியைப் பெற்றுக் கொள்வர்.
3. கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் 2023.08.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
4. (அ) எந்தவொரு விலைமனுதாரரின் முகவராக, உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரின் சார்பாக செயற்படுவராகவிருப்பின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னராக 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்ட பொது ஒப்பந்தங்களுக்கமைவாக இலங்கை பொது ஒப்பந்தங்களின் பதிவாளருடன் அவ்வாறான நபர் பதிவு செய்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பிப்பதற்கு தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   (ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பித்தவுடனேயும் ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்ள முன்பும் விலைமனுதாரர்கள் தம்மை பதிவு செய்தல் வேண்டும். உரித்தான பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் ஒப்பந்தம் வழங்கப்படமாட்டாது.
5. விலைமனுக்கள் 2023.11.30 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும் முன்வைக்கப்படும் விலைகள் ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 12 மாதங்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2023.12.31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கானதுமான விலைமனுப்பிணையொன்றுடனும் மத்திய வங்கியினால் அல்லது காப்புறுதி முகவராண்மையினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு பெற்றதும் இபோச இன் முதல் எழுத்து மூலமான விண்ணப்பத்திலேயே திருப்பப்படாததும் நிபந்தனையற்றதுமான உத்தரவாத அடிப்படையில் விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
7. விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது இலட்சினை பொறிக்கப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2023.09.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ''செத்சிரிபாய", 7 ஆம் மாடியின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில்/ தூதஞ்சல் சேவையில் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனு அடக்கப்பட்டுள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Bid for the Supply & delivery of Pre-cured tread liners, Bonding Gum, Gum solvent (S.B.P.) and related materials to SLTB Ampara Tyre Factory" என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.
9. பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ''செத்சிரிபாய", 7 ஆம் மாடியின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7 ஆம் மாடி, "செத்சிரிபாய", II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல,**
**விசாரணைகள் : பிரதான பெறுகை முகாமையாளர், இபோச பெறுகைப் பிரிவு.**
**தொலைபேசி : 011-7706110, 077-1056204.**
**தொலைபேசி/ தொலைநகல் : 011-2588457**

# வெற்றிடங்கள்

## இலங்கை தர நிருனய கட்டளைகள் நிறுவனம் (SLSI)

### தொழில்நுட்பவியல் அமைச்சு

### உதவிப் பணிப்பாளர் பதவி – இடைநிலை முகாமைத்துவ வகுதி (MM 1-1)

## உதவிப் பணிப்பாளர் பதவி (சட்டம் மற்றும் சபைச் செயலாளர்) - 01

**தகைமைகள்:**

**வெளிவாரி**
இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சட்ட இளமாணிப் பட்டம் சகிதமான சட்டத்தரணி

**மேற்கூறப்பட்ட பதவிக்கான அனுபவம்**
பதவிக்கு இயைபாக 03 வருடகால தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**ஏனையவை**
சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜையாகவும், பதவிக்குரித்தான கடமைகளை செவ்வனே நிறைவேற்றத்தக்க உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடியவராவும் சிறந்த நன்னடத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** **இ. ரூபா 53,175.00 - 16 x 1,375.00 - இ. ரூபா 75,175.00**

**வயது** 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

**ஏனைய நன்மைகள்**
1 பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறையை பணமாக்குதல்
2 ஆயுள் காப்புறுதித் திட்டம் மற்றும் மருத்துவ காப்புறுதித் திட்டம்
3 வரையரைக்குட்பட்ட மருத்துவ செலவுகளை திருப்பிச் செலுத்துதல்
4 பொதுத் திறைசேரியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வருடாந்த ஊக்குவிப்புத் தொகை
5 தொழில்சார் சூழல் ஒன்றில் பணி புரியும் வாய்ப்பு
6 தொழில்சார் கொடுப்பனவு
7 தொடர்பாடல் கொடுப்பனவு

சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு உறவினர் அல்லாத நடுநிலையானவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் முழுப்பெயர், வயது, கல்வி தகைமைகள் மற்றும் ஏனைய வேறு தொடர்புடைய விடயங்கள் சகிதமான விண்ணப்பங்களை 2023-08-23ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் **பணிப்பாளர் நாயகம், இலங்கை தர நிருனய கட்டளைகள் நிறுவனம், இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08** என்ற முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அரச துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தர நிருனய கட்டளைகள் நிறுவனம்**
**இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08**

### சுகாதார அமைச்சு

# பற்சிகிச்சை உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. 2023.08.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் கொழும்பு-10, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, 385 ஆம் இலக்கத்திலுள்ள சுகாதார அமைச்சின் பற்சிகிச்சை சேவைகளுக்கான பிரதி பணிப்பாளர் நாயகத்தினால் கீழே குறிப்பிட்டுள்ள பற்சிகிச்சை உபகரணங்களை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.
2.

| | அம்சம் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|
| 1. | 30 Nos. of Dental Chairs and Units | Rs.1,500.00 |
| 2. | 40 Nos. of Light Curing Machines | Rs.1,500.00 |

3. இலங்கையின் சந்தையில் முன்வைக்கப்பட்டுள்ள உபகரணங்களின் உற்பத்தியாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி/ தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள் மாத்திரமே இந்த பெறுகையில் பங்குபற்றுவதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.
4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பூர்த்தி செய்யப்பட்ட இரு (02) தொகுதிகளில் அமைந்திருப்பதுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக பதிவுத் தபாலில் பிரதி பணிப்பாளர் நாயகம் (பற்சிகிச்சை சேவைகள்), அறை இல. 10, சுகாதார அமைச்சு, இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியில் பிரதிபணிப்பாளர் நாயகத்தின் (பற்சிகிச்சை சேவைகள்), அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
5. பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்து 2023.08.10 ஆம் திகதியிலிருந்து 2023.08.24 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் மேலேயுள்ள முகவரியில் சுகாதார அமைச்சின் பற்சிகிச்சை சேவைகளுக்கான பிரதி பணிப்பாளர் நாயகத்திடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படலாம்.

   அ) சுகாதார அமைச்சின் பற்சிகிச்சை சேவைகளுக்கான பிரதி பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்ட எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.

   ஆ) அம்சத்திற்கான விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யப்படுவதற்காக கம்பனிகளின் பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழொன்று.

   இ) சுகாதார அமைச்சின் கணக்காளருக்கு ரொக்கப் பணத்தில் மேலே கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.

   ஈ) வியாபார பதிவுச் சான்றிதழ் (உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதி)

   உ) முகவராண்மையினால் அவர்களின் உள்ளூர் முகவர்களாக உங்கள் கம்பனியை நியமனம் செய்திருப்பதற்கான சான்றிதழொன்று/ கடிதமொன்று.
6. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற முகவர்கள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
7. சுகாதார அமைச்சின் பற்சிகிச்சை சேவைகளின் பிரதி பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
8. சுகாதார அமைச்சின் பற்சிகிச்சை சேவைகளின் பிரதி பணிப்பாளரின் அலுவலகத்தில் 2023.08.17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
9. மேலதிக தகவலை சுகாதார அமைச்சின் பற்சிகிச்சை சேவைகளின் பிரதி பணப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (0112 693180)

**பிரதி பணிப்பாளர் நாயகம் (பற்சிகிச்கை சேவைகள்)**
**சுகாதார அமைச்சு,**
**இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,**
**கொழும்பு-10.**